
# சோதிட மலர்

# SOTHIDA MALAR



| | | | |
|---|---|---|---|
| | சூரி புத சுக் | செவ் குரு | |
| ராகு | சுக்ல ஷு சித்திரை மீ | | சந் |
| | | | கேது |
| சனி நெப் யுரே | லக் | | |

இவ்விதழில்.........


* புத்தாண்டில் உலகப்பலன்கள், உங்கள் இராசிப்பலன்கள்
* எண்சோதிடமும் அதன் உண்மைகளும்
* ஜெனன பத்திரமும், அதன் மகத்துவமும்
* அதிஷ்ட எண்ஞானம்
* சோதிடமும் விஞ்ஞானமும்
* சைவவிரதங்கள்
* சந்தேக நிவிர்த்தி, ஆய்வுமன்றம்


(14-4-89 — 14-5-89) 12-ம் ஆண்டு மலர் விலை ரூபா: 7-00

உ

# சோதிடமலர்
SOTHIDA MALAR

மலர் 12 ❊ இதழ் 1

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

❊

சுக்ல ஸ்ரீ சித்திரை மீ
( 14 - 4 - 89 )

ப்ரபும் ப்ராணநாதம் விபும் விஶ்வநாதம்
ஜகந்நாதநாதம் ஸதாநந்தபாஜம்।
பவத்பவ்யபூதேஶ்வரம் பூதநாதம்
ஶிவம் ஶங்கரம் ஶம்புமீஶாநமீடே॥

பூமலர் மிசைவரு புனித ஞதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்ய பூங்கழல்கள் போற்றுவாம்.

## நல்லவை நான்கு

- தான் செய்த யாகம் பொய்மையாலும், தவம் செருக்கினலும், ஆயுள் பெரியோர் அவமதிப்பாலும் கொடை பிறர றியப்படுவதாலும் அழிந்து பலனற்றவையாகி விடுகின்றன
- மனம், மொழிகளால் பொய் கூருமல், விருப்பு வெறுப்பில்லாமல் தூய்மையுடன் அடங்கி வாழ்பவரே வேதம் விதித்த மேன்மைகளை அடையத் தகுதியுடையவராகின்றனர்.
- அறவழிவராத பொருளையும், நல்வழியில் வராத இன்பத்தையும், பிறருக்குத் துன்பந் தரும் செயலையும் உலகோர் பழிக்கும் நடத்தையையும் ஒருவன் இளமை தொட்டே நீக்கப் பழகிக் கொள்ளுதல் நலம்.
- எப்பொருட்களிலும் இறைவனையும் இறைவனில் எல்லாப் பொருள்களையும் தனது தத்வ சிந்தனையால் கண்டறிந்து தனது செயல்களனைத்தையும் இறைவனிடமே ஒப்புவித்து புலனடக்கமுற்ற யோகியர் போல் நாமும் எமது நிலைப்பாட்டை நிலைநிறுத்த முயலவேண்டும்.

இம்மாத விசேடங்கள்

## "சுக்ல வருஷப்பிறப்பு"

'நாளும் கோளும் நல்லனவே தரும்' எனும் நம்பிக்கையுடன் வாழும் இந்துக்களுக்கு இப்பண்டிகை வாழ்க்கையில் முக்கியமானதும் முதன்மையுமாகும். வருடப்பிறப்பன்று ஏற்படும் நல்லன தீயவை என்பவற்றின் பலாபலன்களே வருடம் முழுவதும் அமைந்து விடலாம் என நினைந்து ஒவ்வோர் செயலையும் பக்குவமாகவும் பக்தியாகவும் செய்ய முயல்வர். இத்தினத்தில் மாதா பிதா குரு தெய்வம் இவர்களின் ஆசி பெறுவதே முதற்கடனாகும். இவர்களின் ஆசியினாலேயே நாம் இவ்வருடம் முழுதும் ஏன் வாழ்நாள் முழுவதுமே நலமாக வாழப்போகிறோம் எனும் நம்பிக்கை இந்துக்களாகிய எமக்கு பசுமரத்தாணி போல பதிந்துவிடுகின்றது.

இவ்வாறு சிறப்புறும் இப்புத்தாண்டு சித்திரை மாதத்தில் சூரியன் மேடராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் ஆரம்பமாகின்றது. வேனிற் காலமாக ஓரளவு வெப்ப காலமாக இருந்தபோதிலும் மக்களின் மனதில் பங்குனி வெப்பங் குறைந்து உள்ளத்தில் அன்பும் குளிர்ச்சியும் மகிழ்ச்சியும், தன்னம்பிக்கையும் அமைவற்கு இப்புத்தாண்டு வழி வகுக்கின்றது. இம்மாதம் 13-4-89 வியாழன் இரவு 9-40 மணியளவில் சுக்ல வருஷம் உதயமாகின்றது. இவ்வுதய நேரத்திற்கு முன்பின் நான்கு மணித்தியாலங்கள் மேஷ சங்கிரமண புண்ணிய காலமாகும். மறுநாள் அதிகாலையில் சகலரும் நித்திய கடமைகளை முடித்து மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து இஷ்ட தெய்வவழிபாடு மேற்கொண்டு சூரிய பொங்கல் வைத்து வழிபட்டு குருமுதலியோரின் ஆசியும் பெற்று நலமுடன் வாழ்வார்களாக!

(5-ம் பக்கம் பார்க்க)

# துவாதச வர்ஷே......

பன்னிரு ராசிகளையும், பன்னிரு மாதங்களையும் உள்ளடக்கியதாக பதினொரு வருடங்களை பதினொரு மலர்களாக்கி இறைவனுக்கு அர்ப்பணித்து அவனருளாலே பன்னிரண்டாம் ஆண்டில் மலரும் இம்மலரை நெல்லியடி விநாயகனருளுடன் உங்கள் முன் மணம் வீசத் தருகின்றோம்.

நடந்தவை நடந்தவையாகட்டும்; நடப்பவை நல்லனவாயமையட்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதைத் தவிர யாரும் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலை இன்றைய நாட்டு நிலைமையில். எனவே பழையன கழிந்து புதியன புகவேண்டிய இத்தருணம் வாசக அன்பர்கட்கு எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைச் சமர்ப்பித்துக்கொள்கிறோம்.

மேலும் வழமைபோல புத்தாண்டில் உங்கள் ராசிப் பலன்களும், உலகப்பலன்களும், சோதிடம், சமயம், எண்சோதிடம் சம்பந்தமான சிறப்புக் கட்டுரைகளும், ஆய்வு மன்றம், சந்தேக நிவிர்த்தி போன்ற அம்சங்களும் மலரை அழகுசெய்கின்றன. சோதிட அறிஞர்களும், சிந்தனையாளர்களும் மேன்மேலும் தங்கள் ஆக்கங்களை சிறப்புற ஆக்கி வைத்தால் மலர் மேலும் மணம் வீச வாய்ப்பாக இருக்குமல்லவா? வாசக அன்பர்களும் உங்கள் கருத்துக்களை உற்சாகத்துடன் எழுதி அனுப்புங்கள். சென்ற பங்குனி இதழில் அன்பர் ஒருவர் ''கணித பஞ்சாங்கத்தின் துல்லியமான கணிப்பை கிரகணம் நிரூபித்துவிட்டது'' என்பதை தமது கடிதத்தின் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார். இது வளரும் குழந்தைக்கு சத்துணவளிப்பதைப் போன்றது எனலாம். மேலும் பற்பல அம்சங்களைப் புகுத்துவதற்கு உங்கள் ஆக்கமும் ஊக்கமும் அவசியமாகின்றது.

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் இன்று எழுந்தருளும் இறைவனின் அருட்பேற்றினால் மேன்மேலும் சிறப்புறவும் மக்கள் யாபேரும் மாட்சிமையுடன் வாழவும், வாழுகின்ற மக்கட் செல்வங்களுக்கு இம்மலர் தினந்தோறும் மணம் வீசவும் வேண்டி எல்லாம் வல்ல இறையருளை வழுத்தியமைகின்றோம்.

சுபம்.

(ஆ-ர்)

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (சித்திரை மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 04 நிமிஷம்)

| வாரம் | 6...04<br>7...04 | 7...04<br>8...04 | 8...04<br>9...04 | 9...04<br>10...04 | 10...04<br>11...04 | 11...04<br>12...04 | 12...04<br>1...04 | 1...04<br>2...04 | 2...04<br>3...04 | 3...04<br>4...04 | 4...04<br>5...04 | 5...04<br>6 04 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# நாள் நலமா?

சித் 1 வெள் (14-4-89) நவமி மாலை 6-26 வரை. பூசம் பகல் 2-09 வரை. மரணம், புதுவருடப் பிறப்பு. சுபகருமங்களை விலக்குக.
ராகு 10-34—12-06

சித் 2 சனி (15-4-89) தசமி இரவு 8-21 வரை. ஆயிலியம் மரணம் மாலை 4-32 வரை. மாலை 4-32 இன்மேல் அவசிய கருமங்களைச் செய்யலாம்.
ராகு 9-03—10-35

சித் 3 ஞாயி (16-4-89) ஏகாதசி இரவு 10-41 வரை மகம் மரணம் மாலை 7-22 வரை, ஸர்வஏகாதசி விரதம். அசுபதினம். ராகு 4 32—6-04

சித் 4 திங் (17-4-89) துவாதசி பி.இ 1-17 வரை. பூரம் இரவு 10-27 வரை, சித்தம், சுபதினமன்று. ராகு 7-32—9-04

சித் 5 செவ் (18-4-89) திரயோதசி பி.இ 3-54 வரை, உத்தரம பி.இ 1-34 வரை, அமிர்தசித்தம், பிரதோஷவிரதம், வயல்தோட்டச் செய்கைகள் மேற்கொள்ளலாம். ராகு 3-01—4-33

சித் 6 புத (19-4-89) சதுர்த்தசி முழுவதும், அத்தம் பி இ 4-37 வரை, சித்தம், கரிநாள், அவசிய கருமங்களைச் செய்க. ராகு 12-01—1-33

சித் 7 வியா (20-4-89) சதுர்த்தசி காலை 6-26வரை, சித்திரை முழுவதும் சித்தம் சித்திராபூரணை, சித்திரகுப்தவிரதம், அசுபதினம். ராகு 1-31—3-03

சித் 8 வெள் (21-4-89) பூரணை காலை 8-44 வரை, சித்திரை காலை 7-29வரை, சுபகருமங்கட்கு உகந்தது, சித்தம். ராகு 10-31—12-03

சித் 9 சனி (22-4-89) பிரதமை பகல் 10-46வரை, சுவாதி பகல் 10-04வரை, அமிர்தசித்தம், நற்கருமங்கள் செய்யலாம். ராகு 9-00—10-32

சித் 10 ஞாயி (23 4-89) துவிதியை பகல் 12-29வ. விசாகம் பகல் 12-22வரை, மரணம், அசுபதினம்.
ராகு 4-30—6-02

சித் 11 திங் (24-4-89) திரிதியை பகல் 1-50 வரை அனுஷம் பகல் 2-18 வரை, சித்தம், சுபகருமங்கட்கு உகந்தது. ராகு 7-30—9-02

சித் 12 செவ் (25-4-89) சதுர்த்தி பகல் 2-47வரை, கேட்டை - மரணம் பகல் 3-51 வரை, சுபதினமன்று. ராகு 2-59—4-31

சித் 13 புத (26-4-89) பஞ்சமி பகல் 3-17 வரை, மூலம் – மரணம் மாலை 4-58வரை, சுபகருமங்களை விலக்குக. ராகு 11-59—1-31

சித் 14 வியா (27-4-89) ஷஷ்டி பகல் 3-18வரை, பூராடம் மாலை 5-36வரை. சித்தம் மாலை 5மணியின்மேல் சுபகருமங்கட்கு நன்று. ராகு 1-29—3-01

சித் 15 வெள் (28-4-89) ஸப்தமி பகல் 2-46வரை, உத்தராடம் - சித்தம் மாலை 5-42 வரை, கரிநாள் பகல் 2-00 மணிக்குள் முக்கியகருமங்கள் செய்யலாம். ராகு 10-28—12-00

சித் 16 சனி (29-4-89) அஷ்டமி - சித்தம் பகல் 1-39 வரை, திருவோணம் - மரணம் மாலை 5-14 வரை, நடேசரபிஷேகம், அசுபதினம்.
ராகு 8-58—10-31

சித் 17 ஞாயி (30-4-89) நவமி பகல் 11-58 வரை, அவிட்டம் - மரணம் மாலை 4-12 வரை, சுபதினமன்று. ராகு 4-28—6-01

சித் 18 திங் (1-5-89) தசமி காலை 9-43 வரை, சதயம் – சித்தம் பகல் 2-37வரை, நர்கருமங்களுக்கு உகந்ததினம். ராகு 7-27—9-00

சித் 19 செவ் (2-5-89) ஏகாதசி காலை 6-58வரை, பூரட்டாதி - மரணம் பகல 12-32 வரை, துவாதசி பி.இ. 3-49 வரை, அசுபதினம்.
ராகு 2-57—4-30

சித் 20 புத (3-5-89) திரயோதசி இரவு 12-23 வ. உத்தரட்டாதி - சித்தம் பகல் 10-06 வரை, பிரதோஷ விரதம் சுபகருமங்கட்கு உகந்ததினம்.
ராகு 11-57—1-30

சித் 21 வியா (4-5-89) சதுர்த்தசி இரவு 8-49வரை ரேவதி காலை 7-24வரை, அசுவினி பி.இ.4-38வ. சித்தாமிர்தம், அக்கினி நாளாரம்பம், சுபகருமங்கட்கு நன்று. ராகு 1-26—2-59

சித் 22 வெள் (5-5-89) அமாவாசை மாலை 5-17வ, பரணி பி.இ. 1-59 வரை, சித்தம், அமாவாசை விரதம், அசுபதினம். ராகு 10-26—12-59

சித் 23 சனி (6-5 89) பிரதமை பகல் 1-58 வரை, கார்த்திகை இரவு 11-37 வரை, அமிர்தசித்தம், கார்த்திகை விரதம், சந்திரதரிசனம், சுபதினமன்று.
ராகு 8-56—10-26

சித் 24 ஞாயி (7-5-89) துவிதியை பகல் 11-03 வ. ரோகிணி இரவு 9-46 வரை, சித்தம், சுபகருமங்கட்கு உகந்தது. ராகு 4-25—5-58

சித் 25 திங் (8-5-89) திரிதியை காலை 8-41 வரை, மிருகசீரிடம் இரவு 8-29 வரை, அமிர்தசித்தம்,

சதுர்த்திவிரதம், நற்கருமங்கட்கு உகந்தது.
ராகு 7-25—8-58

சித் 26 செவ் (9-5-89) சதுர்த்தி காலை 7-02 வரை, திருவாதிரை—மரணம் இரவு 8-00 வரை, சுபதின மன்று. ராகு 2-55—4-28

சித் 27 புத (10-5-89) பஞ்சமி காலை 6-12 வரை, புனர்பூசம் இரவு 8-22 வரை, சித்தம், ஷஷ்டி விரதம், சுபகருமங்கட்கு உகந்ததினம்.
ராகு 11-55—1-28

சித் 28 வியா (11-5-89) ஷஷ்டி காலை 6-14 வரை, பூசம் இரவு 9-34 வரை, அமிர்தசித்தம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 1-24—2-57

சித் 29 வெள் (12-5-89) ஸப்தமி காலை 7-07 வ. ஆயிலியம் இரவு 11-32 வரை, மரணம், சுபதின மன்று. ராகு 10-24—12-57

சித் 30 சனி (13-5-89) அஷ்டமி காலை 8-14 வ. மகம் பி.இ. 2-06 வரை, அமிர்தசித்தம், சுபதின மன்று. ராகு 8-54—10-27

சித் 31 ஞாயி (14-5-89) நவமி பகல் 10-53 வரை, பூரம் பி.இ. 5-04 வரை. சித்தாமிர்தம். அசுப தினம். ராகு 4-24—5-57

நூல் மதிப்புரை

# நல்வழி நான்கு

நாம் நாள்தோறும் காலையில் எழுவது முதல் இரவு நித்திரை செய்வது வரை நாம் செய்யும் அன்றாடக் கடமைகள் பற்றிய விளக்கங்களும் பலன்களும் எவ்வெவை என்பவற்றை நித்திய தர்மச் செயல்கள் என்றும், கோவிலில் தினமும் வழிபடும் முறைகளையும் பலன்களையும் ஆலயவழிபாடு எனவும், கௌரிவிரதம் அனுஷ்டிக்கும் முறை அனுஷ்டிப்பவர்கள், பலன்கள் முதலியற்றை கேதாரகௌரி விரதம் என்றும், கோவில் வழிபாட்டில் ஏற்படும் சந்தேகங்களை வினு - விடையாக்கி சந்தேக நிவிர்த்தி எனவும் நான்கு நல்வழியாக்கி வெளியிட்டுள்ளார் "நியாய சிரோமணி" பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள். சம்ஸ்கிருத தமிழ் நூல்கள் பலவற்றைத் தொகுத்து வெளியிட்டுள்ள ஆசிரியரின் முயற்சி சைவமக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். அழகிய பதிப்பாக கைக்கடக்கமாக வெளிவந்துள்ளது இச்சிறு நூல்.

கிடைக்குமிடம்: 93, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (ஆ-ர்)

இம்மாத...... (1-ம் பக்கத் தொடர்)

மேலும் புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயில்யம், அனுஷம், மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால், உத்தரட்டாதி நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் மருத்துநீர் ஸ்நானம் இறைவழிபாடு பெரியோராகி பெறுதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

புதுவருஷத்தில் உங்கள் பணப்புழக்கம்

| | வரவு | செலவு |
|---|---|---|
| மேடம், விருச்சிகம் | 11 பங்கு | 5 பங்கு |
| இடம், துலாம் | 05 ,, | 14 ,, |
| மிதுனம், கன்னி | 08 ,, | 11 ,, |
| கடகம் | 08 ,, | 02 ,, |
| சிங்கம் | 05 ,, | 05 ,, |
| தனு, மீனம் | 14 ,, | 11 ,, |
| மகரம், கும்பம் | 02 ,, | 08 ,, |

கைவிசேஷம் 15-4-89 சனிக்கிழமை இரவு 8-16 முதல் 8-52 வரை, செய்வது நன்று.

## சித்திரகுப்த விரதம்

சித்திரைச் சித்திரையில் சீரார் பௌர்ணமியில்—எனும் சித்திரைக் கதைப்பாட்டில் வரும் கூற்றுப்போல சித்திரா பௌர்ணமியும் சித்திரை நட்சத்திரமும் சேர்ந்த நாள் சித்திரகுப்பத விரத தினமாகும். யமதர்மராஜனின் கணக்காராக உள்ள சித்திரகுப்தர் எமது புண்ணிய பாவங்களை கணக்குப்பார்த்து அவரவர்க்குரிய பலன்களைக் கொடுப்பதற்கு யமனுக்கு உதவியாளராக விளங்குகிறுர் என்பது முன்னோர் ஐதீகம். எனவே இக்கணக்கரைத் திருப்தி செய்வதற்காக இவரைக் குறித்து அனுஷ்டிக்கப்படுவதால் சித்திரகுப்த விரதமென்றும் சித்திரையில் வரும் பூரணை சிறப்பானதால் சித்திரா பூரணையென்றும் சொல்லப்படுகிறது. இதையிட்டு ஆலயங்களில் யமனின் கணக்கர் என்ற முறையில் அவரின் எழுத்தாணியை கும்பத்தின் முன் நெற்குவியலில் வைத்து அவரை சித்திரபுத்திர கணக்கராகப் பாவித்து அவரின் கதையைப் படிப்பதும் அவரின் திருப்திக்காக ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சி காய்ச்சிப் படைத்து அடியார்க்கும், ஏழைகட்கு கொடுத்தலும் பரம்பரையாக வழமையாக நடைபெற்று வரும் விழாவாகும்.

# உதயலக்னம் காணும் பதகம் (வாழ்ப்பாணம்)

## சுக்ல ஷூ சித்திரை மீ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (14-4-89 முதல் 14-5-89 வரை)

| இங் | தமி | வாரம் | மேடம் | | இடபம் | மிதுனம் | கடகம் | சிங்கம் | கன்னி | துலா | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏப்ரில் | சித்தி | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பி.ப) | ம. மி. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) |
| 14 | 1 | வெள் | 6 4 | 7 52 | 9 54 | 12 6 | 2 13 | 4 14 | 6 13 | 8 17 | 10 27 | 12 35 | 2 31 | 4 16 | 5 58 |
| 15 | 2 | சனி | 5 58 | 7 48 | 9 50 | 12 2 | 2 9 | 4 10 | 6 9 | 8 13 | 10 23 | 12 31 | 2 27 | 4 12 | 5 54 |
| 16 | 3 | ஞாயி | 5 54 | 7 45 | 9 47 | 11 59 | 2 6 | 4 7 | 6 6 | 8 10 | 10 20 | 12 28 | 2 24 | 4 9 | 5 51 |
| 17 | 4 | திங் | 5 51 | 7 40 | 9 42 | 11 54 | 2 1 | 4 2 | 6 1 | 8 5 | 10 15 | 12 23 | 2 19 | 4 4 | 5 46 |
| 18 | 5 | செவ் | 5 46 | 7 37 | 9 39 | 11 51 | 1 58 | 3 59 | 5 58 | 8 2 | 10 12 | 12 20 | 2 16 | 4 1 | 5 43 |
| 19 | 6 | புதன் | 5 43 | 7 32 | 9 34 | 11 46 | 1 53 | 3 54 | 5 53 | 7 57 | 10 7 | 12 15 | 2 11 | 3 56 | 5 38 |
| 20 | 7 | வியா | 5 38 | 7 28 | 9 30 | 11 42 | 1 49 | 3 50 | 5 49 | 7 53 | 10 3 | 12 11 | 2 7 | 3 52 | 5 34 |
| 21 | 8 | வெள் | 5 34 | 7 24 | 9 26 | 11 38 | 1 45 | 3 46 | 5 45 | 7 49 | 9 59 | 12 7 | 2 3 | 3 48 | 5 30 |
| 22 | 9 | சனி | 5 30 | 7 21 | 9 23 | 11 35 | 1 42 | 3 43 | 5 42 | 7 46 | 9 56 | 12 4 | 2 0 | 3 45 | 5 27 |
| 23 | 10 | ஞாயி | 5 27 | 7 16 | 9 18 | 11 30 | 1 37 | 3 38 | 5 37 | 7 41 | 9 51 | 11 59 | 1 55 | 3 40 | 5 22 |
| 24 | 11 | திங் | 5 22 | 7 12 | 9 14 | 11 26 | 1 33 | 3 34 | 5 33 | 7 37 | 9 47 | 11 55 | 1 51 | 3 36 | 5 18 |
| 25 | 12 | செவ் | 5 18 | 7 9 | 9 11 | 11 23 | 1 30 | 3 31 | 5 30 | 7 34 | 9 44 | 11 52 | 1 48 | 3 33 | 5 15 |
| 26 | 13 | புதன் | 5 15 | 7 5 | 9 7 | 11 19 | 1 26 | 3 27 | 5 26 | 7 30 | 9 40 | 11 48 | 1 44 | 3 29 | 5 11 |
| 27 | 14 | வியா | 5 11 | 7 2 | 9 4 | 11 16 | 1 23 | 3 24 | 5 23 | 7 27 | 9 37 | 11 45 | 1 41 | 3 26 | 5 8 |
| 28 | 15 | வெள் | 5 8 | 6 57 | 8 59 | 11 11 | 1 18 | 3 19 | 5 18 | 7 24 | 9 34 | 11 40 | 1 36 | 3 21 | 5 5 |
| 29 | 16 | சனி | 5 3 | 6 53 | 8 55 | 11 7 | 1 14 | 3 15 | 5 14 | 7 18 | 9 28 | 11 36 | 1 32 | 3 17 | 4 59 |
| 30 | 17 | ஞாயி | 4 59 | 6 49 | 8 51 | 11 3 | 1 10 | 3 11 | 5 10 | 7 14 | 9 24 | 11 32 | 1 28 | 3 13 | 4 55 |
| மே 1989 | | | | | | | | | | | | | | | |
| 1 | 18 | திங் | 4 55 | 6 46 | 8 48 | 11 0 | 1 7 | 3 8 | 5 7 | 7 11 | 9 21 | 11 29 | 1 25 | 3 10 | 4 50 |
| 2 | 19 | செவ் | 4 50 | 6 41 | 8 43 | 10 55 | 1 2 | 3 3 | 5 2 | 7 6 | 9 16 | 11 24 | 1 20 | 3 5 | 4 45 |
| 3 | 20 | புதன் | 4 45 | 6 37 | 8 39 | 10 51 | 12 58 | 2 59 | 4 58 | 7 2 | 9 12 | 11 20 | 1 16 | 3 1 | 4 41 |
| 4 | 21 | வியா | 4 41 | 6 34 | 8 36 | 10 48 | 12 55 | 2 56 | 4 55 | 6 59 | 9 9 | 11 17 | 1 13 | 2 58 | 4 38 |
| 5 | 22 | வெள் | 4 38 | 6 30 | 8 32 | 10 44 | 12 51 | 2 52 | 4 51 | 6 55 | 9 5 | 11 13 | 1 9 | 2 54 | 4 34 |
| 6 | 23 | சனி | 4 34 | 6 26 | 8 28 | 10 40 | 12 47 | 2 48 | 4 47 | 6 51 | 9 1 | 11 9 | 1 5 | 2 50 | 4 30 |
| 7 | 24 | ஞாயி | 4 30 | 6 22 | 8 24 | 10 36 | 12 43 | 2 44 | 4 43 | 6 47 | 8 57 | 11 5 | 1 1 | 2 46 | 4 26 |
| 8 | 25 | திங் | 4 26 | 6 18 | 8 20 | 10 32 | 12 39 | 2 40 | 4 39 | 6 43 | 8 53 | 11 1 | 12 57 | 2 42 | 4 22 |
| 9 | 26 | செவ் | 4 22 | 6 14 | 8 16 | 10 28 | 12 35 | 2 36 | 4 35 | 6 39 | 8 49 | 10 57 | 12 53 | 2 38 | 4 18 |
| 10 | 27 | புதன் | 4 18 | 6 11 | 8 13 | 10 25 | 12 32 | 2 33 | 4 32 | 6 36 | 8 45 | 10 54 | 12 50 | 2 35 | 4 15 |
| 11 | 28 | வியா | 4 15 | 6 6 | 8 8 | 10 20 | 12 27 | 2 28 | 4 27 | 6 31 | 8 41 | 10 49 | 12 45 | 2 30 | 4 10 |
| 12 | 29 | வெள் | 4 10 | 6 3 | 8 5 | 10 17 | 12 24 | 2 25 | 4 24 | 6 28 | 8 38 | 10 46 | 12 42 | 2 27 | 4 7 |
| 13 | 30 | சனி | 4 7 | 5 59 | 8 1 | 10 13 | 12 20 | 2 21 | 4 20 | 6 24 | 8 34 | 10 42 | 12 38 | 2 23 | 4 3 |
| 14 | 31 | ஞாயி | 4 3 | 5 55 | 7 57 | 10 9 | 12 16 | 2 17 | 4 16 | 6 20 | 8 30 | 10 38 | 12 34 | 2 19 | 3 59 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம். சித்திரை 31ஆ. (14 5-89) பகல் 9-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (7-57—10-09) மிதுனலக்னம்

# சித்திரை மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| | சூ சுக் புத | குரு செவ் | |
| கும்பம்: ராகு | சித்திரை மாதக் கிரக நிலை | | கடகம்: |
| மகரம்: | | | சிம்மம்: கேது |
| சனி, யுரே நெப் | | | |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரக மாற்றங்கள்

5உ (19-4-89) காலை 5-40க்கு மிது-செவ்
11உ (24-4-89) பி.இ. 2-29க்கு இட-புத
23உ (6-5-89) காலை 9-22க்கு இட-சுக்
4உ புதன் உதயம்
22உ சுக்கிரன் உதயம்
12உ சனி வக்ராரம்பம்
3உ நெப்டியூன் வக்ராரம்பம்

யுரேனஸ் இம்மாதம் முழுவதும் வக்ரத்தில் சஞ்சாரம் செய்கின்றது.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சித் | 2உ | (15-4-89) | மாலை | 4-32 | முதல் | சிங்கம் |
| | 4உ | (17-4-89) | பி.இ. | 5-13 | ,, | கன்னி |
| | 7உ | (20-4-89) | மாலை | 6-12 | ,, | துலாம் |
| | 10உ | (23-4-89) | காலை | 5-49 | ,, | விருச்சிகம் |
| | 12உ | (25-4-89) | பகல் | 3-51 | ,, | தனுசு |
| | 14உ | (27-4-89) | இரவு | 11-40 | ,, | மகரம் |
| | 16உ | (29-4-89) | பி.இ. | 4-47 | ,, | கும்பம் |
| | 19உ | (2-5-89) | காலை | 7-06 | ,, | மீனம் |
| | 21உ | (4-5-89) | காலை | 7-24 | ,, | மேடம் |
| | 23உ | (6-5-89) | காலை | 7-21 | ,, | இடபம் |
| | 25உ | (8-5-89) | காலை | 9-01 | ,, | மிதுனம் |
| | 27உ | (10-5-89) | பகல் | 2-11 | ,, | கடகம் |
| | 29உ | (12-5-89) | இரவு | 11-32 | ,, | சிங்கம் |

### கிரகநிலை குறிக்க:-

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி சித்திரை மீ 31உ பகல் 9-00 மணிக்கு மிதுன லக்னம் என அறிந்து கொண்ட பின் 'மிதுனம்' என்ற கட்டிடம் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது விருச்சிகலக்னம் உதயமாகின்றது. லக்கினாதிபதி செவ்வாய் 7ல் குருவுடன் இருப்பதும், குரு லக்கினத்தை திருஷ்டிப்பதும் பொதுவாக நற்பலன்களையே காட்டுகின்றது. 2ல் சனி இருப்பதால் நாட்டில் பொருளாதார நஷ்டங்களையும், எதிர்பாராத விபத்துக்களையும், இயற்கை அழிவுகளையும் காட்டும். கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என்பனவற்றில் முன்னேற்றக் குறைவும், மாணவர்களின் கல்வி பாதிப்படைதலுமுண்டாம்.

# சுக்ல வருஷ சித்திரை மாத கிரக நிரயனஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5-30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனாம்சம் 23 பா 42கலை 32விகலை)

| தேதி | | நாக்ஷத்ர நேர | சூரியன் ☉ | சந்திரன் ☽ | செவ்வாய் ♂ | புதன் ☿ | குரு ♃ | சுக்கிரன் ♀ | சனி ♄ | ராகு ☊ | யுரேனஸ் ♅ | நெப்டியூ ♆ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏப்ரில் | தி | பகல் 12-00 ம நி. செ | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க |
| 14 | 1 | 1 29 38 | 0 0 19 | 3 12 14 | 1 26 55 | 0 10 36 | 1 12 16 | 0 2 38 | 8 20 9 | 10 8 37 | 8 11 37 | 8 18 41 |
| 15 | 2 | 1 33 35 | 1 18 | 3 24 27 | 27 32 | 12 37 | 12 28 | 3 52 | 20 10 | 8 33 | 11 37 | 18 41 |
| 16 | 3 | 1 37 32 | 2 16 | 4 6 28 | 28 9 | 14 36 | 12 40 | 5 7 | 20 11 | 8 30 | 11 36 | 18 40 |
| 17 | 4 | 1 41 28 | 3 15 | 4 18 20 | 28 46 | 16 32 | 12 52 | 6 21 | 20 11 | 8 27 | 11 36 | 18 40 |
| 18 | 5 | 1 45 25 | 4 14 | 5 0 8 | 29 23 | 18 26 | 13 5 | 7 35 | 20 12 | 8 24 | 11 35 | 18 40 |
| 19 | 6 | 1 49 21 | 5 12 | 5 11 56 | 2 0 00 | 20 18 | 13 17 | 8 49 | 20 12 | 8 21 | 11 35 | 18 40 |
| 20 | 7 | 1 53 18 | 6 11 | 5 23 46 | 0 37 | 22 6 | 13 30 | 10 3 | 20 13 | 8 18 | 11 35 | 18 40 |
| 21 | 8 | 1 57 14 | 7 10 | 6 5 41 | 1 14 | 23 51 | 13 42 | 11 18 | 20 13 | 8 15 | 11 34 | 18 40 |
| 22 | 9 | 2 1 11 | 8 8 | 6 17 42 | 1 51 | 25 32 | 13 55 | 12 32 | 20 13 | 8 11 | 11 33 | 18 39 |
| 23 | 10 | 2 5 8 | 9 7 | 6 29 50 | 2 28 | 27 9 | 14 7 | 13 46 | 20 13 | 8 7 | 11 33 | 18 39 |
| 24 | 11 | 2 9 4 | 10 5 | 7 12 8 | 3 5 | 28 42 | 14 20 | 15 00 | 20 13 | 8 4 | 11 32 | 18 39 |
| 25 | 12 | 2 13 1 | 11 3 | 7 24 35 | 3 42 | 1 0 11 | 14 33 | 16 14 | 20 13 | 8 1 | 11 31 | 18 39 |
| 26 | 13 | 2 16 57 | 12 2 | 8 7 13 | 4 19 | 1 35 | 14 46 | 17 28 | 20 13 | 7 58 | 11 30 | 18 38 |
| 27 | 14 | 2 20 54 | 13 0 | 8 20 5 | 4 56 | 2 56 | 14 59 | 18 42 | 20 12 | 7 55 | 11 30 | 18 38 |
| 28 | 15 | 2 24 50 | 13 58 | 9 3 13 | 5 33 | 4 11 | 15 11 | 19 56 | 20 12 | 7 52 | 11 29 | 18 37 |
| 29 | 16 | 2 28 47 | 14 57 | 9 16 39 | 6 10 | 5 22 | 15 24 | 21 10 | 20 11 | 7 49 | 11 28 | 18 37 |
| 30 | 17 | 2 32 43 | 0 15 55 | 10 0 25 | 2 6 47 | 1 6 28 | 1 15 37 | 0 22 24 | 8 20 11 | 10 7 46 | 8 11 27 | 8 18 36 |
| மே 1989 1 | 18 | 2 36 40 | 0 16 53 | 10 14 33 | 2 7 24 | 1 7 30 | 1 15 50 | 0 23 38 | 8 20 10 | 10 7 43 | 8 11 26 | 8 18 36 |
| 2 | 19 | 2 40 37 | 17 52 | 10 29 2 | 8 2 | 8 26 | 16 4 | 24 52 | 20 9 | 7 40 | 11 25 | 18 35 |
| 3 | 20 | 2 44 33 | 18 50 | 11 13 49 | 3 39 | 9 17 | 16 17 | 26 6 | 20 8 | 7 37 | 11 24 | 18 35 |
| 4 | 21 | 2 48 30 | 19 48 | 11 28 49 | 9 16 | 10 4 | 16 30 | 27 20 | 20 7 | 7 34 | 11 22 | 18 34 |
| 5 | 22 | 2 52 26 | 20 46 | 0 13 53 | 9 53 | 10 45 | 16 43 | 28 34 | 20 6 | 7 31 | 11 21 | 18 33 |
| 6 | 23 | 2 56 23 | 21 44 | 0 28 51 | 10 30 | 11 21 | 16 56 | 29 48 | 20 5 | 7 28 | 11 20 | 18 33 |
| 7 | 24 | 3 0 19 | 22 42 | 1 13 35 | 11 7 | 11 52 | 17 10 | 1 1 2 | 20 4 | 7 25 | 11 19 | 18 32 |
| 8 | 25 | 3 4 16 | 23 40 | 1 27 56 | 11 44 | 12 17 | 17 23 | 2 16 | 20 2 | 7 22 | 11 17 | 18 31 |
| 9 | 26 | 3 8 12 | 24 39 | 2 11 50 | 12 21 | 12 38 | 17 36 | 3 30 | 20 1 | 7 19 | 11 16 | 18 31 |
| 10 | 27 | 3 12 9 | 25 37 | 2 25 15 | 12 59 | 12 53 | 17 50 | 4 44 | 19 59 | 7 16 | 11 14 | 18 30 |
| 11 | 28 | 3 16 6 | 26 35 | 3 8 13 | 13 36 | 13 3 | 18 3 | 5 57 | 19 57 | 7 12 | 11 13 | 18 29 |
| 12 | 29 | 3 20 2 | 27 33 | 3 20 47 | 14 13 | 13 8 | 18 17 | 7 11 | 19 56 | 7 9 | 11 11 | 18 28 |
| 13 | 30 | 3 23 59 | 28 30 | 4 3 1 | 14 50 | 13 8 | 18 30 | 8 25 | 19 54 | 7 6 | 11 10 | 18 27 |
| 14 | 31 | 3 27 55 | 0 29 28 | 4 15 1 | 2 15 27 | 1 13 3 | 1 18 44 | 1 9 39 | 8 19 52 | 10 7 3 | 8 11 8 | 8 18 26 |




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.
## 14-4-89 முதல் 14-5-89 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 1ல் (ஜென்மத்தில்) லோகமூர்த்தியாக வலம்வருகின்றார். சூரியபகவான் பலக்குறைவுடன் சஞ்சாரம்செய்வது பெரும்பாலும் நன்மைதராது. பொதுவாக இவர்களின் உடல் நலம் இடைக்கிடை பாதிப்படையும். பொருள்வருமானமும் குறைவுறும். எந்த முயற்சிகளும் இழுபறி நிலையில் தொடரும். சிலருக்கு எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் கூட ஏற்படக்கூடும். குருபகவானின் சுபகோசார சஞ்சாரம் நிகழுவதால் பெரியவர்களின் உதவி ஒத்தாசைகள் புத்திரர் இனசனப் பிரபுக்களின் உதவிகளும் கிடைக்கும். சிலருக்கு மங்கள காரியங்கள்கூடச் சித்திக்கும்.

குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் அவ்வப்போது ஏற்பட்டாலும் பெரும்பாலும் அமைதி நிலவும். புத்திரர் உறவினர்களின் உதவிகளும் கிடைக்கும். எவ்வாறுயினும் வரவுக்கு மிஞ்சிய செலவும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு மாதத்தொடக்கத்தில் மந்த நிலையில் இருந்த வியாபாரம் மாதக்கடைசியில் விறுவிறுப்படையும். நிதி நிலையிலும் முன்னேற்றம் ஏற்படும். புதுமுதலீடுகள் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படும். எவ்வளவுதான் உண்மையாகவும் நேர்மையாகவும் பணிகளைத் தொடர்ந்து செய்தாலும் மேலதிகாரிகளின் நல்லெண்ணத்தைப் பெறுவது கடினம்.

விவசாயிகளுக்குப் பயிர்ச் சேதங்கள் ஏற்பட்டாலும் கணிசமான அளவு பயிர்விளைச்சல் அதிகரிப்பால் நட்டம் வராது. விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் கூடும். நல்ல சந்தைவாய்ப்பும் கிட்டும்.

தொழிலாளர் மத்தியில் அமைதிக்குறைவே காணப்படும். வேலைவசதிகளும் குன்றும். கிடைக்

கும் வேலைகளுக்கு உரியகூலி பெறுவதும் கடினம். தொழிற்பிணக்குகளால் வருமானப் பற்றாக்குறை வும் ஏற்படும்.

மாணவர் கல்வி இந்தமாதமும் முன்னேறிக் கொண்டேயிருக்கும். கணித விஞ்ஞானத்துறை சட்டத்துறை மாணவர்கள் சிறப்புச் சித்தியும் பெறுவர். சிலருக்குப் புலமைப் பரிசில்கள் கூடக் கிடைக்கும்.

பெண்களுக்கு இந்த மாதமும் எண்ணங்கள் கைகூடிவரும். விவாகாதி முயற்சிகள் பெரும் பாலும் நிறைவுபெறும். குடும்பத்தில் ஏற்படும் திடீர்ச் செலவீனங்கள் குடும்பப் பெண்களுக்குப் பிரச்சினைகளைத் தரும்.

அதிஷ்ட நாட்கள்.- ஏப். 16,17,25மா,26,27,30,
மே 1,4ப,5,8ப,9,13,14.

துரதிஷ்ட நாட்கள்:-ஏப். 19,20ப,23ப,24,25ப,
மே 2ப,3,4கா.




கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.

இடபராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 12ல் (விரையத்தில்) தாம்ர மூர்த்தியா கப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மை தராது. மேலும் சென்மவியாழனும் அட்டமத்துச் சனியுமாகிய கோசார சஞ்சாரகாலமும் சேர்ந்து நிகழுதலின் நற்பலன்களிலும் தீயபலன்களே அதி கம் நிகழக் கூடும். பொதுவாக இவர்களின் உடல்நலம் இடைக்கிடை பாதிப்புறும். பொருள் வருமானத்திலும் செலவுகளே கூடுதலால் கடன் பயமும் ஏற்படும். எந்தமுயற்சியிலும் அலைச்சலும் ஏமாற்றமும் கூடிய இழுபறி நிலைமைதொடரும். நண்பர்களுடனும் பகைவிரோதங்களும் ஏற்படக் கூடும். இவர்கள் வாழ்வில் எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் கூட ஏற்படும்.

குடும்பத்தவர்களுக்கு மனக்குழப்பங்கள் அடிக் கடி ஏற்படும். குடும்பவருமானத்திலும் செலவுகள் அதிகரிப்பால் கடன்பழுவும் ஏறும். புத்திரர் - சகோதரர் இனபந்துக்களின் உதவி ஒத்தாசைக ளும் கிடைப்பதும் கடினம்,

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை ஏற் படும். முதலீடுகளில் வருமானமும் குன்றும். கடன் நிலுவைகளையும் அறவிடமுடியாது. நிதி நெருக் கடிகளும் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் குன் றுவதால் மேலதிகாரிகளுடைய நல்லெண்ணங்க ளைப் பெறுவது கடினம். பதவி உயர்ச்சி முதலி யனவும் கேள்விக்குறியாகவே இருக்கும். சிலருக்கு கஷ்டப்பிரதேச இடமாற்றமும் கிடைக்கலாம்.

விவசாயிகளுக்குப் பயிரழிவும் உற்பத்திச் செலவு அதிகரிப்பும் ஒருங்கே நிகழும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் ஏற்படும். இவர்களின் வாழ்க்கைத் தரமும் குன்றிக் கடன்பழுவுமேறும்.

தொழிற்பிணக்குகள் வலுவடையும். வேலை நிறுத்தம் இவர்களின் நாளாந்த வாழ்க்கை யைக்கூட பாதிப்படையச்செய்யும். தொழில் ஒப் பந்த வேலைகளிலும் நட்டம் ஏற்படும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் பெரும்பாலும் தடைப்படும். மாணவர் மத்தியில் ஏமாற்றமும் விரக்தியும் கல்வி ஊக்கத்துக்குத் தடையாக அமையும்.

பெண்களுக்கு மனக்குமுறல்கள் இந்தமாதத் தில் அடிக்கடி ஏற்படும். விவாகாதி முயற்சிகளில் பெரும்பாலும் ஏமாற்றங்கள் ஏற்படும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் ஒத்துழைப்புக் கிடைப்பதும் கடினம்.

அதிஷ்டநாட்கள்: ஏப். 14,18பக.19,28,29
மே. 2பக.3,6பக.7,11,12

துரதிஷ்டநாட்கள்: ஏப். 21,22,25மா.26,27
மே.4பக,5,6காலை




மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 11ல் (லாபத்தில்) ரஜஸ மூர்த்தியாகிப் பலத்துடன் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். பொதுவாக இவர்களின் தேகநலம், குடும்பநலம் என்பன பெரும்பாலும் சீராக இருக்கும். பொருள் வருமானமும் கணிசமாகக் கூடும். வியாழபகவா னும், செவ்வாயும் துர்க்கோசார சஞ்சாரம் செய் வதும், இராசியைச் சனிபகவான் திருஷ்டி செய் வதும் பொருள்நட்டம், புத்திரர்-சகோதரர் முத

லான உறவினரால் துன்பங்கள், விழுதல் முதலான விபத்துக்கள் கைகால் நரம்பு சம்பந்த பிணி பீடைகள் முதலான கஷ்டங்களும் சிலருக்குக் கலந்து நிகழும்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும். குடும்ப வருமானமும் ஓரளவு அதிகரிக்கும். எனினும் புத்திரர்-உறவினர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைப்பது கடினம்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். ஆனால் மாதக்கடைசியில் வியாபாரம் மந்தநிலையடையும். முதலீடுகளின் வருமானமும் வீழ்ச்சியடையும். நிதிஇருப்புகளும் குறைவுறும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். சிலருக்கு பதவியுயர்ச்சிகள் கூடக் கிடைக்கும். பொதுவாக இவர்களின் வாழ்க்கைத் தரமும் உயரும்.

விவசாயிகளுக்குப் பயிர் அழிவும் உற்பத்திச் செலவும் கூடினாலும் நல்ல விளைச்சல் பெறுவதால் நட்டம் வராது. விவசாயப் பண்ணைகளிலும் நல்ல வருமானம் பெறுவர்.


தொழிலாளருக்கு வேலைவசதிகள் ஓரளவு கிடைக்கும். தொழில் ஒப்பந்தங்களிலும் லாபம் பெறுவர். இயந்திரம்-ஆலைத்தொழிலாளர்கள் சில சமயம் விபத்துக்களையும் எதிர்கொள்ளலாம்.

மாணவர் கல்வித் தடைக்காரணிகள் தொடர்ந்தாலும் சுயமுயற்சியும் ஊக்கமும் மாணவர் மத்தியில் உண்டாகும். பொதுவாக பரீட்சை முடிவுகளும் திருப்திதரும்.

பெண்களுக்கு மனநிறைவு ஏற்படுவது கடினம். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் ஒத்துழைப்புப் பெறுவதில் வேண்டாத சஞ்சலங்கள் கூட ஏற்படக்கூடும்.

அதிஷ்டநாட்கள்! ஏப். 16,17,21,22,30பகல்
மே. 1,4பக.5,8பக.9,13,14

துரதிஷ்டநாட்கள்! ஏப். 23பக.24,25பக.28,29
மே. 6பக.7,8காலை



## கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 10ல் சுவர்ணமூர்த்தியாக வலம் வருவது நன்மையாகும்: குரு-சனி இவர்களின் சுபகோசார சஞ்சாரமும் நிகழுவதும் சாதகமாகும். பொதுவாக இவர்களின் தேகநலம், குடும்பநலம் என்பனவற்றில் முன்னேற்றம் உண்டாகும். பொருள் வருமானமும் கணிசமாகக் கூடும், விற்றல் வாங்கல் மூலமும் லாபம் பெறுவர். இனசன பந்துக்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். வீட்டில் அல்லது குடும்பத்தில் சுபமங்கல கொண்டாட்டங்கள் நிகழும் சந்தர்ப்பங்கள் கூட ஏற்படும். இராசாங்க உதவிகள் காரிய சித்திகளும் கிடைக்கும்.

குடும்பத்தின் வருமானம் பெருகும். குடும்ப நல்லுறவும் வளரும். நண்பர்கள் - உறவினர்கள் புத்திரர் முதலானவர்களின உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்புடன் முன்னேறிச் செல்லும். முதலீடுகளின் வருமானமும் கிடைக்கும். வாடிக்கையாளரின் வரவும் கூடும். வங்கிக் கணக்குகளும் மனநிறைவுதரும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியனும் பலத்துடன் சஞ்சாரம் செய்வது நல்ல அனுகூலமாக அமைகிறது. சக ஊழியர்கள் பொதுமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி மனநிறைவு தரும். விளைச்சலும் கூடும். விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் கூடுவதுடன் நல்ல லாபமும் கிடைக்கும்.

தொழிலாளருக்கு போதிய வருமானம் கிடைக்கக்கூடியதாக வேலைவசதிகள் கிடைக்கும். தொழில் பிணக்குகள் பெரும்பாலும் நீங்கிவிடும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம்கிட்டும்.

மாணவர் கல்வி சிறப்பாக முன்னேறிவரும். கணித-விஞ்ஞானத்துறை மாணவர் சிறப்புச்சித்தி புலமைப் பரிசில்கள்கூடப் பெறுவர். சிலருக்கு வெளிநாட்டுக் கல்விவாய்ப்பும் கிட்டும்.

பெண்களுக்கு இந்த மாதத்தில் எண்ணிய எண்ணியாங்கு பெரும்பாலும் நிறைவுபெறச் சாதகமான சூழ்நிலைகள் ஏற்படும். விவாகமுயற்சிகளும் சித்திபெறக்கூடும்.

அதிஷ்டநாட்கள்; ஏப். 14.15பக.18பக.19,24
மே. 2பக.3,6பக.7,11,12

துரதிஷ்டநாட்கள்! ஏப். 25மா.26,27,30பக
மே. 1,2கா.8பக.9,19மு.ப.



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 9ல் லோகமூர்த்தியாகிப் பலக் குறைவுடன் வலம் வருவது நற்பலக் குறைவைத்தரும். தவிர இராசக் குருவின் துர்க்கோசார சஞ்சாரம் நிகழுவதும் இங்கு கவனிக்கப்படவேண்டும். பொதுவாக இவர்களின் தேகநலம், குடும்பநலம் என்பன பாதிப்படையும். வருமானமும் வீழ்ச்சியடைந்து கொண்டுசெல்லும், நண்பர்களும் விரோதிகளாக மாறிவருவர். எந்த முயற்சிகளிலும் தடை-தாமதம்-அலைச்சல்-வீண் விரயம் ஏமாற்றங்கள்தான் பெரும்பாலும் ஏற்படும். சகோதரர்-புத்திரர் உதவி ஒத்தாசைகள் கிடைப்பதும் கடினம்.

குடும்பத்தில் பெரும்பாலும் அமைதிக்குறைவு தோன்றும். கணவன்-மனைவியரின் பிணிபீடைகள் துன்பந்தரும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடுவதால் கடன்பழுவும் ஏறும்.

வர்த்தகர்களுக்கு கடந்த காலங்களிலும் பார்க்க வியாபாரம் குறிப்பிடக்கூடியதாய் முன்னேற்றம் தரும். ஆனால் நிலுவைக் கடன்களை அறவிடுவதும் கடினம்.

உத்தியோகத்தர்களுக்குச் சோதனைக்கு மேல் சோதனையானகாலம். பதவி உயர்வுகளுக்குப்பதில் பதவி இறக்கம் அல்லது பதவிநீக்கம் கூடச்சிலர் பெறுவர். வீண்செலவுகளும் கூடும்.

விவசாயிகளுக்குப் பயிர்விளைச்சல் பெரும்பாலும் குறைவுறும். இயற்கை-செயற்கை ஏதுக்களால் பயிர் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும். சந்தை வாய்ப்பும் கிடையாது.

தொழிலாளர் மத்தியில் குழப்பநிலைகள் உண்டாகும். வேலைவசதிகள் கிடைப்பதும் அரிதே! ஒப்பந்தத் தொழில்களிலும் லாபம் கிடைப்பதும் அரிதே!

மாணவர் கல்விநட்டம் பெரும்பாலும் குன்றும். ஆசிரியர்-மாணவர் மத்தியில் வெறுப்புணர்ச்சிகள் அவ்வப்போது தோன்றும். பரீட்சை முடிவுகளிலும் ஏமாற்றம்தான் கிட்டும்.

பெண்களுக்கு இந்தமாதத்திலும் மனநிறைவு கிடைப்பது கடினம். கன்னிப்பெண்களின் விவாக முயற்சிகள் கேள்விக்குறியாக இருக்கும். உத்தியோகப் பெண்களுக்கும் சோதனையானகாலம்.

அதிஷ்டநாட்கள். ஏப். 16,17,21,22,26,27
மே. 4பக.5,8பக.9,13,14

துரதிஷ்டநாட்கள்: ஏப். 14,15பக.28,29
மே. 2பக.3,11,12



## கன்னி

உத்தரம், 2, 3, 4, அத்தம், சித்திரை 1, 2-ம் கால்

கன்னி இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 8-ல் (அட்டமத்தில்) சுவர்ண மூர்த்தியாக வலம்வருகின்றார். சூரியன் மூர்த்திபலம் பெற்றாலும் தானபலம் குன்றுவதால் நன்மை தீமைகலந்த பலன்கள்தான் இந்தமாதமும் நிகழும். வியாழபகவானின் சுபகோசார சஞ்சாரத்துடன் கூடிய சுபதிருஷ்டி இவர்களுக்கு இருப்பதும் நன்மையாகும். பொதுவாக இவர்களின் தேகசுகம் குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானத்திலும் முன்னேற்றம் உண்டு. அலைச்சல் மூலம் காரிய சித்திகளும் பெறுவர். வீட்டில் அல்லது குடும்பத்தில் மங்கள கொண்டாட்டங்கள் கூட நிகழச் சாதகமானகாலம்.

குடும்பத்தில் பெரும்பாலும் மனநிறைவு உண்டாகும். புத்திரர்-உறவினர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும். வருமானமும் கூடிவாழ்க்கைத்தரமும் உயரும்.

வியாபாரிகளுக்கு மாத ஆரம்பத்தில் விறுவிறுப்புடன் நடந்து வந்த வியாபாரம் மாதஇறுதியில் மந்தநிலையடையும். இவ்வாறே முதலீடுகளின் வருமானமும் குறைவுறும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுவது நன்மையாகும். மேலதிகாரிகளின் பாராட்டுகள் பதவி உயர்ச்சிகள் கிடைக்க ஏதுவாகும். ஆனால் அலைச்சல் வீண்செலவு ஏற்படும்.

விவசாயிகளுக்கு பயிர்உற்பத்திச் செலவுகள் கூடினாலும் நல்ல விளைச்சலால் நட்டமில்லாமல் சமாளிக்கமுடியும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் வராது.

தொழிலாளர் மத்தியில் நல்லுறவு உண்டாகும். வேலையில்லாப் பிரச்சினைகள் ஓரளவு நீங்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் வராது. இவர்களின் வாழ்க்கைத் தரமும் உயரும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். கல்விவளர்ச்சி குறிப்பிடக்கூடியதாய் வளரும். சிறப்பாக பௌதிக விஞ்ஞானத்துறை மாணவர் சிறப்புச் சித்தியும் பெறுவர்.

பெண்களுக்கு எதிர்ப்புக்கள் குறையும், கன்னிப் பெண்களுக்கு எடுக்கும் விவாகமுயற்சிகளும் கைகூடிவரும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: ஏப். 14,19,23பக.24,28,29
மே. 6பக.7,11,12

துரதிஷ்டநாட்கள்: ஏப். 16,17,18கா.30ப
மே. 1,2கா.4பக.5,13,14




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

இந்த இராசிகளுக்கு இந்தமாதம் சூரியபகவான் 7ல் தாம்பரமூர்த்தியாக வலம்வருகின்றார்; சூரியன் பலக்குறைவுடன் சஞ்சரிப்பது நன்மை தராது. குருபகவான் அட்டமத்தில் சஞ்சரிப்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டும். பொதுவாக இவர்களின் உடல்நலம் குடும்பநலம் என்பன அடிக்கடி குறைவுறும். பொருள்வருமானத்திலும் எதிர்பார்த்தபடி முன்னேற்றம் பெறுவதும் கடினமே. எந்த முயற்சிகளிலும் தடையும் அலைச்சலும் ஏமாற்றமும் ஏற்படுவதுடன் மன உளைச்சலும் பெறுவர். ஆனால் சனிபகவானின் சுபகோசாரசஞ்சாரத்தால் தூரதேசப் பொருள்வரவு அந்நியர் உறவு, அந்நியர் உதவி முதலானவையும் நிகழும்.

குடும்பத்தில் கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படும். உறவினர் நண்பர்களுடன் பகை விரோதங்களும் ஏற்படும்; குடும்ப வருமானத்திலும் செலவுகள் ஏறிக்கொண்டு போதலால் கடன் பயமும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு மாதாரம்பத்தில் மந்தநிலையிலிருந்து வியாபாரம் மாதஇறுதியில் விறுவிறுப்படையும். முதலீடுகளிலும் ஓரளவு வருமானம் கிடைக்கும், முக்கியமாக எண்ணெய்வகை வியாபாரம் நல்ல லாபந்தரும்.

உத்தியோகத்தர்களுக்கு பலப்பல பிரச்சனைகள் அவ்வப்போது தோன்றும். பதவியுயர்ச்சி முதலியன பேச்சளவிலேயே இருக்கும். சக உத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும்,

விவசாயிகளுக்கு இம்மாதம் பயிர்விளைச்சல் கூடும். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் கூடும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.


தொழிலாளர் மத்தியில் அமைதி நிலவும்; வேலையில்லாப் பிரச்சினைகள் நீங்கி பொதுவாக வேண்டியளவு வேலைவசதிகள் எல்லாருக்கும் கிடைப்பதால் சீவியத்துக்குப் போதிய வருமானம் கிடைக்கும். ஒப்பந்த தொழில்களிலும லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்விக் குழப்பநிலை தொடரும். ஆசிரியர் மாணவர் மத்தியில் கருத்துவேற்றுமைகள் ஏற்படுவதால் மாணவர் கல்விமுன்னேற்றம் தடைப்படும். பரீட்சை முடிவுகளிலும் பெரும்பாலும் ஏமாற்றம்தான் இருக்கும்.

பெண்களுக்கு இம்மாதத்தில் மனநிறைவு பெறுவது கடினம். கன்னிப்பெண்களின் விவாக முயற்சிகள் அலைச்சலும் வீண்செலவும் ஏற்படும். குடும்பப் பெண்களுக்கு வீட்டில் ஏற்படும் எதிர்பாராத திடீர்நெருக்கடிகளைச் சமாளிப்பதுகடினம்.

அதிஷ்ட நாட்கள்: ஏப். 16,17,21,22,26,27.
மே 1,2கா,8,9,13,14.

துரதிஷ்ட நாட்கள்:-ஏப். 18மா,19,20.
மே 2ப,3,4,6,7.




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிகராசிக்காரருக்கு இம்மாதம் சூரியபகவான் 6ல் ரஜஸமூர்த்தியாக வலம்வருவது நன்மையாகும், இராசியை வியாழபகவான் சுபதிருஷ்டிசெய்வதும் சிறப்பாகும். பொதுவாக இவர்கட்குத் தேகசுகம் குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானமும் கூடும். காரிய சித்திகளும் பெறுவர். விற்றல் வாங்கல் மூலம் லாபங்களும் கிடைக்கும். தொழில்வசதிகள் சுப

மங்கல கொண்டாட்டங்களும் நிகழச்சாதகமான காலம். எனினும் ஏழரைச்சனீஸ்வரனின் காலமும் தொடருவதால் பந்துசன துன்பம், அவமரியாதை, அலைச்சல், ஏமாற்றம் முதலான பலன்களும் சிலருக்குக் கலந்து நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு வருமானம் கூடும். புத்திரர் உதவிகள் கிடைக்கும். திருமணமாகாதவர்களுக்குத் திருமணமும் நிகழும். இன்சனபந்துக்களின் உதவியொத்தாசைகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். முதலீடுகளிலும் வருமானம் வரத் தொடங்கும். பழைய நிலுவைக் கடன்களையும் அறவிடமுடியும். புதுமுதலீடுகளையும் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் பலம்பெறுவதால் மேலதிகாரிகளின் பாராட்டுகளும் பதவி உயர்ச்சி முதலியனவும் கிடைக்கும். உடன் உத்தியோகத்தவரின் உதவியொத்தாசைகளுமுண்டு.

விவசாயிகளுக்குப் பயிரழிவுகள் ஏற்பட்டாலும் விளைச்சலும் கணிசமாகக் கூடுதலால் நட்டம்வராது. நல்ல சந்தைவாய்ப்பும் கிட்டும். இவர்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்.

தொழிலாளர் பிணக்குகள் பெரும்பாலும் குறைவுறும். ஓரளவு வேலைவசதிகளும் பெறுவர். தொழிலாளர் வேலைகொள்ளுவோர் கருத்து ஒற்றுமையும் வளரும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்வியூக்கம் வளரும். மாணவர் மத்தியில் சுயமுயற்சியும் ஆசிரியர் ஒத்துழைப்பும் உண்டாவதால் பரீட்சைகளிலும் சித்தியடைவர். குறிப்பாகச் சட்டத்துறை மாணவர்களின் கல்வி சிறப்படையலாம்.

பெண்களுக்கு செவ்வாய் 7-ம், 8-ம், இடங்களில் சஞ்சரிப்பதால் சில சிக்கல்கள் அவ்வப்போது தோன்றி மறையும். எனினும் கன்னிப் பெண்களின் விவாகமுயற்சிகள் பெரும்பாலும் சித்தியாகும். குடும்பப் பெண்களுக்குக் குடும்ப பாரம அதிகரிக்கும்,

அதிஷ்ட நாட்கள்:- ஏப். 14,19,20ப,28,29.
மே 2,3,11,12.

துரதிஷ்ட நாட்கள்:-ஏப். 20இ,21,22.
மே 4,5,8,9.



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 5ல் லோகமூர்த்தியாகப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்கிறார். மற்றும் பிரதான கிரகங்களான வியாழபகவான் சனி ஆகியவர்களின் கோசார சஞ்சாரமும் பாதகமாக அமைவதும் இவர்களின் துரதிஷ்டமே! பொதுவாக இவர்களின் உடல்நலம் குடும்பநலம் என்பன இடைக்கிடை பாதிப்படையச் செய்யும். எந்த முயற்சிகளிலும் தடை தாமதங்களும் ஏமாற்றங்களும் ஏற்படுதலால் மனக்குழப்பமும் அடைவர். இனசனப்பகைவிரோதம், நீசர் உறவு, முதலானவற்றுடன் பொருள் இழப்புக்களும் ஏற்படக்கூடும்.

குடும்பத்தில் சச்சரவுகள் இடைக்கிடை தோன்றி மறையும். குடும்பவருமானம் பெருமளவில் குன்றும். தாரபுத்திரர் சுகக்குறைவும் ஏற்படலாம். கடன்பழு ஏறுவதுடன் இவர்களின் வாழ்க்கைத்தரமும் குறையும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளின் வருமானம் வீழ்ச்சியுறும். நிதி இருப்புக் குறைவதால் நிதி நெருக்கடிகளும் ஏற்படும். ஊழியர்கள்கூடச் சமயத்தில் காலைவாரினாலும் ஆச்சரியமில்லை.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழுவும் பொறுப்புக்களும் ஏறிக்கொண்டே போகும். மேலதிகாரிகளின் கெடுபிடிகளும் அதிகரிக்கும், பதவி இறக்கம் அல்லது பதவிநீக்கம் கூடச் சிலருக்குக் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்சேதம் அதிகரிக்கும். விளைவும் குன்றும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் ஏற்படும். கூலியாட்களின் ஒத்துழைப்புக் கிடைப்பதும் கஷ்டம். இவர்களின் வாழ்க்கைத் தரமும் குன்றும்.

தொழிலாளர் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் விசுவரூபம் எடுக்கும்; இவர்களின் நாளாந்த சீவனத்துக்கே வருமானம் பெறுவதும் கடினம். ஒப்பந்த வேலைகளிலும் நட்டமேற்படும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் பெரும்பாலும் தடைப்படும். ஆசிரியர்-மாணவர் மத்தியில்

பிணக்குகள் ஏற்படும். சுயமுயற்சி உடையவர்கள் தவிர மற்றவர்கள் பரீட்சைகளில் தேர்ச்சி பெறுவதும் சந்தேகமே!

பெண்களுக்குப் பெரும்பாலும் ஏமாற்றம் தரும் சம்பவங்களே நிகழும். கன்னிப் பெண்களின் விவாகமுயற்சிகள் கேள்விக்குறியில் இருக்கும்.

அதிஷ்டநாட்கள்: ஏப். 16,17,21,22,26,27,30ப.
மே. 1,4பக.5,13,14

துரதிஷ்டநாட்கள்: ஏப். 14,15பக.23பக24,25பக.
மே. 6பக.7,8கா, 11,12




உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1,2

மகரராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 4ல் தாம்ர மூர்த்தியாகப் பலக் குறைவுடன் வலம் வருகின்றார். சூரியன் பலம் குன்றினாலும் வியாழபகவான் சுபகோசார சஞ்சாரத்துடன் கூடிய திருஷ்டியும் இவர்களுக்கு இருப்பதால் நன்மைதீமைகலந்த பலன்களே பெரும்பாலும் நிகழும். தேகசுகம் சீராக இருக்கும். குடும்ப நலம் இடைக்கிடை பாதிக்கப்படும். பொருள் வருமானமும் அதிகரிக்கும். வீடு-வாகனச் சிறப்பு இனசன பந்துக்கள் கூட்டம்-மங்கள கொண்டாட்டங்களும் நிகழும். ஆனால் ஏழரைச்சனியும் சம்பந்தப் படுதலின் பொருள் நட்டம், அலைச்சல், ஏமாற்றம், துக்க சம்பவங்கள் முதலியனவும் சிலருக்கு கலந்து நிகழும்.

குடும்ப வருமானம் திருப்திதரும். கணவர் மனைவியர் மத்தியில் சிறுசிறு பிணக்குகளும் அவ்வப்போது தோன்றிமறையும். பெரியவர்கள் ஆசியும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் வரத்தொடங்கும். பழைய நிலுவைக் கடன்களும் அறவிடமுடியும். நிதிநிலையும் முன்னேற்றம் பெறும். பெரியவர்கள் ஆசியும் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் குன்றுவதால்! அதிகாரிகளுடன் கருத்து மாறுபாடுகள் அடிக்கடி ஏற்படும்; சகஉத்தியோகத்தரின் உதவிகள் ஆறுதல் தரும்.

விவசாயிகளுக்கு இயற்கை-செயற்கை ஏதுக்களால் பயிர்ச்சேதம் ஏற்படும். விளைவும் குன்றும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் கூடும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடையாது.

தொழிலாளருக்குப் பெரும்பாலும் வேலைவாய்ப்புக்கள் கிடைப்பது அரிது. கிடைக்கும் வேலைகளுக்கும் உரிய ஊதியம் பெறுவதும் கடினம். நாளாந்த சீவியமும் பாதிப்படையும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். ஆசிரியர்-மாணவர் மத்தியில் நல்லுறவு வளர்வதால் கல்வி ஊக்கம் கூடுவதுடன் பரீட்சைகளில் திறமைச் சித்திகளும் பெறுவர்.

பெண்களுக்குப் பெரும்பாலும் இந்தமாதமும் எண்ணங்களை நிறைவேற்றச் சாதகமான சந்தர்ப்ப சூழ்நிலைகள் உண்டாகும். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகளும் கைகூடும்.

அதிஷ்டநாட்கள்: ஏப். 18பக,19,24,28,29
மே. 2பக.3,6பக.7

துரதிஷ்டநாட்கள்: ஏப். 16,17,18கா.26,27
மே: 8பக.9,13,14




அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

கும்பராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 3ல் சுவர்ணமூர்த்தியாகப் பலத்துடன் வலம்வருவது நன்மையாகும். கடந்தகாலங்களிலும் பார்க்க இந்தமாதம் இவர்களுக்குப் புதிய தென்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். தேகசுகம் குடும்பசுகம் என்பன சிறப்பாக இருக்கும். வீடு, வாகன வசதிகள் கூடச் சிலருக்குக் கிடைக்கும். வீட்டில் மகிழ்ச்சியும் மனநிறைவைத்தரும். காரியசித்தியும் பெறுவர்; உறவினர் பற்றிய சந்தோஷசெய்திகள் இனபந்துக்கள் கூட்டம், விற்றல் வாங்கல் மூலம் லாபம், முதலானவையும் பெறுவர். 4,5ல் செவ்வாய் சஞ்சரித்தலின் எதிர்பாராத திடீர்நெருக்கடிகள், புத்திரர், சகோதரர் துன்பம், பொருள்நட்டம், முதலானவையும் சிலருக்கு ஏற்படவும்கூடும்.

குடும்பத்தில் பெரும்பாலும் மனநிறைவு தோன்றும்; குடும்பவருமானமும் கூடும். குடும்பத்

தில் மங்கல கொண்டாட்டங்கள்கூட நிகழும். இவர்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் வரத்தொடங்கும். தானியவகை, எண்ணெய்வகை வியாபாரிகள் எதிர்பாராத அதிகலாபம் பெறுவர். புதுமுதலீடுகளையும் செய்யலாம்.

உத்தியோ[illegible]களுக்குச் சூரியன்பலம் பெறுவதால் பதவிஉயர்ச்சி, பதவிச்சிறப்புக்கள் கிடைக்கும். சிலருக்கு மனநிறைவான இடமாற்றங்கள் கூடக்கிடைக்கும். வாழ்க்கைத்தரமும் உயரும்.

விவசாயிகளுக்குப் பயிர்உற்பத்தியும் விளைவும் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் பெறும். விவசாயப்பண்ணைகளில் லாபம் அதிகரிக்கும். இவர்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்.

தொழிலாளர் வேலையில்லாப் பிரச்சனைகள் கூடியவரை நீங்கும். தொழிலாளர் மத்தியில் ஒற்றுமை வளரும். தொழில் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் ஏற்படவும் கூடும். ஒப்பந்தத் தொழில் வேலைகளிலும் நல்ல லாபம் பெறுவர்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். இரசாயனம், பௌதிகத்துறை மாணவர்கள் சிறப்பு முன்னேற்றம் பெறுவர். சிலருக்கு புலமைப் பரிசில்கள்கூடக் கிடைக்கும்.

பெண்களுக்கு எண்ணிய எண்ணியாங்கு நிகழச் சாதகமான சூழ்நிலைகள் உண்டாகும். கன்னிப்பெண்களுக்கு விவாகமுயற்சிகளும் பெரும்பாலும் கைகூடலாம். உத்தியோகப் பெண்களுக்கு நல்ல எதிர்காலம் உதயமாகும்.

அதிஷ்டநாட்கள்:- ஏப்.21,22,26,27,30பக
மே.1,4பக,5,8பக,9

துரதிஷ்டநாட்கள்:- ஏப்.14,15பக,18ப,19,28,29
மே.10பி.ப,11,12




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீன இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 2ல் ரஜஸமூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் மூர்த்திபலம் பெறுவதால் கடந்தகாலங்களிலும் பார்க்க தீமையான பலன்கள் குறைவடைந்து நற்பலன்கள் அதிகரிக்கும். பொதுவாக இவர்களின் உடல் நலம் முன்னேற்றமடையும். பொருள் வருமானமும் கூடும். காரியசித்திகளும் பெறுவர். ஆனால் வியாழபகவானின் குரூர கோசாரசஞ்சாரம் தொடருவதால் காரியத்தடை பொருள்நட்டம், அலைச்சல், ஏமாற்றம், அவமானப்படுதல், குரு முதலான பெரியவர்களைப் பகைத்தல், குடும்பவிரோதம், பழிச்சொல் கேட்டல் முதலானவையும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் சுபாசுபநிகழ்ச்சிகள் கலந்து நிகழும். குடும்பவருமானம் அதிகரித்தாலும் வீண்விரையங்களும் ஏற்படும். புத்திரர் வழிக்கவலைகளும் சிலருக்கு ஏற்படும்.

வர்த்தகர்களுக்குக் கடந்த காலங்களிலும் பார்க்க வியாபாரம் முன்னேற்றம் பெறும். முதலீடுகளில் வருமானம் வரத்தொடங்கும். ஆனால் நிதிநிலையில் பற்றுக்குறைவு ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். ஆனால் பதவி உயர்வு பதவி உறுதிப்படுத்துதல் முதலானவை கேள்விக்குறியிலேயே தொக்கிநிற்கும்.

விவசாயிகளுக்கு எதிர்பார்த்த விளைச்சல் கிடையா விட்டாலும் நட்டம் வராது. விவசாயப்பண்ணைகளிலும் லாபம் குறைந்தாலும் நட்டம் வராது.

தொழிலாளருக்கு சீவனத்துக்குப் போதிய வருமானம் பெறக்கூடியதாக வேலை வசதிகள் கிடைக்கும். ஆலைத்தொழிலாளர், இயந்திரப் பொறியியலாளர்கள் நல்ல வருமானம் பெறுவர்.

மாணவர் கல்வித்தடைகள் நீங்கத் தொடங்கும். மாணவர் மத்தியில் கல்வி ஊக்கம் ஏற்பட்டுக் கல்வி வளர்ச்சி பெறுவர். கலைத்துறை கணித விஞ்ஞானத்துறையினர் சிறப்புச் சித்தியும் பெறுவர்.

பெண்களுக்கு மனக்குழப்பங்கள் ஏற்பட்டாலும் காரியசித்தியும் பெறுவர். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகள் இழுபறியாக முடிவில்லாமல் நீளும். அல்லது தோல்வியடையும், குடும்பப் பெண்களுக்கு குடும்பச் சூழ்நிலை சிலசமயம் கவலைகளையும் தரமுடியும்.

அதிஷ்டநாட்கள்:- ஏப்.14,15பக,24,28,29
மே.2பக,3,6பக,7,8கா

துரதிஷ்டநாட்கள்:- ஏப்.16,17,20இர,21,22,30ப
மே.1,2காலை,13,14.

அனைவருக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

நவநாகரிக டிசைன்களுடன்

உறுதியான நுட்பமான வேலைப்பாட்டுடன் கூடிய
தரமான தங்க, வைர நகைகளுக்கு
நாடவேண்டிய இடம்



ஓடர் நகைகள் குறித்த தவணையில் தரமான முறை
யில் 22கரட் தங்கத்தில் உத்தரவாதத்துடன்
செய்து தரப்படும்.

# வீ. எம். கே.
# தங்கமாளிகை

(தங்க வைர வியாபாரம்)

கண்டி வீதி, சாவகச்சேரி.

அனைவர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

தென்மராட்சியில்

பலசரக்குச் சாமான்கள் பால்மா வகைகள்
மற்றும் பிஸ்கட், சவர்க்கார வகைகள்
போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

**சிறந்த ஸ்தாபனம்**

I
V



# ஸ்ரீ விக்னேஸ்வரா
# ஸ்ரோர்ஸ்

**(பலசரக்கு மாளிகை)**

கண்டி வீதி, சாவகச்சேரி.

# சுக்ல வருஷ பலன்

வே. சின்னத்துரை — நல்லூர்

மேற்படி புத்தாண்டு 13-4-89 வியாழக்கிழமை முன்னிரவு 9-40 க்கு பிறக்கும்போது கீழ்க்காணும் கிரகநிலை அமைகிறது.

| | | | |
|---|---|---|---|
| | சூ<br>பு வெ | வி<br>செ | |
| ரா | இராசி | | சந் |
| | | | கே |
| சனி, நெ<br>யுரே | ல | | |

## பொது உலக பலன்

இலக்கினத்தை வியாழனும் செவ்வாயும் பார்ப்பதால் மக்களிடையே போதாக்குறைவும், அதிருப்திகளும் உண்டாகி, வேலைநிறுத்தம், குழப்பங்கள், தீ வைப்புகள், கொடும் செயல்கள், நோய் துன்பம் உண்டாகும்.

இரண்டாம் வீட்டில் சனி, நெப்டியூன், யுறேனஸ் நிற்பதும், அதைச் செவ்வாய் பார்ப்பதும் விற்பனை, கொள்முதலில் நட்டமும், ஒரு மந்தநிலையும், வங்கிகளில் பணப்புளக்கக் குறைவும், திறைசேரிவருமானம் குன்றுதல் கூடுதலான செல்வம், பொதுச் சொத்து விரயமுண்டாம். பாதுகாப்புக்கு கூடுதலான செலவு ஏற்படும், எதிர்பாரா நஷ்டமும் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் களவு, நேர்மையின்மை ஏற்படும்.

மூன்றும் வீட்டைச் சந்திரன் பார்ப்பதில், போக்குவரத்துப் பகுதி, தபால் பகுதியில் நன்மை உண்டாகும். அங்கு வேலை செய்பவர்களின் சம்பளம், சேவை எல்லாம் கூடும்.

நாலாம் வீட்டில் ராகு நிற்பதும் அதை சனி பார்ப்பதும், மழைவளம் குன்றுதலும் பயிர்வகை நலிவும் கிருஷிகப் பாதிப்பும் ஏற்படும்.

ஐந்தாம் வீட்டை ராகு தாக்குதலால் கலாசார வைபவங்களில் பாதிப்பு, குழந்தைகள், கல்வி, பிறப்புவீதம் எல்லாம் பாதிப்படையும்.

ஆறும் வீட்டில் சூரியன், புதன், வெள்ளி நிற்பது தொழிலாள வர்க்கத்துக்கு நன்மை பயக்கும். அவர்கள் மூளைவளம் நன்றாகும்; கடற்படைக்கு மிக நன்மை பயக்கும்.

ஏழாம் வீட்டில் வியாழனும் செவ்வாயும் நிற்பது பிறநாடுகளுடன் சச்சரவும், சமாதானமின்மையும், யுத்த பீதியுமுண்டானாலும் இவை தவிர்க்கப்படும். திருமணம் கூடுதலாக நடக்கும்.

எட்டாம் வீட்டைச் சனியும், ராகுவும் பார்ப்பதால் உயர்மட்டத்தில் இறப்புக்களையும் வயது முதிர்ந்தவர்களில் கூடுதலானோர் மரணமடைவதையும் காணலாம். அரசாங்கத்தில் முக்கிய ஸ்தானம் வகித்தவர்கள் மரணமடைவார்கள்.

ஒன்பதில் சந்திரன் நிற்பது சமய விடயம் நீதி ஸ்தல விடயம், சட்டம், கப்பல்துறை, வணிகம், விஞ்ஞானம் முதலியவற்றில் முன்னேற்றம் உண்டாக்கும்.

பத்தில் கேது நிற்பது அதை ராகுவும் செவ்வாயும் பார்ப்பது யுத்தபீதி, ஆளும் வர்க்கத்தின் மறைவு, அரசாங்கத்திற்கு பெரிய தலையிடிகள் உண்டாகும்.

பதினொராம் வீட்டை சனியும், வியாழனும் பார்ப்பதால் சனநாயகச் சட்டமாக்கல், வணிகத்துறை விருத்தி, கட்சிப்பிளவுகள் உண்டாகும். மந்திரி சபையில் மாற்றம் நிகழும். அரசுக்குத் துன்பம் நிகழும்.

பன்னிரண்டாம் வீட்டினை சூரியன், புதன் வெள்ளி பார்ப்பது வேலைத்தலங்களில் சச்சரவுகள் முக்கிய உத்தியோகத்தர்களுக்கு அவமரியாதை ஏற்படும். வறுமைச் சட்டத்தில் மாற்றம் ஏற்படும். பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் வன்செயல்களால் பாதிப்பு ஏற்படும்.

## இலங்கை

இந்த நாட்டின் இலக்கினம் கும்பம். இதை ராகுவும் சனியும் தாக்குகின்றன. இது நாட்டில் பெரும் தொந்தரவுகளையும், சீரற்ற நிலைமையையும், மக்களின் அசௌக்கியத்தையும் ஏற்படுத்தும்.

இரண்டாம் வீட்டை ராகு தாக்குதல் நாட்டின் பணநிலை மோசமடையும்.

மூன்றும் வீட்டில் சூரியன், புதன், வெள்ளி நிற்பது அரசாங்க இலாகா தலைவர்களுக்கு நற்சேமமுண்டாம். பிரயாணங்களுக்கு வசதி வாய்ப்புகள் உண்டாம். ...பகுதி, புத்தகம் வெளியிடுவோர், பத்திரிகையாட்களுக்கு நற்காலமுண்டாம். வருமானம் நன்ருகவிருக்கும். வேலையாட்களுக்கு புதுவித சலுகைகள் ஏற்படும்.

நாலாம் வீட்டில் வியாழனும் செவ்வாயும் நிற்பது, அரசாங்கத்தில் தொந்தரவுகள் உண்டாகும். பகிரங்கக் கட்டிடங்களில் தீப்பற்றிக்கொள்ளும். சுரங்கங்களில் விபத்துகள் உண்டாகும். பூமியதிர்வு உண்டாகும். நிலம், கிருஷிகம் பாதிக்கப்படும், கட்டடம் கட்டும் தொழில், ஆதன விடயங்கள் பாதிக்கப்படும். ஆயினும் மேற்படி கெடுதிகள் அவ்வளவாகப் பாதிக்காது.

ஐந்தாம் வீட்டை சனி, ராகு பார்ப்பது பிறப்பு விகிதம் குறையும். பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் தொந்தரவுகள் உண்டாகும். வருத்தங்களும் இறப்பு விகிதம் கூடுதலும் உண்டாகும். களியாட்டங்களில் கேடு விளையும்.

ஆறும் வீட்டில் சந்திரன் நிற்பது பொது சனங்கள் நோயினுல் பீடிக்கப்படுவதும், திருப்தியின்மை, நிறைவில்லாமை உண்டாகும்.

ஏழாம் வீட்டில் கேது நிற்பதும் அதை ராகு பார்ப்பதும் செவ்வாய் பார்ப்பதும் பிறநாட்டு தொடர்புகள் பாதிப்படைவதையும், யுத்தநிலை ஏற்படுவதையும், விவாகப் பிரிவினை கூடுதலையும் காட்டும்.

எட்டாம்வீட்டை வியாழனும் சனியும் பார்ப்பது இறப்பு வரியால் பணம் சேர்வதையும். ஆளுநர், சட்டம், சமய குரவர்—நீதிவான்மார், வங்கியாளர்களின் மறைவையும் உண்டாக்கும்.

ஒன்பதாம் வீட்டை சூரியன், புதன், வெள்ளி ராகு பார்ப்பது மதசம்பந்தப்பட்டதும், சட்டமன்றங்கள், கப்பல்துறை, வணிகம் பாதிப்படையும்.

பத்தாம் வீட்டை வியாழன் செவ்வாய் பார்ப்பது போர் நிலை உண்டாவதை தடுக்கும். உயர் மட்டத்தில் மரணம் வருவதையும், தடுக்கும். அரசியலில் தொந்தரவு உண்டானுலும் அவ்வளவு பாதிக்காது.

பதினேராம் வீட்டில் சனி, நெப்ரியூன், யுறேனஸ் நிற்பது நாட்டிற்கு நன்மை பயக்காது. மந்திரிசபை மாற்றங்கள், உண்டாகும். மந்திரிமார் ராஜினாமாச் செய்தலையும் காட்டும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விபத்துக்கள் உண்டாகும். அங்கத்தவர்கள், மந்திரிமார்களுக்கிடையில் இரகசிய சூழ்ச்சிகள் உண்டாகலாம்.

பன்னிரண்டாம் வீட்டை சந்திரனும் வியாழனும் பார்ப்பது வேலைத்தலங்களிலும், பகிரங்க ஸ்தாபனங்களிலும் நன்மை உண்டாகும்.

## தமிழர்களுக்கு

தமிழர்களுடைய இலக்கினம் மேடம், அங்கு சூரியன், புதன், வெள்ளி நிற்பது தமிழர்களுக்கு சுபீட்சம் உண்டாகும். அவர்களுக்கு பல நன்மைகள் கிடைக்கும். வணிகம் புதிய முயற்சியில் தமிழர் ஈடுபடுவார்கள். தமிழர்கள் கல்வியில் முன்னேறுவார்கள். சமாதானம் நிலவும் திருப்தி ஏற்படும்.

இரண்டாம் வீட்டில் வியாழனும் செவ்வாயும் நிற்பது பணமுடை ஏற்பட்டாலும் பிறநாடுகளின் உதவிகள் கிட்டும்.

மூன்றும் வீட்டை ராகு சனி தாக்குதல் வேலையாட்களுக்குள் அதிருப்தி, வணிக மந்தம், தொடர்பு சாதனங்களால் நஷ்டம் ஏற்படும்.

நாலாம் வீட்டில் சந்திரன் நிற்பது கிருஷிக விருத்தி, சீதோஷ்ணநிலை மாறுதலடையும்.

ஐந்தாம் வீடு ராகு, கேது தாக்குதல் களியாட்டங்களில் பாதிப்பு பிறப்பு விகிதம் குன்றுதல், கல்வி பாதிப்பு ஏற்படும்.

ஆறும் வீட்டை வியாழன் சனி தாக்குதல் பல நோய் துன்பத்துக்கு ஆளானுலும் மோசமாக பாதிக்காது,

ஏழாம் வீட்டை ராகு பார்ப்பது பிற சமூகங்களுடன் தொடர்புகள் பாதிப்படையும்.

எட்டாம் வீட்டை வியாழன் செவ்வாய் தாக்குதல் சடுதி மரணங்கள், எதிர்பாராதசம்பவங்கள் இடையூறுகள்என்பவற்றைக் காட்டும். எனினும் எதிர்பார்த்த அளவுக்கு பாதிப்பு ஏற்படாது.

ஒன்பதாம் வீட்டில் சனி, செவ்வாய், நெப்டியூன், யுறேனஸ் பாதிப்பு, மதம், சட்டம், சம்பந்தமுடையவற்றில் பாதிப்பு ஏற்படும். கப்பலில்

(22ம் பக்கம் பார்க்க)

# சுக்ல வருஷத்தில் உங்கள் பலாபலன்கள்

''ஜெகதீஸ்''

## மேடம்

இவ்விராசியினருக்கு சுக்ல வருடத்தில் பிரதான கிரகங்களான குரு, சனி என்பவற்றின் சஞ்சாரங்கள் நன்மையானதாகவே இருக்கின்றன. குடும்பசுகம், தேகசுகம் என்பன நன்முக அமையும். எண்ணிய கருமங்கள் எண்ணியாங்கு கைகூடும். உத்தியோகத்தர்கட்கு தொழில்துறையில் முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும், பாராட்டும் கிட்டும். வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். கறுப்புச்சந்தை வியாபாரம் கூடிய பலிதமளிக்கும். அந்நிய நாட்டுடன் தொடர்புடைய வியாபாரங்கள் அதிக லாபத்தைத் தரும். 1-7-89ல் குரு பகவான் 3-ம் இடத்துக்கு மாற்றமடைவதால் அதன்பின் நற்பலன்கள் சற்றுக் குறைந்தே காணப்படும். திருமணத்தை எதிர்நோக்கியிருப்போருக்கு வருட முற்பகுதி சாதகமான பலனைத்தரும். பிற்பகுதி சிறப்பானதல்ல. கொடுக்கல், வாங்கல் விடயங்களில் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். மாணவர்கட்கு வருட முற்பகுதியில் கல்வி முன்னேற்றம் நன்முக அமையும். பின் விடாமுயற்சி வேண்டும். 20-3-90இல் சனி பகவான் 10-ம் இடத்துக்கு மாற்றமடைகின்ருர். இதன்பின் தொழில்துறையில் அலைச்சல், பிரயாசை அதிகமாகும்.

## இடபம்

இவர்கட்கு அட்டமத்துச் சனியும், ஜன்மத்து வியாழனும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வருட ஆரம்பத்தில் பலவகையிலும் கஷ்டபலன்களே நிகழ ஏதுவாகும். குடும்பசுகம், தேகசுகம் என்பன திருப்திகரமாக இருக்காது. உத்தியோகத்துறையினருக்கு வேலைப்பழு அதிகரிக்கும். மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். வருமானம் நன்முக அமையாது. வியாபாரிகட்கு வியாபாரம் திருப்தியளிக்காது. லாபத்திற்குப் பதிலாக நட்டம் ஏற்படும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் பிணக்குகற் தோன்றும். திருமணத்தை எதிர்நோக்கியிருப்போருக்கு வருட முற்பகுதியில் அலைச்சலும், ஏமாற்றமும் ஏற்படும் 1-7-89இல் குருபகவான் 2-ம் இடத்துக்கு மாற்மடைவதால் அன்பின் படிப்படியாக நற்பலன்கள் ஏற்பட இடமுண்டு. விவசாயிகளுக்கு விவசாயம் எதிர்பார்த்த பலனை அளிக்காது. மாணவர்கட்கு கல்வியில் அக்கறையின்மையும், வெறுப்பும் ஏற்படும். வியாழ மாற்றத்தின்மேல் நன்மையுண்டு. 20-3-90ல் அட்டமத்துச் சனியும் நீங்கப்பெறும். இவ்விராசியினர் குரு, சனி என்பனவற்றுக்கு வழிபாடு மேற்சொள்வது நன்று.

## மிதுனம்

இந்த இராசியில் ஜனித்தவர்களுக்கு குரு, சனி ஆகியவற்றின் சஞ்சாரங்கள் நன்மைபயக்கத்தக்கதாக இல்லை. 7-ல் சனி இருப்பதால் குடும்பத்தில் கணவன்-மனைவி உறவில் விரிசலுண்டாகும். தேகசுகமும் அடிக்கடி பாதிக்கப்படும். உத்தியோகத்தர்களுக்கு மனநிம்மதி குன்றியிருக்கும். வேலைப்பழு அதிகமாவதுடன் வருமானமும் குறைவுறவே செய்யும். வியாபாரிகட்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும், பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதியமுதலீடுகளையும் தவிர்த்துக் கொள்வது நன்று. கொடுக்கல், வாங்கல் விடயங்களில் சிக்கல்கள் தோன்றும். கணக்கு நிலுவைகளும் உரிய காலத்தில் கைக்கு கிட்டாது. விவசாயிகட்கு விவசாயம் ஏமாற்றத்தையேதரும். திருமணமாகாதவர்கட்கு மணவாழ்க்கை நினைப்பதற்கு மாருகவே இருக்கும். மாணவர்கட்கு கல்வித்துறையில் நன்மையான பலன்கள் கிடைக்கமாட்டாது. பரீட்சைப் பெறுபேறுகளும் திருப்தியளிக்காது. 1-7-89 இல் குருபகவான் ஜன்மராசிச்குப் பிரவேசிக்கின்ருர். 20-3-90இல் அட்டமத்துச்சனி ஆரம்பமாகின்றது. எனவே துர்ப்பலனகள் தொடர்ந்த

வண்ணம் இருக்கும். வழிபாடுகளை மேற்கொண்டு வரவும்; நன்மை பயக்கும்.

## கடகம்

இவ்விராசியினருக்கு சிறப்பானதாகவே இவ்வருடம் அமைகின்றது. குருபகவான் லாபஸ்தானத்திலும், [illegible]லும் சஞ்சரிப்பது நற்பலன்களுக்கு ஏதுவானதாகும். தேகசுகம், குடும்பசுகம் என்பன நன்ருக இருக்கும். உத்தியோகத்தர்கட்கு தொழில் விடயத்தில் உயர்ச்சி, பாராட்டு, வருமானம் என்பன திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகட்கு வியாபாரம் பலிதமளிக்கும். கறுப்பு மார்கட் வியாபாரம் செய்வோர் கூடிய நன்மையடைவர். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சுமுகமாக இருக்கும். விவசாயிகட்கு பயிர்கள் நன்கு வளர்ந்து நல்ல விளைச்சலைத்தரும். திருமணமாகாதவர்கட்கு வருடமுற்பகுதி வாய்ப்பானதாகத் தெரிகின்றது. பிற்பகுதி தாமத பலனையேதரும். மாணவர்கட்கு கல்வித்துறையில் ஈடுபாடும், முன்னேற்றமும் உண்டாகும். பரீட்சைகளில் சித்தியும் பாராட்டுதல்களும் கிடைக்கலாகும். 1-7-89இல் வியாழன் 12-ம் இடத்துக்கு மாறுதலடைவதால் நற்பலன்கள் சற்றுக் குறைந்து காணப்படும். 20-3-89-ல் சனீஸ்வரன் 7-ம் இராசிக்கு மாறுதலடைகின்ருர். இதன்பின் நற்பலன்கள் குன்றி கஷ்டபலன்கள் அதிகரிக்க ஏதுவாகும்.

## சிங்கம்

இவர்களுக்கு இவ்வருடம் சனிபகவான் 5-ம் வீட்டிலும், குரு 10இலும் சஞ்சரிக்கின்றன. வருடமுற்பகுதியில் நிம்மதிக்குறைவு, மனச்சஞ்சலம் என்பன இருக்கும். தேகசுகம் அடிக்கடி பாதிப்படையும். உத்தியோகத்தர்கட்கும் வருட முற்பகுதி அலைச்சலையும், பிரயாசையையும் ஏற்படுத்தும். வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். தேங்கிக்கிடந்த முதலீடுகள் யாவும் விலைபோகும். 1-7-89 இல் குருபகவான் லாபஸ்தானத்துக்கு மாற்றமடைவதால் தொழில் மேன்மை, பதவியுயர்வு, லாபம் போன்றன ஏற்படலாகும். கொடுக்கல். வாங்கல் விடயங்களில் சுமுகமான நிலை தென்படும். விவசாயிகட்கு விவசாயம் சிறப்பான பலனைத்தரும். திருமணமாகாதவர்கட்கு 1-7-89 இன் மேல் விவாகப்பலன் கிடைக்க இடமுண்டு. இருப்பினும் விடாமுயற்சி வேண்டும். மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றமும், வெற்றியும் கிட்டும். பரீட்சைகளிற் சித்தியும், பாராட்டுதல்களும் கிடைக்கப்பெறும். 20-3-90 இல் சனிபகவான் 6-ம் வீட்டுக்கு மாற்றமடைவதும் நற்பலனைக் கொடுக்க ஏதுவானதாகவே தெரிகின்றது.

## கன்னி

இவ்விராசியில் ஜனித்தவர்கட்கு சனிபகவான் 4-லும், குரு 9-லும் சஞ்சரிப்பது நன்மையானதாகவே இருக்கின்றது. தேகசுகம், குடும்பசுகம் என்பன திருப்திகரமாக அமையும். 1-7-89-இல் குரு 10-ம் வீட்டுக்கு மாற்றமடைகின்ருர். அதன்பின் தொழில்துறை முதலியனவற்றில் வேலைப்பழு அதிகரித்தல், வசதியற்ற இடமாற்றம், மேலதிகாரிகளுடன் சச்சரவு போன்றன உண்டாகும். வியாபாரிகட்கு வியாபாரம் நன்கு நடைபெறினும் லாபம் கிடைப்பது கடினமாகவே இருக்கும். விவசாயிகட்கு பயிர்பலிதம் குறைவாகவே அமையும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் இழுபறிநிலை தொடரும். நிதி நிலைமையில் சிக்கல்கள் உண்டாகும். விவாகமாகதவர்கட்கு விவாக வாழ்க்கையில் ஏமாற்றமும், விரக்தியும் ஏற்படலாகும். மாணவர்கட்கு கல்வித்துறையில் முன்னேற்றமும் ஈடுபாடும் அதிகரிக்கும். பரீட்சைப்பெறுபேறுகள் சாதகமான நிலையைக் கொடுக்கமாட்டாது. 20-3-90 இல் சனிபகவானும் 5-வீட்டுக்கு மாற்றமடைகின்ருர். இதனுல் மனச்சஞ்சலங்கள் உண்டாகும்.

## துலாம்

இவ்விராசியினருக்கு அட்டமத்துவியாழன் 1-7-89 வரை நிகழ்ந்து கொண்டிருக்கும். சனிபகவான் 3-ல் சஞ்சாரம் செய்கின்றது. வருட ஆரம்பத்தில் மனஅமைதியின்மை, வேலைப்பழு அதிகமாதல், போதிய வருமானமின்மை போன்றன இருப்பினும், 1-7-89 இன்மேல் தொழில் மேன்மை பதவியுயர்வு, லாபம் என்பன நன்ருக அமையும். வசதியான இடமாற்றங்களும் கிட்டலாகும். வியாபாரிகட்கு வியாபாரம் நன்ருக நடக்கும். புது முதலீடுகள் செய்வதற்கும் ஏற்றகாலமாகும் விவசாயிகட்கு விவசாயக்கிரகம் நற்சஞ்சாரம் செய்வது சிறப்பான பலனை அளிக்கும். கொடுக்கல், வாங்கல் பிணக்குகள் சிக்கல்களின்றி நேர்செய்யப்படும் திருமணமாகாதிருந்தவர்கட்கு ஆனி மாதத்தின் பின்னர் எண்ணம்போல் மங்கலவாழ்க்கை கைகூடும். மாணவர்கட்கு கல்வியில் சிறப்பான பலன் கிடைக்கப்பெறும். பரீட்சைப் பெறுபேறுகளும் முன்னேற்றம் தரக்கூடியதாக இருக்கும். இவ்விரா

சியினர் வருட ஆரம்பத்தில் வியாழனுக்கு வழி பாடு மேற்கொண்டு வருதல் நன்று.

## விருச்சிகம்

விருச்சிகராசியில் ஜனனமானவர்களுக்கு ஏழரைச் சனிக் கடைக்கூறு நடைபெறுகின்றது. 1-7-89ல் அட்டமத்து வியாழன் சஞ்சாரம் ஆரம்பிக்கும். பொதுவாக நற்பலன்கள் குறைந்த வருடமாகவே இருக்கும். உத்தியோகத்தர்கட்கு தொழில்துறையில் அலைசலும், பிரயாசையும் அதிகமாகும். மேலதிகாரிகளின் வெறுப்புக்கும் ஆளாக நேரிடும். வசதியற்ற இடமாற்றங்களும் ஏற்படலாகும். வியாபாரிகட்கு வியாபாரம் பலிதமளிக்காது. வாடிக்கையாளரின் ஆதரவும், வருகையும் குன்றும். கொடுக்கல் வாங்கல்களில் சிக்கல்கள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். தேகசுகம் குடும்பசுகம் என்பன அடிக்கடி பாதிப்புறும் விவசாயிகளுக்கு விவசாயம் எதிர்பார்த்த விளைவைக் கொடுக்கமாட்டாது. மணமாகாதவர்கட்கு மணவினை இழுபறி நிலையிலேயே இருக்கும். எடுக்கும் முயற்சிகளும் இலகுவில் கைகூடாது. மாணவர்கட்கு கல்வியில் ஈடுபடும் மனோநிலை இருக்காது. பரீட்சைப் பெறுபேறுகளும் திருப்தியளிக்காது. இவ்விராசியினருக்கு 20-3-90இல் ஏழரைச் சனி நீங்கப்பெறும். சனி, குரு என்பனவற்றிற்கு வழிபாடுகளை மேற்கொண்டுவருதல் நன்மைதரும்.

## தனுசு

இவ்விராசியினருக்கு இவ்வருடம் ஏழரைச் சனி நடந்து கொண்டிக்கும். 1-7-89இல் குருபகவான் 6-ல் இருந்து 7-ம் வீட்டுக்கு மாற்றமடைகின்றார். பொதுவாக இவர்கள் நற்பலன்களை அடைய மாட்டார்கள், உத்தியோகத்தர்கட்கு வேலைப்பழு அதிகரிப்பதோடு அலைச்சலும், பிரயாசையும் கூடுதலாகும். மேலதிகாரிளுடன் கருத்து வேறுபாடுகளும், வசதியற்ற இடமாற்றங்களும் கிடைக்கலாகும். வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்பாக இருக்காது. பழைய முதலீடுகளும் தேக்கிக் கிடக்கும். தேகசுகம், குடும்பசுகம் என்பன அடிக்கடி பாதிக்கப்படும். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சரிவர அமையாது. திருமணமாகாதவர்கட்கு மணவாழ்க்கை எண்ணம்போல் கிடைக்காது. ஆரம்பிக்கும் முயற்சிகளும் வீணே கழியும். விவசாயிகட்கு விவசாயம் நல்ல விளைச்சலைக் கொடுக்காது. செலவுகள் அதிகரிக்கும், மாணவர்கட்கு கல்வியில் நாட்டமிருக்காது. பரீட்சைப் பெறுபேறுகளில் நற்பெறுபேறுகள் கிடைக்கமாட்டாது. இவ்விராசியினர் சனிக்கிழமைகளில் விரதமிருந்து சனீஸ்வரனை நீலப்புஷ்பத்தால் அர்ச்சித்து வழிபடல் வேண்டும்.

## மகரம்

மகரராசியினருக்கு இவ்வருடம் ஏழரைச்சனி நடக்கின்றது. குருபகவானும் 1-7-89இல் 6-ம் வீட்டுக்கு வருகின்றார். எனவே நற்பலன்களிலும் பார்க்க தீய பலன்களே அதிகம் உண்டாகும். உத்தியோகத்தர்கட்கு தொழில்துறையில் கஷ்டபலனேற்படும். வேலைப்பழு அதிகரிக்கும். சகதொழிலாளிகளிடையே மனக்கசப்பு மேலோங்கும். வசதியற்ற இடமாற்றங்களும் ஏற்படலாகும். விவசாயிகளுக்கு விவசாயத்தில் அக்கறை குன்றும். விளைச்சல்களும் பலிதமளிக்காது. குடும்பத்தில் சச்சரவுகளும், கருத்து வேறுபாடுகளும் உண்டாகும். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். திருமணமாகாதவர்கட்கு திருமணம் பலத்த சிரமத்தின்மேல் கைகூடும். 1-7-89இற்கு முன் திருமணத்துக்கு உகந்த காலம். அதன் மேல் தாமதமடையும். மாணவர்கட்கு கல்வியில் புலனைச் செலுத்த முடியாது, விளையாட்டுக்களிலும், கேளிக்கைகளிலும் காலத்தைப் போக்குவர். இவ்விராசியினர் சனிக்கிழமை விரதமனுஷ்டித்து சனிபகவானை வழிபட்டு வருதல் நன்மையளிக்கும்.

## கும்பம்

கும்பராசியில் ஜனித்தோருக்கு சனிபகவான் லாபத்தானத்திலும், குரு 4-இலும் சஞ்சரிக்கின்றன. 1-7-89இல் குருபகவான் 5-ம் வீட்டிற்குப் பிரவேசிக்கின்றார். இவர்களுக்கு இவ்வருடம் சிறப்பான பலன்கள் நடக்க இடமுண்டு. தேகசுகம், குடும்பசுகம் என்பன நன்றாக இருக்கும். உத்தியோகத்தர்கட்கு செல்வாக்கும், மனச்சந்தோஷமும் மேலிடும். வசதியான இடமாற்றம், நல்ல வருவாய் போன்றன கிட்டும். வியாபாரிகட்கு முதலீடுகள் நல்ல லாபத்தைத் தரும். பழைய முதலீடுகளும் பலிதமளிக்கும். கறுப்புமாக்கட் வியாபாரமும் சிறப்படையும். விவசாயிகட்கு பயிர்செய்கையில் ஊக்கமுண்டாகும். விளைச்சலும் பெருகும். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் உரியகாலத்தில் நேர்செய்யப்பட்டுவிடும். திரு

மணத்தை எதிர்பார்த்திருப்போருக்கு திருமணம் இனிது நடைபெறும். மாணவர்கட்கு கல்வியில் ஈடுபாடும், முன்னேற்றமும், பரீட்சைகளில் சித்தியும் கிட்டும். இவ்விராசியினருக்கு 20-3-90 இல் ஏழரைச்சனி ஆரம்பமாகவுள்ளது. அதன்மேல் நற்பலன்கள் குறைந்து காணப்படும்.

## மீனம்

இவ்விராசியினருக்கு சனிபகவான் 10-லும் ஜன்மாதிபதி குரு 3-லும் சஞ்சரிப்பதால் நன்மையான பலன்கள் கிட்ட இடமில்லை. உத்தியோகத்தர்கட்கு தொழில் துறையில் வேலைப்பழு அதிகரித்தலும், நிம்மதிக்குறைவும் ஏற்படலாம். சக உத்தியோகத்தரிடையே மனவேறுபாடுகள் இடம் பெறலாம். வசதியற்ற இடமாற்றங்களும் கிடைக்கும். வியாபாரிகட்கு வியாபாரம் எதிர்பார்த்த முன்னேற்றத்தைத் தராது. கொடுக்கல், வாங்கல் விடயங்களில் மனவேறுபாடுகள் காணப்படும். தேகசுகம், குடும்பசுகம் அடிக்கடி பாதிப்படையக் கூடும். விவசாயிகளுக்கு விவசாயம் எதிர்பார்த்த விளைவைக் கொடுக்காது. திருமணத்தை எதிர்பார்த்திருப்போர்க்கு மணவாழ்க்கை இழுபறிநிலையிலேயே இருக்கும். மாணவர்கட்கு கல்வியில் நாட்டமிருக்காது. ஆசிரியர்களின் அவப்பெயருக்கு ஆளாகநேரிடும். பரீட்சைப்பெறுபேறுகள் சாதகமான முடிவைத்தராது. 1-7-89 இல் குருபகவான் 4-ம் வீட்டுக்கும், சனிபகவான் 20-3-90-ல் 11-ம் வீட்டுக்கும் மாற்றமடைந்தபின் நற்பலன்களை அனுபவிக்க இடமுண்டு.

---

(18-ம் பக்கத்தொடர்ச்சி)

தீவிபத்து ஏற்படும். கப்பல்களுக்கு பாதிப்புண்டு. குண்டு வெடிப்புகள் - விபத்துக்கள் உண்டாகும்.

பத்தாம் வீட்டை சந்திரன் வியாழன் பார்ப்பது அரசினுல் ஸ்திரமும்- ஆட்சியாளருக்கு நன்மையும், நாட்டின் நிலை மகிழ்ச்சியடைதலுமாம்.

பதினொராம் வீட்டில் சனி ராகு தாக்குதல் நோய் துன்பம் இறப்பு அதிகரிக்கும். ஆட்சி மாற்றம் உண்டாகலாம். பலர் ராஜினமாச் செய்யலாம்

பன்னிரண்டாம் வீட்டை ராகு தாக்குதல் ஆஸ்பத்திரி, வேலைத்தலங்கள், இந்த இடங்களில் கொலை களவு, உண்டாகும்.

## இந்தியா

மாநிலங்களில் பல பிரச்சினைகள் உண்டாகும். பஞ்சாப்பிரச்சினை தீர்வதாயில்லை. ஆளும் கட்சி பலயீனப்படும். இலங்கை இந்தியாவை மீறி ஒன்றும் செய்ய முடியாது.

# மேட லக்கின ஆணும் சிங்க லக்கின பெண்ணும் சேர்வது நீமையானதா?

வே. சின்னத்துரை — நல்லூர்

மேடகாரரின் அசையாத நம்பிக்கை சிங்ககாரியைக் கவர்ந்திழுக்கும். அவன் வாழ்க்கையில் அடிக்கடி எதிர்நீச்சல் போடுவது அவளது மரியாதையை ஈர்க்கும். அவனுடைய உணர்ச்சிவசச் செய்கைகள் அநேகமான விடயங்களில் அவளைத் தொந்தரவு பண்ணும். எனினும் அவள் ஏற்ற நடவடிக்கை எடுக்கு முன்னும் ஆழ்ந்த சிந்தித்த பின்புதான் ஒரு முடிபுக்கு வருவாள். இவருடைய அகந்தையும் விசேடமான உணர்ச்சியுள்ளன. தன்னைப்பற்றி மற்றவர்கள் புகழவேண்டும், அதிசயிக்க வேண்டும் என்று அவள் நினைப்பாள். தன்னுடைய பணிகளிலெல்லாம் அவளுடைய ஊக்கம் அவனுக்குத் தேவைப்படும். இவருடைய அகந்தைக்கும் ஊறு வருவதானுல் அதை இருவரும் சகிக்க முடியாமல் பலவந்தத்தில் இறங்குவார்கள். இதனுல் இருவருக்குமிடையில் சர்ச்சைகள் உண்டாகும். நான் என்ற அகம்பாவச் சண்டைகளால் அவர்களுடைய வாழ்க்கை ஷீணிக்கும். அவளுடைய அகந்தை கொஞ்சம் விட்டுக்கொடுக்குமென்றுல் இடையிடையே அவன் வென்று விட்டானென்ற உணர்ச்சியை அவனுக்கு உண்டாக்குவாளானுல் கொஞ்சம் தணியும். இந்த உறவில் வாதிப்புகள் முக்கிய பங்கை வகிக்கும். ஏனென்றுல் இரு பகுதியினரும் சண்டை பிடிப்பதில் ரசனை உள்ளவர்கள். தன்னுடைய தொழிலில் அவளுக்கு பேராவல் உண்டானுலும் அவன் அதற்கு எதிர்மாறல்ல. ஆனுல் இவை அவளுக்கு தன்னுடைய பேராவலிலும் முக்கியமென்பதை அவன் நம்பக்கூடாது.

வாழ்க்கையில் சொகுசை இருவரும் அனுபவிப்பவர்கள், ஆகையால் பொருளாதார தொந்தரவுகள் இருந்தால் இருவருக்கும் பெரிய தொந்தரவுகள் உண்டாகும். இந்தச் சொகுசை விட்டு வாழ இருவரும் துன்பப்படுவார்கள். அவனுடைய பொருளாதாரத் திறமை எவற்றையும் சமாளிக்கும் என்றும் சொல்ல முடியாது. ஆகையால் அவன் கொஞ்சம் கவனமாகவும் யதார்த்தமாகவும் நடந்து கொள்ளவேண்டும்.

இருவரிலுமுள்ள ஆக்கிரமிப்புக் குணம் மேடகாரரின் குரூரதனுடன் சேர்ந்த பாலியலபு, படுக்கையில் பரிமளிக்கும். விசேடமாக நெருப்பான வாதத்தின் பின்பு. அவளை வெறுத்துக் கொண்டே அவளுடன் காதல் லீலை செய்வான். அவர்கள் பாலியல்புகள் சமரசமாயிருக்கவேண்டும். ஆனுல் நினைக்கமுடியாத அளவிற்கு பாலியல் வாழ்க்கை எரிந்து, முடியாதுவிடும். அதை அளவிற்கு கட்டுப்படுத்தாவிடடால் பாதகமே. ஒரு நெருப்பான உறவுதான்.

# எண் சோதிடமும் அதன் உண்மைகளும்

19-12-88ல் நடைபெற்ற இலங்கை ஜனாதிபதித் தேர்தலில், அன்று ஆதிக்கத்தில் காணப்பட்ட ஆளும் எண்களை (2,3,9,8) தொகுத்த போது (Divinate) மூலஎண் ஒன்று கிடைத்தது. இதை வைத்து மாயசதுரச் சாதகமும் (Magic Square Chart) அடிப்படைஎண் சாதகமும் (Basic Chart) தயாரிக்கப்பட்டு வெற்றியீட்டும் வேட்பாளரை முன்கூட்டியே கூறமுடிந்தது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 53 | 62 | 60 | | 8 | 8 | 6 |
| 66 | (82) | (98) | | 3 | 1 | 8 |
| (23 | (21) | 30 | | 5 | 3 | 3 |

மாயசதுரச்சாதகம் அடிப்படைஎண்சாதகம்

இவைகளைத் தயாரிக்கும் விதமும் பலன்கள் கூறும் முறையும் "எண்களும் குதிரைப்பந்தயங்களும்" என்னும் அத்தியாயத்தில் விளக்கப்படும்

— 'பவானி' பருத்தித்துறை —

அடிப்படை எண் சாதகத்தில் காணப்படும் தனி இலக்கங்கள் என்ன கூறுகின்றன?

எண் 1 — சூரியனைக் குறிக்கும்
எண் 3 — குரு
எண் 5 — புதன்
எண் 6 — சுக்கிரன்
எண் 8 — சனி

தேர்தலில் ஸ்ரீமாவோபண்டாரநாயக்காவுக்கும் R. பிரேமதாசவுக்கும்தான் போட்டி ஏற்பட்டது. அக்காலை அவர்களுக்கு நடைபெற்ற தசா புத்தி அந்தரகாலங்களை அடிப்படை எண்சாதகம் துல்லியமாகக் காட்டுகின்றது.

ஸ்ரீமாவோபண்டாரநாயக்காவுக்கு புதன் தசை (எண்5) குருபுத்தி (எண்3) சூரிய அந்தரம் (எண்1) 19-12-1988 தொடக்கம் 30-1-1989 வரையும் நடைபெறும், அடுத்து சந்திர அந்தரம் 8-4-1989 வரையும் நடைபெறும். இதே வேளையில் புதன், சுக்கிரன் முதலியோரும் 14-10-1988 தொடக்கம் 9-3-1989 வரையும் ஆதிக்கம் தொடர்வார்கள்.

ஆர். பிரேமதாசாவுக்கு சுக்கிரதசை (எண்6 குருபுத்தி (எண்3) சனி அந்தரம் (எண்8) 6-9-1988 தொடக்கம் 8-2-1989 வரையும் நடைபெறும். இதேவேளையில் இவர் சனி, சூரியன், செவ்வாய் சுக்கிரன் முதலியோரின் ஆதிக்கத்திலும் காணப்படுகின்றார்.

சோதிடம் ஒருபெரிய ஆலமரம். அதன் சிறு விழுதுதான் எண்சோதிடம். எனவே சோதிடம் தெரியாதவன் எண் சோதிடத்தை கையாள்வது பெரும் முட்டாள் தனம்.

சரியாக ஜனனசாதகம் கணிக்கத் தெரியாதவர்கள்கூட இன்று சோதிடப்பலன் கூறத்தொடங்கிவிட்டார்கள். அப்படியானால் எண் சோதிடத்தின் கதி என்னவாகும்?

இவர்கள் பின்பற்றும் நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்சோதிடப்பலனை சிறிது அவதானிப்போம். அந்நூலின் ஆசிரியரோ அல்லது அதைப் பின்பற்றும் சோதிடர்கள், அபிமானிகள், வாசகர்கள் எவரும் விளக்கம் தரலாம். தரமான விளக்கத்திற்கு யான் பரிசில் வழங்கவும் தயாராக உள்ளேன்.

எண்சோதிடப்பலன் கேள்வி இதுதான்! அந்நூலில் (1965-ம் ஆண்டுப்பதிப்பு) பக்கம் 205:- "எண் 17:- பெயர் இந்த எண்ணாகவந்தால் அசுரத்தன்மை உண்டாகும். பூர்ணமாக சுக்ர ஆதிக்கம்போல் தோன்றுவதால் சில பழைய நூல்களில் இதை சுக்கிரனைச் சார்ந்ததாக வர்ணித்து இருக்கின்றனர். (ஜோதிடம் அறிந்தோர், சனி சுக்ரனது வீடாகிய துலாராசியில் உச்சமாக இருப்பதை உணர்வர்.) ஆனால் இது சனி பூர்ணபலத்துடன் விளங்குவதையே குறிக்கிறது. இவ்வெண்ணைப் பெயராகவுடையவர் பலவித கஷ்டங்களுக்கும் சோதனைகளுக்கும் உள்ளாவார்கள். ஆனால் மறுபடி, மறுபடி சளைக்காமல் போராடுவார்கள். (சொட்டிய இரத்தத் துளிகளிலிருந்து இராக்கதர்கள் தோன்றியதாகப் படித்திருக்கலாம்) தோல்வியை அலட்சியம்செய்து மீண்டும் போரிடவல்ல

வர் இவர் ஒருவரே. முடிவில் எல்லா எதிர்ப்புகளையும் வென்று மிகுந்த சக்திமானாக வாழ்வார். இவ்வெண் சித்திகளைத் தரவல்லது. ஏராளமான ஐஸ்வரியமும் காலத்தினால் மங்காத புகழும் ஏற்படும். உலகப்பிரசித்தமான காரியங்களைச்செய்து விடுவார்கள். தன் லக்ஷ்யத்தை அடைய உயிரையும் உடலையும் சிறிதும் பொருட்படுத்தாமல் உழைத்து வெற்றியை அடைவார்கள். உலகம் இவர்களை மறக்கமுடியாது.''

மீண்டும் ஒருமுறை வாசித்துப் பாருங்கள்.

இப்பொழுது எண்கள் 17, 71 முதலியவற்றைக் கவனியுங்கள். இரண்டு எண்களும் எண் 8 இன் ஆதிக்கத்தில் உள. ஆனால் இவைகளின் பலன்கள் மட்டும் வெவ்வேறுவிதமாக அமைந்துள்ளன. இந்த முரண்பாடு ஏன்?

கேயிரோ (Cheiro) எழுதிய புத்தகத்தைத் தான் முதலில் படித்தேன். அதுவே என்னை இக்கலையில் (விஞ்ஞானமல்ல) ஆர்வமுள்ளவனாகச் செய்தது'' என்று தனது குருவையும் குறிப்பிடுகின்றார் திரு. சேதுராமன். கேயிரோ ''எண்கள் 33,34,35,36,38,39,49 ஆகியவை யாவும் (இன்னும் பல எண்கள் உள) முறையே எண்கள் 24, 25,26,27,29,30,31 முதலியோரின் பலன்களை பிரதிபலிப்பதாகக் கூறுகின்றார்.''

இவரோ ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வேறுவிதமான பலன்களை எழுதியிருக்கின்றார்.

இதில் எவருடைய முறை சரியானது காரணம் என்ன?

''எண் பதினேழு பூரணமாக சுக்கிர ஆதிக்கம் போல் தோன்றுகின்றதாம்'' கேயிரோவும் இதைத்தான் கூறுகின்றார். ''and is expressed in Symbolism by the 8-pointed star of Venus;'' அப்படியானால் எண் 71ல் சுக்ரஆதிக்கமில்லையா?

இவருடைய அறிவும் ஆராய்ச்சியும் என்ன சொல்கின்றன?

''சில பழைய நூல்களில் இதை சுக்கிரனைச் சார்ந்ததாக வர்ணித்து இருக்கின்றன''

அந்த பழையநூல்கள் யாவை? அவை என்ன காரணங்கள் கூறுகின்றன? காரணம் இல்லாமல் காரியமா? காரியமில்லாமல் காரணமா?

கடவுள் (அன்னை), மதம் ஆகியவற்றைப் பயன்படுத்திக்கொண்டதுபோல் இதில் சிலபழைய நூல்களும் பயன்படுத்தப்படுகின்றன.

''சோதிடமறிந்தோர் சனி, சுக்ரனது வீடாகிய துலாராசியில் உச்சமாக இருப்பதை உணர்வர்'' எவ்வளவு பெரிய உண்மை! எண் சோதிடத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டுமாயின் கிரகசோதிடம் தெரிந்திருத்தல் வேண்டும்.

இவரின் விளக்கம் எண் 17க்கு மட்டும் தான் பொருந்துமா? எண் 71குக் பொருந்தாதா? விளக்கம் இலவம் பஞ்சுபோல் அடிபட்டுப்போகின்றது.

எண் 11ல் சுக்ர ஆதிக்கம் இல்லையா? சோதிடம் அறிந்தோர் (11-2-சந்திரன்) சந்திரன் சுக்ரனது வீடாகிய இடபராசியில் உச்சமடைவதை உணர்வார்.

எண் 15ல் குருவின் ஆதிக்கம் இல்லையா? (15—6) சுக்ரன், குருவின் வீடாகிய மீனராசியில் உச்சமடைவதை உணர்வார். அதனால் எண் 15ல் குருவின் ஆதிக்கம் உண்டுதானே?

எண்சோதிட எழுத்தாளர்களோ, வாசகர்களோ மேற்கூறியவைகளுக்கு விளக்கம் அளிப்பார்களா? எண்சோதிடத்தின் பலன்களுக்குரிய விளக்கங்கள் உண்மைதானா? எவ்வளவுதூரம் உண்மை? சொல்லுங்கள்!

உங்களால் முடியாது! வேண்டுமானால் வேறு பாணியில் அதே கருத்தைக் கூறலாம். ஆனால் கருத்துக்கள் யாவும் ஒன்றுதான். கறந்தபால் முலைக்கு ஏறாது!

கருடன் பறக்கிறவானத்தில் கொசுவுந்தானே பறக்கிறது. அதனால் நீங்களும் ஏதாவது சொல்லுங்கள்?

பொதுமகளிர் தங்கள் கூந்தலைப் பலப்பலவாறு முடிப்பதில் வல்லவர்கள். அவ்வாறு அழகாகக் குழலைமுடிந்து மயக்கத்தை ஊட்டுவர். அதனால் பிறர் ஈரும் பேனும் அறியார். இவர்களிடத்தில் பகுத்தறிவு, விஞ்ஞான உண்மைகள், ஆராய்ச்சி எதுவும் கிடையாது. அன்று கூறியதை திரும்பத் திரும்ப புதியபாணியில் கூறுவர்.

நான் ஆழ்ந்த ஆராய்ச்சியிலும், அறிவிலும் அனுபவத்திலும் கண்ட உண்மைகளைக் கூறுகின்றேன். சோதனைகளும் நெருக்கடிகளும் தோன்றும்போதும் நான் கூறும் உண்மைகள் அழியாதவை. (தொடரும்)

---

முக்கிய குறிப்பு:-

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும்; கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். ஆ-ர்

---

அனைவர்க்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உங்களுக்குத் தேவையான

- சிமெந்து, மற்றும் கட்டிடப் பொருட்கள்
- பெயின்ற் வகைகள்
- செரமிக்ஸ் பொருட்கள்
- இரும்புச் சாமான்கள்

அனைத்தையும் ஒருங்கே பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

# முருகன் ஹாட்வெயர்
# MURUGAN HARDWARE

360, கண்டி வீதி, சாவகச்சேரி.




துரித சலவைக்கும், பளிச்சிடும் வெண்மைக்கும் நீலம் கலந்த மில்க்வைற் சலவைப்பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.

50 கிராம் சிறிய பைக்கற் ஒன்று ரூபா **2-50** மட்டுமே.

'மில்க்வைற் சலவைப்பவுடர்' பல அளவுகளில் எங்கும் விற்பனையாகின்றது.

பாவித்த வெற்றுப் பைக்கற்றுகளை சேகரித்து அனுப்பி பல உயரிய பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

# சுமதி வீடியோ கிளப்

உங்கள் இல்லங்களில் நிகழும் மங்கள வைபவங்களை
சிறந்த முறையில் நவீன வீடியோ
கமெராக்கள் மூலம் வீடியோப்படம் பிடித்திடவும்
உங்கள் ரசனைக்கேற்ப பழைய, புதிய
தமிழ், ஆங்கில, ஹிந்தி திரைப்படங்களை
வி. ஜி. பி. தொம்சன், பிரமிட் போன்ற
சிறந்த வீடியோ படப் பிரதிகளில் மூலப் பிரதிகளை
பெற்றுக் கொள்ளவும்

**நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்**



# சுமதி வீடியோ கிளப்

**கண்டி வீதி,** (இலங்கை வங்கி அருகில்) **சாவகச்சேரி.**

வாடிக்கையாளர்களுக்கு எமது உளம்கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

# ஜெனன பத்ரமும் அதன் மகத்வமும்

கா. சின்னையா, சங்குவாரி—கம்பளை.

"ஆத்மா அழிவற்றது உலகிலுள்ள எந்தப் பொருள்களாலும் அதை அழிக்க முடியாது" -கீதை. அப்படியானால் ஆத்மா என்று கூறப்படும் அப்பொருள் எது? எங்கிருக்கிறது? உருவமென்ன? அழிவற்ற உருவமற்ற எங்கும் வியாபித்துள்ள ஆத்மநாதன் தான் அந்தப்பொருள். அதனால்தான் உலகிலுள்ள எந்த சக்திகளாலும் அதை அழிக்க இயலாது எனக் கீதை கூறுகிறது போலும்.

நமது உடலில் எலும்பும் தசையும் இரத்தமும்தான் இருக்கின்றன. உருவத்தில் நாம் மாறுபாடு உடையவர்களல்ல என்பது உண்மையே. உள்ளத்தில்தான் வேறுபாடு. அதனால்தான் நம்மிடையே வேறுபாடு. உலகில் மனிதர்கள் பலதரப்பட்டவர்கள். உருவம் ஒன்றுபட்டதாயினும் உயிருக்குயிரான இரத்தம் வேறுபாடுடையது. யாவருக்கும் ஒரே ரத்தமாகக் காணப்பட்டாலும் தன்மையில் வேறுபட்டது. அதனால்தான் ஆபத்து வேளைகளில் யார் யாருக்கு எந்தெந்த இரத்தம் பொருந்தும் என்பதை முதலில் ஆராய்ந்த பின்னர் பிரயோகிக்கின்றனர். இரத்தக் கலப்புள்ள ஒரு குடும்பத்திலுள்ளவர்களின் இரத்தம் பெரும்பாலும் ஒரே தன்மை உடையதாக இருக்கும்.

எனவே ஏற்றத்தாழ்வு நம்மால் ஏற்பட்டதில்லை. பூர்வஜென்மகர்மாவுக்குத் தக்கபடி இன்று மனிதன் வாழ்கிறான். மூளையில் உதிக்கும் எண்ணங்களுக்குத் தக்கவாறும் பூர்வீக நிலையும் நமது ஜாதகத்திலும், நமது உள்ளங்கைகளிலும் இரேகை வடிவமாகவும் அமைந்திருக்கின்றன. ஜாதகத்தில் எப்படி இப்பிறப்பையும், முன்பிறவியையும் அடுத்த பிறவியையும் அறிய முடிகிறதோ அதுபோல் பூர்வீக நிலையும் நமது உள்ளங்கைகளில் இரேகை வடிவமாக வரையப்பட்டிருக்கிறது. பூர்வீகநிலை இடதுகையிலும் மனோநிலைக்குத் தக்கவாறு நிகழும் எதிர்கால வாழ்க்கையின் சின்னங்களை வலது கையிலும் காணலாம். இடதுகை ரேகைகள் மாறுவதே இல்லை. ஆனால் வலதுகை ரேகைகள் மாறும் தன்மை உடையவை. கிரகங்களுக்கும் கரங்களின் ரேகைக்கும் நெருங்கிய பந்தமுண்டு. நமது வாழ்வின் அத்யாயம் (விதி) நமது கைகளில் கெற்பத்திலிருக்கும்போதே எழுதப்பட்டு பெயரிடப்பட்டும் விட்டது. அதை மாற்ற யாராலும் முடியாது. விதி என்பது உள்ளங்கைகளில் பரிபாஷையாக எழுதப்பட்டிருக்கிறது. பைபிளில் "தாம் உண்டாக்கின சகல மனிதரும் அறியும்படி அவர் சகல மனுஷருடைய கைகளிலும் முத்தரித்துப் போடுகிறார்" என்றும் "இருக்கிறவன் எவனும் தோன்று முன்னமே பெயரிடப்பெற்றிருக்கிறான். அவன் மனிதன் என்று தெரிந்திருக்கிறது" என்றும் இயேசுநாதரால் கூறப்பட்டிருக்கிறதைக் காண்க. வலது கைக்கும் இடது கைக்கும் கூட வித்தியாசம் காணுவதும் விந்தையே. அதைவிட இடதுகை கட்டைவிரல், இரேகைகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகக் காணப்படுவது மிகவும் ஆச்சரியத்தைத்தரும்.

ஒரு தென்னைமரத்திலுள்ள ஒரே குலையில் பறித்த நான்கு நெற்றுகளை ஒரே இடத்தில் பதித்து முறைப்படி தண்ணீர் விட்டுவர சுமார் நான்கு மாதங்களில் முளை கிளம்பும். பிறகு ஒரே தன்மையான ஒரு செண்டு நிலத்தில் முறைப்படி அவைகளை நட்டு முறைப்படி பாதுகாத்து வரவேண்டியது. அது ஏழு வருடங்கள் கழித்து அந்தத் தென்னம்பிள்ளைகளைக் கவனிக்கவும். ஒன்று காய்க்கும் பருவத்திலிருக்கும். ஒன்று வைத்தபடியே வளர்ச்சி அற்றுப்போயிருக்கும். மற்றொன்று இருந்த இடம் தெரியாமல் அழிந்து போயிருக்கும்.

இதைப்போன்றதுதான் நம்வாழ்வும், தாழ்வும். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றத்தான் செய்கிறான். ஆனால் அதன் வளர்ச்சிகளிலும் பலன் கொடுக்கும் தன்மைகளிலும் ஏற்படும் மாறுதலுக்கும் காரணம்-பூர்வஜென்ம கர்மாவுக்குத் தக்கவாறு இன்று முறையான வழிவகுத்து இறைவன் நம்மை முடுக்கி விடுவதேயாகும்.

இறைவன் உண்டு எனக்கூறும்போது எங்கிருக்கிறான்? எப்படி இருக்கிறான் என்பதைக் கூறமுற்பட்டால் பிரபஞ்சத்தில் அவன் இல்லாத அணுவும் இல்லை. பரமாணுவிற்குள் தனக்கென்று அமைத்துக் கொண்ட நீர்ப்பரப்பில் நீந்தி விளையாடுகிறான். செப்புக்கம்பிகளிலே செல்லும் மின்சாரமாகவும், பஞ்சபூதங்களாகவும் சஞ்சரிக்கிறான். அணுவைப்பிளக்கும் பரமாணுவாகவும், ஜடப்

(27-ம் பக்கம் பார்க்க)

# அதிஷ்ட எண் ஞானம்

— ஓ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். —

(முன்தொடர்ச்சி)

தொடர் 14

பெயரமைப்பதைப்பற்றியும், பெயர் மாற்றுவதைப்பற்றியும் சென்ற தொடர்களில் பார்த்தோம். இன்று மேலும் சில விளக்கங்களை உதாரணங்களுடன் ஆராய்வோம். பெயர் அமையும்போது பெயரின் முதலெழுத்தை தீர்மானிப்பதற்கு ஜனனக்குறியில் வரும் நட்சத்திர முறையில் தெரிவு செய்யலாம். ஜாதகம் இல்லாதவர்கள் எண்ஞான முறைப்படி என்ன எண் ஆதிக்கம் அதாவது பிறப்பு கூட்டு எண்கள் கூடுதலாக இருக்கின்றதோ அந்த எண்ணுக்குரிய எழுத்துக்களை முதலெழுத்தாக அமைத்துக் கொள்ளலாம். P,F,O போன்ற நச்சு எழுத்துக்களையும் அல்லது R,Y,I போன்ற அதிஷ்டமற்ற எழுத்துக்களையும் முதலெழுத்தாகத் தெரிவு செய்யக் கூடாது. T,D,M எழுத்துக்களை முதலெழுத்தாக வைக்கும்பொழுது மிக அவதானமாக பெயரை அமைக்க வேண்டும். இவ்வெழுத்துக்கள் மனிதரை பதட்டமடைய வைக்கும் எழுத்துக்களாகும். அத்துடன் மேற்கூறிய எழுத்துக்கள் ஒருவரின் முழுப்பெயரிலும் அதிகளவு ஆதிக்கம் இல்லாமலும் இருக்க வேண்டும்.

இனி சில உதாரணங்களைப் பார்ப்போம். ஒரு குழந்தை 19-10-1980 காலை 9-05 மணியளவில் பிறந்துள்ளதென வைத்துக் கொள்வோம். அதன் பிறப்பெண் 1 ஆகவும் கூட்டெண் 2 ஆகவும் வருகின்றது. அட்டவணைகளும் சில சோதிடரும் 1-ம் எண்ணில் பெயர்வைக்க வேண்டுமென்கின்றனர். ஆனால் இக்குழந்தை பிறந்த மாதப்பகுதியான ஐப்பசி மாதத்தில் சூரியன் துலாராசியில் நீசமாக இருக்கின்றது. எனவே இக்குழந்தைக்கு 1-ம் எண்ணில் பெயர்வைத்தால் பலன் அடையமுடியாது. கூட்டெண் 2 ஆக இருப்பதால் அதுவும் ஒரு சுப எண் அல்ல, எனவே கூட்டெண்ணிலும் பெயர் வைக்க முடியாது. ஆனால் இக்குழந்தையின் ஜனனக்குறிப்பில் வியாழன் மிகவும் பலம் பெற்றுள்ளது. வியாழக்கிரகத்திற்குரிய எண் 3 குழந்தையின் பிறப்பெண்ணாகிய 1 ற்கும், கூட்டெண்ணாகிய 2 ற்கும் பகை எண்ணும் அல்ல. அத்தோடு இக்குழந்தைக்கு வாழ்க்கையில் முக்கிய முன்னேற்றக் காலமாகிய 22 வயதிலிருந்து வியாழ தெசையும் நடக்கும். எனவே இக்குழந்தைக்கு 3-ம் எண்ணில் பெயர் வைப்பதே மிகப்பொருத்தம். 3-ம் எண் என்றால் 12, 21 30, 39, 48, 57 ஆகிய எண்களில் பெயர் வைக்கலாம். அவற்றில் எண் 12ல் பெயரெண் மிகச்சிறந்ததாக இருக்கலாம். 39ம், 48ம் உலகவாழ்வுக்கு நல்ல எண்கள் அல்ல. அதற்கு மேற்பட்ட எண்கள் தற்காலப் பெயர்களுக்கு மிகக் கூடிய எழுத்துக்களை உடையனவாக இருக்கின்றது. எனவே மற்றைய எண்களாகிய 21 அல்லது 30 ல் பெயரமைக்க வேண்டும். 30 ஐவிட 21 சிறப்பான எண் என்பதாலும் 21 எண்ணில் குழந்தையினுடைய கூட்டெண் 2ம் பிறப்பெண் 1ம் வருவதாலும் 21 லேயே பெயரமைய வேண்டுமென்பதே தீர்மானமாகும். இங்கு இன்னும் ஒன்றையும் நாம் கவனிக்க வேண்டும். இக்குழந்தை பிறந்த காலப்பகுதி ஆதிக்கத்தாக்கம் புதனுக்குரிய 5-ம் எண்ணின் காலமாகும். பிறப்பெண் 1 ஆகவும் கூட்டாகவும் 2 ஆகவும் இருப்பதால் எண் 5 லும் பெயரமைப்பது பொருத்தமானதே. ஆனால் குழந்தையின் ஜாதகத்தில் புதனைவிட வியாழன் கூடியபலம் பெற்றமையால் வியாழனுக்குரிய எண் 3 தெரிவு செய்யப்பட்டது.

அடுத்து இன்னுமொரு உதாரணத்தைக் கவனிப்போம். இவர் 14-3-1943 - ம் ஆண்டு பிறந்தவர். இவரின் பெயர் எண் 36 ஆகிய 9 ஆகும். இவருக்கு சிறிய வியாபாரம் ஒன்று தொழிலாக அமைந்தது. தொழில் இடத்தின் எண் 24 ஆகிய 6 ஆகும். இவர் மணம்முடித்து இருந்தார். மனைவி எண் 2ன் ஆதிக்கம் உடையவர். இவருக்கு தனது தொழில் முன்னேற முடியாததோடு. சில குடும்பத் தகராறுகளும் இருந்தன. இவர் எண் சோதிடரொருவரின் உதவியை நாடி அவரது ஆலோசனைப்படி பெயரெண்

மொத்தம் 41 அதாவது 5-ம் எண்ணில் பெயரை மாற்றிக் கொண்டார். பெயரை மாற்றிய பின்பு குடும்ப ஒற்றுமை ஓரளவு நிலவியபோதும், தனது சிறிய கடையை மூடிவிட்டு வேறுகடையில் சம்பளத்திற்கு வேலைசெய்யும் நிலையை அடைந்தார். இந்த நாட்களில் என்னிடம் ஆலோசனைக்கு வந்த போது நான் அவருடைய பெயரை 37ல் அதாவது எண் 1ல் மாற்றிக் கொடுத்து அதை நன்கு முறைப்படி பயிற்சிக்கும்படி கூறினேன். ஒரு சில மாதங்களின் பின் அவர் வேறும் சில பங்காளரோடு சேர்ந்து பெரிய கமிஷன் வியாபாரமொன்றை தற்போது நடாத்தி மிக விரைவாக முன்னேறி வருகிறார். குடும்ப மகிழ்ச்சியும் பிறவும் இன்னும் சிறப்பாக இருக்கின்றது.

இந்த வெற்றியின் இரகசியத்தை ஆராய்வோம். இவருக்கு பிறப்பெண் 5ம் கூட்டெண் 3ம் ஆனாலும் இவரது பிறந்த மாதப்பகுதி சூரிய ஆதிக்கத்துக்கே உரியது. இவரது ஜாதகத்திலும் சூரியனும் வியாழனும் நன்கு பலம் பெற்றுள்ளது. எனவே இவரது பெயரெண் 9 இவருக்கு பொருத்தமில்லாத போதும் 6 எண் இடத்தில் சிறிய வியாபாரம் செய்ய முன்னர் உதவியது. ஆனால் 2அம்சம் உள்ள மனைவியோடு சச்சரவைக் கொடுத்தது. பிறப்பெண் 5 ஆகவும் வியாபாரியாகவும் இருந்தால் 5ம் எண்ணில் பெயரை மாற்றிக் கொடுத்த போது அப்பெயரெண் மனைவியின் 2 எண்ணிற்கு நட்பாயமைந்த போதும் தொழிலிட எண் 24ற்கு அவ்வளவு பொருத்தமில்லாததோடு இருவருக்கும் ஆதிக்கமற்றபடியால் இருந்த கடையைமூடி வேறு வியாபார இடத்தில் சம்பளம் பெறும் ஊழியராகச் சேர நேர்ந்தது.

நான் 37ல் பெயரை மாற்றிப் கொடுத்த போது மாதப்பகுதி ஆதிக்கமும் ஜாதகக்கிர ஆதிக்கமும் கொண்ட சூரியசக்தி ஏற்பட்டது. 37ல் உள்ள 3 எண் பலம் பொருந்திய வியாழ அம்சத்திற்கு ஒத்தசைவு பெற்றது. 37ல் உள்ள 7ன் கேது அம்சமும் மொத்தச் சூரிய அம்சமும் மனைவியின் சந்திர அம்சத்தோடு ஒத்துப்போனது. 6 எண்ணைத்தந்த 24 ஆகிய இவரது வியாபாரக் கடையின் எண் சந்திர அம்சமும், இராகு அம்சமும் கொண்டதால் அதற்கு மிகப் பொருத்தமாக அமைந்தது. அத்தோடு இவர் குடியிருந்த வீட்டு இலக்கம் 46 ஆகிய 1 ஆகும். இவரது தனிப் பெயர் எண் 5, தகப்பனின் இனிசல் எண் பெறுமதி 5 தனிப்பெயரெண் 32 அதாவது 32+5=37 ஆகும். மேலும் இவரை பெயரெண் 19 தனிபெண் 1ல் வீட்டுப்பெயரில் ஏனையோர் அழைத்து வந்தனர். இவரின் பெயரில் முதன்மைபெறும் எழுத்துக்களின் எண்கள் 5ம் 3ம் இவரது பிறப்பு கூட்டெண்ணுகவும் அமைந்துள்ளன. எனவே சூரிய அம்சமும் வியாழக்கிரகமும் பலம்பெற்ற பெயரெண்ணுன 37ல் பெயரை அமைத்ததின் பின்பே முன்னேறத் தொடங்கினர். இன்று மிக வேகமாக முன்னேறி வருகின்றார்.

---

ஜெனன பத்ரமும்...... (52-ம் பக்கத் தொடர்)
பொருள்களின் அசைவுக்குக் காரணமான சிவனுகவும் விளங்குகிறன். இதை முன்பே கண்ட நமது மஹான்கள் மனிதகுலம் உய்ய வழிவகுத்துத்தான் சென்றுள்ளார்கள். ஜாதகரூபமாக.

ஜநநி ஜந்ம சௌக்யா நாம் வத்த நீ
குல சம்பதாம் பதவி பூர்வ புண்யா தாம்
விக்யதே ஜந்ம பத்ரிகா! அதாவது—

பிறப்பின் மகிழ்ச்சியை உண்டாக்குவதும், குலச்செல்வத்தை விருத்தி செய்வதும், முன் நல்வினையின் வழியுமாகிய ஜனன பத்திரிகை எழுதப் படுகின்றதென்பதாம்.

ஆன்மாக்கள் முற்பிறவிகளில் செய்த தீவினைகளின் பயனை இப்பிறப்பில் அனுபவிக்கக் கூடிய இன்பதுன்பங்களாகிய பலாபலன்கள் இன்னதென்பதை இருட்டிலுள்ள வஸ்துக்களை தீபமானது எப்படிப் பிரகாசிக்கச் செய்கின்றதோ அப்படி ஆன்மாக்கள் என்னும் இருட்டிடத்திலுள்ள நல்வினை தீவினைகள் என்றும் சுபா சுபங்களை தீபம் என்னும் "ஜோதிடசாஸ்திரம்" நன்கு தெரியப் படுத்துகின்றது என வரஹாக மிகிரரானவர் வலியுறுத்துகிறார். அவரவர் தமக்குள்ள ஆயுசும், தொழிலும், பொன்னும், கல்வி, செல்வம், எழில் மரணங்கள் ஏழும் தவமுடைய பிரமதேவன் தனது கைகள் தொடங்கி முன்னஞ் சிவனுடைய அருளினலே கர்ப்பத்தில் நிச்சயிப்பான்.

எனவே எவனுக்கு ஜனனப் பத்திரிகை எழுதப்படவில்லையோ அவனுடைய வாழ்நாள் முழுதும் வீணுதம் என்பதே இக்கட்டுரையின் கருததாகும்.

---


வாங்கிவிட்டீர்களா?

சுக்ல புதுவருட

திருக்கணித பஞ்சாங்கம்

விலை ரூபா 23-00 மட்டுமே.

பரிசுபெற்ற கட்டுரை

# சோதிடமும் விஞ்ஞானமும்

— கா. சின்னையா, சங்குவாரி, கம்பனை. —

விஞ்ஞான உலகில் ஜோதிடத்தைப் பற்றிய இன்றைய கருத்து பரவலாக ஒத்துக்கொள்ளப்பட்டாலும் விஞ்ஞானமும், ஜோதிடமும் மதிக்க முடியாத ஒன்று மட்டுமல்ல பிரிக்கக்கூடாதவை என்பது அனேகருக்குப் புரியாத விஷயமாகவே இருந்து வருகிறது. காரணம் விஞ்ஞானத்தையும் ஜோதிடத்தையும் சேர்த்து ஆராய்வதில்லை. மனிதன் இன்று சந்திரமண்டலம் செவ்வாய் மண்டலம் என்று சென்று வந்ததாகச் செப்பும் காலையில் பலநூறு ஆண்டுகட்கு முன்பு அனுபவசுருதி கொண்டு எழுதியவைகளை மையமாக வைத்து, வாழ்க்கையை நிர்ணயிப்பது முற்றிலும் மூடநம்பிக்கைக் கொள்கையாகவே தோன்றுகிறது. இது மூடநம்பிக்கைதானா என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டுமாயின் விஞ்ஞானத்தைப்போல் ஜோதிட நூல்களையும் ஆராய்ந்துதான் அத்தகைய முடிவு எடுக்கவேண்டும்.

இன்றைய நமது கவனமெல்லாம் விஞ்ஞானத்திலும், குறிப்பாக அரசியல் நாகரிகத்திலும் ஈடுபட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் பண்டையத் தமிழர்கள் சூரிய உதயத்தை வைத்துச் சொல்லும் நேரங்களை இன்று நேரம்காட்டு கருவிகளைத் (Clock) தன்னிடத்தில் வைத்திருப்பவர்கள் கூட சரியாகக் கூற முடிகிறதில்லை. சிந்திக்கும் சக்திமங்கி இயந்திரங்களையும், பத்திரிகைகளையுமே நம்பி வாழ்கிறோம். எதையும் விஞ்ஞான வாயிலாகவே ஒத்துக்கொள்ளவேண்டும் என்ற தலைமுறைக்கு வந்துவிட்டோம். சிந்திக்கும் சக்தியை மனிதன் இழந்துவிட்டால் விஞ்ஞானம் தோன்றிஇருக்குமா என்றால் தோன்றியிருக்க முடியாதுதான். அப்படிச் சிந்திப்பவர்கள் எத்தனை பேர் என்றால் மிகக்குறைவு. சிலர் சிந்தித்து உருவாக்கிய விஞ்ஞானம் பலரை செயலற்றவர்களாகவே ஆக்கிவிடுகிறது. இந்தச் சிலரும் தாங்கள்தான் விஞ்ஞானத்தின் மூலகர்த்தா என்று நினைத்துக்கொள்கின்றனர். இந்தக்கருத்து உண்மைதானா? சரியா? விஞ்ஞானமே வளர்ந்துவரும் சமுதாயத்திற்கு ஊன்றுகோல் என்று கூறுபவர்கட்கு ஜோதிடமோ, கிரகங்களோ, இல்லாமல் விஞ்ஞானத்தில் எதையும் சாதிக்கவும் இயலாது என்பது தெளிவான கருத்து. கிரேக்க நாகரிகமும், ரோமாபுரி நாகரிகமும், சீன நாகரிகமும் பழங்காலத்தில் எழுதிவைத்த குறிப்புகளே விஞ்ஞானத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது என்றால் அது நமக்கு வியப்பாகத் தோன்றும். பல நூற்றாண்டுகட்கு முன்னரே தமிழர்கள் வானவூர்தி (Aeroplane) செலுத்தி இருக்கின்றனர் என்றால் அதுவும் புதிரான விஷயமே. நம்முடைய இலக்கியத்தில் அதை சிறப்பாக 'வளவன் ஏற வானூர்தி' என்று குறித்திருக்கின்றனர்.

விஞ்ஞானத்தையும், ஜோதிடத்தையுமிணைக்கும் ஒரு பெரிய கிரஹம் சூரியனாகும். அரேபிய நாகரிகம், இத்தாலிய நாகரிகம், கிறீஸ் நாகரிகம் சிந்துவெளி நாகரிகம் என்று எதை எடுத்துக்கொண்டாலும் சூரியனைப்பற்றி கூறாத நாகரிகமேயில்லை. ஒரு சக்தியிலிருந்துதான் மற்றொரு சக்தி தோன்றுகிறது என்பது நியதி. அப்படி மூல சக்தியாக இருப்பது சூரியனே. சூரியன் இல்லாமல் எந்த விஞ்ஞானமும் தோன்றியிருப்பதற்கில்லை என்று இன்று ஒளி இயல்புகளையும் சூரிய கோள்களையும் ஆராய்ந்த அறிஞர்கள் கூறுகின்றார்கள். விஞ்ஞானத்திற்கு மூலப்பொருள் சூரியனும் ஒளிக்கதிர்களும் என்றும், சூரியன் இல்லாவிட்டால் மனிதஇனம் மட்டுமல்ல இந்த அண்டகோளமே செயற்படாது என்ற கருத்து தோன்றுகிறது. அணுவைக் கண்ட அறிஞர்கள்கூட சூரியனுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர். சூரியனை ஒரு விஞ்ஞானத்தின் சின்னம் என்றே கூறுகின்றனர். இன்று சோதிட சாஸ்திரத்தைப் படித்தவர்களுள் பலர் விஞ்ஞானிகளாகவும் சோதிட சாஸ்திரிகளாகவும் விளங்குகின்றனர். சோதிடசாஸ்திரம் என்பது வானசாஸ்திரமாகும். இந்த வானசாஸ்திரம் பூமிக்குள் கொண்டுவரப்பட்டு மனித வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டுள்

ளது. ஆனால் சோதிட சாஸ்திரத்தை ஒதுக்கித் தள்ளும் பகுத்தறிவுவாதிகளும், விஞ்ஞானிகளும், நட்சத்திரங்களும், கோள்களும் மனிதனின் அன்றாட வாழ்க்கையில் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஆனால் விஞ்ஞானரீதியாக இக்கோள்களும் நட்சத்திரங்களும் மனிதனை ஆட்டிப்படைக்கின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

சந்திரனின் ஈர்ப்புச்சக்தியால் அலைகள் ஈர்க்கப்படுகின்றன என்ற உண்மை எல்லோரும் அறிந்ததே. ஆனால் அதன் ஈர்ப்புச் சக்தி தண்ணீர் நிலையங்கள் எல்லாவற்றையும் தாக்குகின்றன என்பதை எல்லோரும் அறியமாட்டார்கள். நம் உடல் 72சதவீதம் நீரைக்கொண்டதாகும். ஆகவே அலைகள் ஈர்ப்பதுபோல் நமது உடலிலுள்ள நீரையும் சந்திரன் ஈர்க்கிறான். மனநோயாளர்கள் அமாவாசை பௌர்ணமி காலங்களில் இந்தச் சந்திரனின் ஈர்ப்புச் சக்தியால் ஈர்க்கப்பட்டு அங்குமிங்கும் அலைகிறார்கள். மனிதரால் செய்யப்படும் குற்றங்கள் பௌர்ணமி இரவு நெருங்கிவர அதிகமாகின்றன. அத்துடன் சமூக விரோதச் செய்கைகளைச் செய்தல் மனிதனின் மனோதத்துவநிலையைப் பொறுத்தே அமைகிறது. தீயிடுதல், கற்பழித்தல், குடித்துவிட்டுக் கொலைபுரிதல் ஆகியன அதிக அளவில் நடைபெறுகின்றன. அவர்களின் ஆக்ரோஷம் சந்திரன் மறைந்ததும் குறைந்துவிடுகின்றன. இந்த அறிக்கை சோதிடர்கள் கூறுவதற்கு நிகரானதாகிறது. எனவே மனிதனும் மற்ற ஜீவ பிராணிகளும் சந்திர சக்தியால் ஈர்க்கப்படுகிறார்கள் என்பது தெளிவாகிறது.

சூரியனின் கிரணங்கள் ரேடியோ இழுப்புச் சக்தியைப் பாதிக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. மனிதன் சூரியனின் சக்தியால் ஜீவிப்பவன்; இரத்தத்திலுள்ள சீறத்தில் ஏதாவது வேறுபாடுகளுண்டாயின் மனிதனது குணவியல்பிலும் வேறுபாடு உண்டாகும்; இரவெல்லாம் குளிர்ந்திருந்த இரத்தம் சூரியனின் உதயத்திற்கு முன்பு சுறுசுறுப்பு அடைகின்றது. ஆகவே சூரியனின் வருகையை இரத்தம் எதிர்பார்த்து இருப்பது இதிலிருந்து அறியலாம்.

சூரியனின் தாக்கத்தால் போர் புரட்சி இடம் பெயர்தல் ஆகியன நடைபெறுகின்றது என்பதை ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டறிந்தார்கள். எனவே இதுபோன்ற இன்னும் பல காரணங்களால் விஞ்ஞானம் சோதிட அறிவை ஒட்டியிருக்கிறது என்பது தெளிவாகிறது.

பிரெஞ்சு உளஇயலாளரும் புள்ளிவிபர நிபுணருமாகிய மைகல் கோஜியு என்பவரின் ஆய்வுகளின் பிரகாரம் செவ்வாய்க் கிரகம் விளையாட்டு வீரர்களையும், சனிபகவான் பிரபல்யம் வாய்ந்த டாக்டர்களையும், விஞ்ஞானிகளையும்; குருபகவான் பிரபல்யமுற்ற நடிகர்களையும், ஆட்டிப்படைக்கின்றன என்று கூறுகிறார். இது நம் சோதிடர்கள் முன்பே கண்ட உண்மை, இது விஞ்ஞான ரீதியாகவும் ருசுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே விஞ்ஞானத்திற்கும் சோதிடத்திற்கும் இடையே ஆதியிலிருந்தே தொடர்பு உண்டு எனப் பெறப்படுகிறது.

மேற்குறித்த கண்டுபிடிப்புகள் இருந்தபோதிலும் சோதிடத்தை விஞ்ஞானம் என்று ஏற்றுக்கொள்ள பல விஞ்ஞானிகளும் உளஇயலாளர்களும் மறுக்கிறார்கள். என்றாலும் ஒரு கொள்கை ஒன்று இருக்கிறது. அந்தக் கொள்கை எந்தவித தகவலையும் தடைசெய்யும் தன்மையது. அத்துடன் எந்தவித தர்க்கத்திற்கும் எதிராக இருக்கும். அத்தோடு எப்போதும் அறிவுச் சூன்யத்திற்தான் இருக்கச்செய்யும். விசாரணைக்கு முன்பு அந்தக் கொள்கைதான் வெறுப்பாக இருக்கும், ஆகவே சோதிடம் விஞ்ஞான ரீதியானதென்பது தெளிவாகிறது.

சோதிடம் பார்ப்பது நாகரிகமற்ற செயல் என்றும், அது விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கு முரணானது என்றும் வாதாடுபவர்கள் உண்டு. இவர்களில் பலர் இரகசியமாக சோதிட ஆலோசனைகள் கேட்கத் தவறுவதுமில்லை. ஆனால் தற்போது சோதிடக்கலையின் உண்மைத் தேவையை பல அறிஞர்களும் ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளனர். மேலும் பல விஞ்ஞானமுடிவுகளும் நமது புராதன பாரத நூல்களிலேயே சிதறிக் கிடப்பதையும் கண்டறியும் முயற்சியும் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது எனக்கூறலாம்,

சோதிடக்கலை பல இயற்கை நியதிகளையும் ஆராய்ந்து அறிந்து அந்த உண்மைகளின் அடிப்படையிலேயே ஏற்பட்ட ஒன்றுஎன கூறவேண்டும். உதாரணமாக 12 ராசிகளை எடுத்துக்கொள்வோம். கால கணித முறை வேதகாலந்தொட்டு நிலவுகிறது. வருடதினம் 360ஐக் கூறு செய்து கணக்கிட்டதை அறியலாம். தவிர ஆதவனின்

ஆண்டுச் சுழற்சி நேரமே 12 ராசிகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. 12 ராசிகளுக்கும் அதிபதிகளை நாம் அறிவோம். இது ஏதோ மேலெழுந்தவாரியாக அமைக்கப்பட்டுள்ளது அல்ல. சூரியனிலிருந்து பல்வேறு கிரகங்களும் இருக்கும் தூரத்தை அடிப்படையாகக்கொண்டு சிம்மராசியைச் சூரியனுக்கும் மற்ற ... இதர கிரகங்கட்கும் பகுத்தளித்துள்ள முறை விஞ்ஞான அடிப்படையில் ஏற்பட்டுள்ளதொன்று என்று கூறத்தேவையில்லை. சிம்மத்துக்கதிபதி நிலையை சூரியனுக்கும் அதை அடுத்து கடகத்துக்கதிபதி நிலையை நம்மை நெருங்கிய சந்திரனுக்கும் அளித்துவிட்டு பிற இரு ராசிகளையும் முறையே புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனிக்கு என்று கொடுத்துள்ளது அடிப்படை அற்றது என்று கூறமுடியாது. சூரியனிலிருந்து தூரப்படி புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி என்று அமைந்துள்ளது நம் முன்னோர் அறிந்திருந்த உண்மையாகும்.

வானசாஸ்திரம் சோதிடத்திற்கு அஸ்திவாரமாகும். சூரிய பிம்பத்தில் புதன் குறுக்கிட்டுச் செல்லும் எனக் கூறுவது வானசாஸ்திரம். சூரியனும் புதனும் சேர்ந்திருக்கையில் ஏற்படும் பலன் என்ன என்பதைக் கூறுவதுதான் ஜோதிஷம்.

கிரகங்கள் விதியின் பிரதிநிதிகள். முன் வினையின்படி இந்தப் பிறப்பின் விளைவுகளை நிர்ணயிப்பவை கிரகங்கள். இவை யாவும் பொய் என்று கூறிய விஞ்ஞானிகள் இன்று மெய் என்று நம்பி சோதிட சாஸ்திர கணிப்பு முறைகளை ஆராய்ந்து வருகின்றனர்.

சோதிடம் ஒரு அருங்கலை. நுண் கலைகளில் தலைசிறந்தது. மனதில் தோன்றும் தளராமையைப் போக்கவல்லது.

ஜனன காலத்தில் ஏற்படும் நவக்கிரகங்களின் அமைப்பையொட்டியே நமக்கு வாழ்க்கையில் தீமைகளும் நன்மைகளும் ஏற்படுகின்றன. இவ்விஷயத்தில் நவக்கிரக கதிகளை ஆராய்ந்து முற்கூட்டியே தெரிவிக்கும் சாஸ்திரமே ஜோதிஷமாகும், இவ்விதம் நமக்கு ஏற்படும் தீமைகளை முன்கூட்டியே அறிந்துகொண்டால் அவற்றை அகற்றுவதற்கான அல்லது குறைப்பதற்கான சாஸ்திரீயமான பரிகாரங்களாகும் முறைகளை கைக்கொள்ளும் வழி வகைகளை வழங்கும் ஜோதிஷமே விஞ்ஞானம், விஞ்ஞானம் ஜோதிஷத்திலிருந்தே பெறப்பட்டதாகும். விஞ்ஞானிகள் இதன் தத்துவங்களை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளாவிட்டாலும் செயல்கள் யாவும் 9 நவநாயகர்களின் அடிப்படைகளிலே இதுவரை அவர்கள் சாதித்த அதிசயங்களாகும் என்பது என்னவோ உண்மை.

சோதிட சாஸ்திரத்திற்கு மூலம் வடமொழி. விண்ணியல் அறிவும் ஹிந்துக்களிடமிருந்து உருவானதே.

எண்பத்துநாலு கோடி உயிர்களுக்கும் வாழ்க்கை முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இறைவனிட்ட கட்டளைப்படி பல்லுயிரும் இயங்கி வருகின்றன. மனிதர், விலங்குகள், பட்சிகள், புழு, பூச்சி, தாவரங்கள் முதலியன யாவும் அவனுதவியால் செயலாற்றுகின்றன. (மஹா சிவராத்திரியின் தத்துவங்கள் இதை நன்கு விளக்குகின்றன) அவ்விதிக்கு உட்பட்டு நம் வினைப்பயனை நுகரச் செய்யும் நவநாயகர்களும், நம் வாழ்க்கையில் நடைமுறைகளை அமைத்துக்கொண்டு சஞ்சரிக்கின்றனர். மனிதர்போல் தொழலாற்றுகின்றனர். அப்படி அவர்கள் இயங்காவிட்டால் இவ்வுலகம் இயங்காது. இவ்வுண்மைகளை அறிவுறுத்துவதே சோதிடமும் விஞ்ஞானமும்.

## தொழில் வியாபாரம் சிறக்க கேந்திர கோணாதிபதிகளின் சேர்க்கை வேண்டும்.

கேந்திரம், கோணம் என்பன எல்லோருக்கும் நன்கு தெரிந்திருக்கும். 1-4-7-10-ம் இடங்கள் கேந்திரம் எனப்படும். 1-5-9-ம் இடங்கள் திரிகோணங்கள் எனப்படும். கோணாதிபதிகளின் பார்வை அல்லது சேர்க்கை ஓர் ஜாதகத்தில் இடம்பெறுமானால் அது மிகவும் நன்மையைத் தரக்கூடியதாகும். கேந்திரம், கோணம் என்பன இலக்கினத்துக்குப் பார்ப்பதுபோல சந்திர லக்கினம், அம்சலக்னம் ஆகியவற்றிற்கும் பார்க்கலாம்.

கேந்திர கோணாதிபதிகளின் சேர்க்கை, சம்பந்தம் ஏற்படும்போது அதில் 8-ம் அதிபன், 12-ம் அதிபன் ஆகியவற்றின் சம்பந்தம் ஏற்படக்கூடாது என்பதை அவதானித்துக் கொள்ளுதல் வேண்டும். மேலும் கேந்திர கோணாதிபதிகள் சேர்ந்திருக்கும் இடம் கேந்திர கோணங்களாக இருத்தல் நன்று.

# சிவ விரதங்கள்

(முன் தொடர்ச்சி)

"கோப்பாய் – சிவம்"

## கல்யாண சுந்தர விரதம்
## (பங்குனி உத்தரம்)

சிவபிரானைக் கல்யாணசுந்தரமூர்த்தியாக வழி பட்டு பங்குனி உத்தர நாளில் அநுஷ்டிக்கப்படும் விரதம் இது. பங்குனி மாதத்தில் பூமி மீனராசி யில் நிற்க, சந்திரன் உத்தர நட்சத்திரத்துடன் கன்னிராசியில் நின்று பூரண கலைபெற்று ஏழாம் பார்வையாகப் பூமியைப் பார்ப்பதால் இத்தினம் விசேடமானது.

மதுரையில் மீனாட்சியம்மையைச் சுந்தரேசப் பெருமான் திருமணஞ்செய்த நாள் இதுவாகும். இராமர் சீதையைக் கடிமணம் செய்துகொண்டதும் இதே நாளில்தான்.

இவ்விரதம் அநுஷ்டித்ததன் பயனாக திருமால் திருமகளையும், பிரம்மா சரஸ்வதியையும், இந்திரன் அபிராமியையும், சூரியன் உஷாவையும், அமிர்தவல்லி சுந்தரவல்லி கந்தவேளையும், சீதா தேவி இராமரையும் அடையப்பெற்றனர்.

நீண்டநாள் திருமணம் தடைப்பட்டுள்ள ஆண் பெண் இருபாலாரும் இவ்விரதத்தை முறைப் படி அநுஷ்டித்துத் தம்பதி பூஜையையும் செய் தால் விரைவில் திருமணப்பேறு கிட்டும். (தம்பதி பூஜைபற்றிய விபரம் இத்தொடரில் சோமவாரவிர தம் பகுதியில் காணலாம்.) புத்திரப் பேறில்லா தோரும் இவ்விரதம் நோற்று மக்கட்பேறடைய லாம்.

இரவில் ஒருபொழுது பழமும் பாயசமும் உட்கொள்வது விதி. இயலாவிடில் மத்தியானம் ஒருபொழுது போசனம் செய்யலாம்.

## சூலவிரதம்

தைமாதத்து அமாவாசையில் சூலாயுதப் பெரு மானாக சிவபிரானை வழிபட்டு இவ் விரதமநுஷ் டிக்கப்படுகிறது. பகல் ஒருபொழுது மாத்திரம் போசனம் செய்யவேண்டும். இவ்விரதத்தை முறை யாக அநுஷ்டித்து வருவோர் பகைவென்று, நோய் பிணியும் பாபமும் நீங்கி, நீண்ட ஆயுள் பெறு வர். முத்தியின்பமும் கிட்டும்.

சுதர்மன் யமனையும், திருமால் காலநேமி என்ற அசுரனையும், பரசுராமர் கார்த்தவீரியார்ச்சுனனை யும் இவ்விரதப் பேற்றினாலேயே வென்றனர். இந்திரன் இவ்விரதம் கைக்கொண்டு தீராததன் தலைநோய் நீங்கப்பெற்றான்.

வீரபத்திரப் பெருமான் பானுகம்பனுக்கு உபதேசித்தது இந்தவிரதம்.

## இடப விரதம்

சிவபிரானை இடபாரூடராகத் தியானித்து வைகாசிமாத வளர்பிறை அட்டமியில் கைக்கொள் ளப்படும் விரதம் இது. பகலில் ஒருபொழுது போசனம் செய்தல் முறை. சகல செல்வ போகங் களையும் வழங்கவல்ல இவ்விரதத்தை அநுஷ் டித்துத் திருமால் கருடனையும் இந்திரன் ஐரா வதத்தையும் இவ்வாறே அட்டதிக்குப் பாலகர் கள் ஒவ்வொருவரும் தத்தமது வாகனங்களைப் பெற்றனர்.

## பிரதோஷவிரதம்

கந்தபுராணத்தில் சிறப்பித்துச் சொல்லப் படும் சிவவிரதங்களுள் பிரதோஷவிரதமும் ஒன்று. இரண்டு பட்சங்களிலும் வரும் திரயோதசித் திதி யிலே அதாவது அமாவாசை, பௌர்ணமி இரண்டிற்கும் பிறகுவரும் பதின்மூன்றாவது நாளிலே இவ்விரதம் அநுஷ்டிக்கப்படுகிறது. சிவ தருமோத்திரம், சிவரகசியம் முதலிய நூல்களி லும் இவ்விரத மகிமைகள் காணப்படுகின்றன.

மாலைப்பொழுது என்னும் கருத்தையுடைய பிரதோஷம் என்ற சொல்லால் அழைக்கப்படும் இவ்விரத வழிபாடும் மாலைநேரத்துக்குரியதே. சூரிய அஸ்தமனத்துக்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும், அஸ்தமனத்துக்குப்பின் முன்றேமுக் கால் நாழிகையுமாகச் சேர்ந்த ஏழரை நாழி கைப் பொழுது பிரதோஷ காலம் எனப்படும். (அதாவது பிற்பகல் சுமார் நாலரை மணியிலி ருந்து இரவு ஏழரை மணிவரையிலான மூன்று மணித்தியாலம்) இக்காலத்தில் சிவபிரானை விசே

ஷமாக வழிபடுவதே இவ்விரதத்தின் முக்கியமான அம்சமாகும்.

முன்பு தேவர்கள் அசுரர்களோடிணைந்து திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது முதலில் அங்கிருந்து ஆலகாலவிஷம் தோன்றியது. தேவர்கள் யாவரும் அஞ்சியோடியபோது பரமசிவன் அவர்கள்மீதும் சீவன்களாக ஆன்மாக்கள் மீதும் கருணைகொண்டு அந்த ஆலகால விஷத்தை அருந்தித் தமது கண்டத்தில் நிறுத்தியருளினார். (இதனால், சிவபெருமான் நீலகண்டர் எனப் பெயர்பெற்றார்) பயம்நீங்கிய தேவர்கள் இறைவனை வழிபட்டு மீண்டும் கடைந்தபோது அமிர்தம் தோன்றியது.

அத்தருணம் அனைவரையும் மகிழ்விக்கும் வண்ணம் எம்பெருமான் இடபதேவரின் கொம்புகளுக்கிடையில் நின்று திருநடனம் செய்தருளினார். வளர்பிறைத் திரயோதசியும், சனிக்கிழமையும் கூடிய ஒரு நன்னாளிலேதான் இந்தவைபவம் நிகழ்ந்தது. இதனால்தான் சனிப்பிரதோஷவிரதம் மிகவிசேஷமாகச் சொல்லப்படுகிறது.

ஆலகால விஷத்தை உட்கொண்டபின் அது சீவராசிகளை வருத்தாமலிருக்கும் பொருட்டு ஒரு கணநேரம் சிவபிரான் மௌனமாக இருந்தார். அப்போது தேவரும், முனிவரும் உணவருந்தாது பரமசிவனைப் பிரார்த்தித்து நின்றனர். அந்தக் காலமே ஏகாதசியாகும்.

இதன்பின் இறைவனின் அருளாணைப்படி திருப்பாற்கடலை மீண்டும் கடைந்தபோது அமிர்தம் தோன்றியது. அதனை அமரர் உண்டனர். இக்காலமே துவாதசியாகும். இதன்பின் முன்னர் குறிப்பிட்டவாறு சிவபிரான் டமருகமேந்தி நடனம் செய்யத் திருமால் குடமுழா என்ற வாத்தியத்தை முழக்கத் தேவேந்திரன் சுருதி சேர்த்து நிற்க, தும்புருநாரதர்கள் இசைபாடக் கலைவாணி மகரவீணையை மீட்டிப்பாடத் திருமகளும் இணைந்து பாட, நான்முகன் தாளம் போட உமாதேவியாரும், தேவரும், முனிவரும் இத் தாண்டவத்தை மகிழ்ச்சியுடன் தரிசித்து நின்றனர். இக்காலமே திரயோதசியாகும்.

இம்மூன்று திதிகளும் சேர்ந்த மூன்று நாட்கள் பரமசிவனுக்கு மிகச்சிறிய அளவுள்ள பிரதோஷ காலமாகும்.

கணவரை இழந்த பதிவிரதைப் பெண்ணொருத்தி தனது சொந்த மகனும் வளர்ப்பு மகனாகிய ஒரு அரசகுமாரனுமாகிய இரு புதல்வர்களுடன் வாழவழி தெரியாது வருந்தி வறுமையில் உழன்றபோது சாண்டில்ய முனிவரால் உபதேசிக்கப்பட்டு மூவருமாக இப்பிரதோஷ விரதத்தைக் கைக்கொண்டனர். அதன் பிரகாரம் அந்தணகுமாரன் அறிவாற்றலும் பொருளும் பெற்றான். அரசகுமாரன் அரசாட்சியைப் பெற்றான் என்று புராணம் உரைக்கும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களையும் தரக்கூடிய இவ்விரதத்தை முனிவர்கள் பலரும் இந்திரனும் கைக்கொண்டு அரும்பேறு பல பெற்றனர். கடன், வறுமை, நோய், துர்மரணம், பயம் இவற்றைப் போக்கவல்லது இது. முக்கியமாகப் புத்திரலாபம் தரவல்லது. புத்திரரை விரும்புவோர் இவ்விரதமிருப்பது வழக்கம்.

இவ்விரத நாளிலே நித்திய கர்மாநுஷ்டானங்கள் முடித்து பகல் முழுதும் போசனமில்லாமல் இருந்து மாலை நாலரை மணிக்கு முன்னதாக ஸ்நானம் செய்து, சாயம் சந்தியாவந்தனம், சிவபூஜை முதலியவற்றைச் செய்தபின் (மாலை நேரத்துக்குரிய நித்திய கர்மானுஷ்டானங்கள்) வெள்ளை ஆடைதரித்துச் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்து பிரதோஷ பூஜையைத் தரிசித்துப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

பிரதோஷ காலத்தில் சிவாலயத்தில் பிரதக்ஷிணம் செய்து வழிபடுவதற்கென்று சிறப்பான விதிமுறையொன்று ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ளது. இவ்விதியை ஆறுமுகநாவலரவர்கள் இரண்டாம் சைவவினாவிடையில் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

"இடபதேவரை முதலில் வணங்கி அங்கிருந்து இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்த பின் சென்றவழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரை வணங்கி வலமாகக் கோமுகை வரை சென்று மீண்டும் திரும்பிவந்து இடபதேவரை வணங்கி மறுபடி இடமாகச் சென்று சண்டேஸ்வரரை வணங்கித்திரும்பி வலமாகக் கோமுகைவரை சென்று (இத்தடவை இடபதேவரைத் தரிசியாது செல்லவேண்டும்) மறுபடி அங்கிருந்து திரும்பி இடபதேவரைத் தரிசியாமல் இடமாகச் சென்று சண்டேஸ்வரரை வணங்கித் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து அவரது இரண்டு கொம்புகளின் நடுவே சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து பிரணவத்

தோடு கூட 'ஹரஹர' என்று சொல்லி வணங்க வேண்டும். பிரதோஷ காலத்தில் கோமுகையைத் தாண்டக்கூடாது என்பதே முக்கிய விதியாகும். இந்தப் பிரதக்ஷிண முறைக்குச் சோம சூத்திரப் பிரதக்ஷிணம் என்று பெயர்.

இவ்வாறு ஆலயவழிபாடு செய்தபின் வீடு திரும்பிப் பிரதோஷகாலம் முடிந்தபிறகு (இரவு ஏழரை மணிக்குமேல்) சிவனடியார்களுடன் போசனம் செய்யவேண்டும்.

பிரதோஷகாலத்தில் சிவனுக்கும் நந்தியெம் பெருமானுக்கும் அன்ன நைவேத்தியத்துடன் காப்பரிசியும் நிவேதனம் செய்து அன்பர்களுக்கு விநியோகிக்க வேண்டும். காப்பரிசி என்பது பச்சரிசியையும் பயற்றம் பருப்பையும் நீரில் நன்கு நனையவைத்து வடித்தெடுத்து அதற்குச் சர்க்கரையும் தேங்காய்ப் பூவும் சேர்த்துக் குழைத்து (உப்புச் சேராமல்) செய்வதாகும். இதனையே பிரதோஷ விரதத்துக்கு உணவாகக் கொள்ள வேண்டும். இது இயலாதவர்கள் சர்க்கரைச் சாதத்தை நிவேதனம் செய்து உண்ணலாம்.

பிரதோஷ காலத்தில் எவராயினும் எண்ணெய் தேய்த்தல், குளித்தல், போசனம் செய்தல், தூங்குதல் முதலியன செய்தலாகா. இவ்வேளையில் மந்திரஜபம், நூல்படித்தல் என்பனவும் செய்யாது மௌனவிரதியாய் இருக்குமாறு புராணங்கள் விதிக்கின்றன.

சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை என்ற நான்கு மாதங்களுள் ஒன்றில், சனிக்கிழமையில் பிரதோஷம் வரும் நாளாகப் பார்த்து இவ்விரதம் ஆரம்பிக்கப்படவேண்டும். ஒருவருடகாலம் இந்தப் பிரதோஷ விரதத்தைக் கைக்கொண்டபின் முறைப்படி விரதோத்யாபனம் செய்யலாம். விரும்பினால் தொடர்ந்து கைக்கொள்ளலாம். ஆனால், வருடா வருடம் விரத பூர்த்தியைச் செய்யவேண்டும். 41,55,81,97 என்ற எண்ணிக்கை வரும்வரை வளர்பிறைப் பிரதோஷம் மட்டும் அநுஷ்டிப்பார்கள் சிலர்.

இவ்விரதம் கைக்கொள்வோருக்கு கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து. மரணவேதனை, பாவம் இவையாவும் நீங்கி முத்தி சித்திக்கும் என்று ஆறுமுகநாவலரவர்கள் குறிப்பிடுகிறார்கள். (வளரும்)

# மலரெல்லாம் சோதிட மலராமோ?

— ஜெ. திவ்யா —

மலரெல்லாம் சோதிட மலராகுமா?—அவை
மலர்பெற்ற மதிப்பினைப் பெற்றேகுமா?...
சொல்லெல்லாம் சுவைபொங்குஞ் சொல்லாகுமே
—அதன்
சொர்ப்பண மென்றெருநா ளரங்கேறுமோ?...
கதிரவனுர் கீழ்த்திசையில் வந்துதிக்க—அந்த
கமலம்தன் இதழ்விரித்(து) உமையக்கும்
தமிழ்மாதந் தவறாமல் வந்துதிக்க—அசல்
தளிராகுஞ் சோதிட மலர்காண்பீர்!
வண்ணச்செந் தாமரைதன் இதழ்விரிக்க—அதில்
வண்டுகள் போயிருந்து தேன்குடிக்கும்
சோதிட மலர்வந்து சபையேற—அகிலச்
சோதிட ரனைவருமே வரவேற்பர்!
சோதனையே வாழ்வென்ற மக்களுக்கு—அருஞ்
சோபன வாழ்வினுக்கு வழிகாட்டும்!
அன்பர்கள் ஆதரவை யதுசேர்க்கும்—அவர்
அயராத சேவையினுற் றான்மலரும்!
சுந்தரத் தமிழவையிற் றலைநிமிர்ந்தே—அந்த
சுவைபடக் கவிப்புகழ் பெற்றுய்யுமே!
சாஸ்திர நிபுணர்த(ம்) ஆக்கமதை—அன்புச்
சாட்சியோ டாசையாய் பிரசுரிக்கும்
இழகாத கஷ்டத்தின் மத்தியிலும்—அது
இத்தனை சாதனையை செய்ததுவே
பல்லாண்டு பல்லாண்டு வாழியவே—அருள்
பதினாறும் பெற்றுநீ வாழியவே
மலரெல்லாம் சோதிட மலராகுமா—அவை
மலர்பெற்ற மதிப்பினைப் பெற்றேகுமா?...

சோதிடத்தின்...... (34-ம் பக்கத் தொடர்)

நூல்களைப் படிக்கும் வழிமுறைகளையும் அறிந்து கொள்ளமுடியும். இவ்வாறான நடைமுறை வாக்கிய முறைக்கு இருப்பது போலவே கணித முறைகளுக்கும் இருக்கும். கல்லூரி அதிபர்களும், பல்கலைக் கழகங்களும், சமூகச்சேவை ஸ்தாபனங்களும் இந்த விடயங்களில் வெகு கவனம் எடுப்பதும், மேலும் இதை விளம்பரப்படுத்தி இளைஞர்கள் யுவதிகளிடையே இன்று காணப்படும் விரக்தி மனப்போக்கையும், அறியாமை என்ற இருளையும் அகற்ற முன்வர வேண்டுமென்று இச்சபை எல்லோரையும் வேண்டிக் கொள்கிறது.

A. N. G. தேவவினயகம்
அஷ்டஜீவனம் சோதிட நிலையம்
ஆனந்தபுரம்-கிளிநொச்சி

# சோதிடக்கலையின் புனிதத்தன்மை பேணப்படும்

[ இக்கட்டுரையும் இதன்கண் அமைந்துள்ள சோதிட பாட விளம்பரமும்; சென்ற தைமாதச் சோதிடமலரில் சங்கரத்தை சி. சபாநாதன் சோதிடக் கலையின் புனிதத்தன்மை பேணப்படுமா? என்ற தலைப்பில், சோதிடப் புனிதம் பேணப்பட சோதிட நிபுணர்களும் கல்விமான்களும் முன்வருவா[illegible] என்ற வேண்டுகோளிற்கு பதில் தருமுகமாக எழுதியனுப்பப்பட்டது. ]

இந்துசமய அபிவிருத்திச்சபை (Hindu Missionary Council) இலவசமாக சோதிடபாடம் கற்றுத்தர முன்வந்துள்ளது. இஃது இலங்கையின் எல்லாப் பாகங்களுக்கும் எல்லா ஜனங்களுக்கும் உரியதாக இருக்கும். சோதிடத்தில் ஆர்வமுள்ள ஆண்பெண் அனைவரும் சோதிடம் கற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளோ-பல்கலைக்கழகங்களோ அல்லது ஏதாவது மன்றங்களோ வகுப்புகளை ஒழுங்கு செய்து இச்சபைக்கு அறிவித்தல் கொடுத்தால் அந்த இடங்களுக்கு வந்து சோதிடபாடம் கற்றுத்தரப்படும்.

இவ்வாறன நோக்கம் எழுதற்குக் காரணம்:

நாம் சென்ற ஆண்டு இலங்கையின் பலபாகங்களுக்கும் தமிழர் வசிக்கும் இடங்களுக்குச் சென்றிருந்தபோது ஜனங்கள் சோதிடத்தை அறிவதில் எவ்வளவு ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் அங்கே, பல இடங்களில், ஜாதகம் கணிதம் இல்லாத சில வாசகங்களுடன்தான் இருப்பதையும் அவதானித்தேன். காலம் கடந்து போனதினால் தென்னிலங்கைத் தமிழர் தங்களுடன் கொண்டுவந்த சோதிட ஏடுகளையும், கல்விகளையும் மறந்து போயிருப்பதையும், குடியேற்றம் காரணமாக செறிந்து காணப்பட்ட வடக்குக் கிழக்குத்தமிழர் சோதிடக்கலையை அறவே மறந்து போயிருப்பதையும் அவதானித்தேன்.

அநேகமாக ஜனங்களுடைய அபிப்பிராயம், சோதிடம், படிக்க முடியாத ஒரு பாடம் (Hard Subject) என்பதுதான். இது பொய். பிழைப்புக்காக நம்மவர் சோதிடக்கலையை மறைத்துவைத்துக்கொண்டிருக்கிறார்கள். மிக இலகுவில் படிக்கக் கூடிய ஒரு பாடம்தான் சோதிடம். பதினைந்து வயது மாணவன் ஒருவன் சோதிடக் கணக்குகளை இலகுவாக திறமையாக செய்து முடித்துவிட முடியும். வயது முதிர்ந்தவர்களோ சோதிடப் பலன்களை அனுபவத்தோடு சேர்ந்து விபரிக்கும் (Prediction of Astrology) திறமை உள்ளவராக இருக்க முடியும். இந்த நிலையில் வெறும் பிழைப்புக்காக அறங்களை-அறத்தின் பாதைகளை மறைத்து வைத்திருக்கக் கூடாது என்பதே இந்து சமய அபிவிருத்திச் சபையின் நோக்கம்.

இன்று ஜனங்களோ ஏமாற்றத்தின் விளிம்பில் நின்றுகொண்டு தங்கள் முன்னேற்றத்தினை அடைய இடையறாது முயன்று கொண்டிருக்கின்றனர். தங்களின் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் வாழ்வு ஏற்படுவதற்கும்-வாழ்வு இல்லாமல் போவதற்கும் கடவுளே காரணம் என வீண் கற்பனைகளைச் செய்துகொண்டும் வீண் கருமங்களை ஆற்றிக் கொண்டும் இருக்கின்றனர். செவ்வாய் தோஷம் என்ற பிணி இளைஞர்களையும் யுவதிகளையும் வாட்டி வதைத்துக்கொண்டிருக்கிறது. செவ்வாய் தோஷங்களைக் கழிக்க-நிவிர்த்தி செய்ய துர்க்கை ஆலயங்களில் பெண்களும் ஆண்களுமான நீண்ட கியூவரிசைகள். அறத்தின் வழிகளை திருவள்ளுவர் நெறிகளை பின்பற்றி கடைத்தேற வழியறியாது மனித மூடங்களாக, விஞ்ஞான யுகத்தின் எதிரிகளாக இந்த ஜனங்கள் வாழ முற்படுவது ஏனோ!

மனித இனத்தின் அறியாமையை நீக்கவும் உண்மை உணர்வுகளைக் கிளறவும் தெய்வ நெறி யாதெனப் புரிந்து கொள்ளச் செய்யவும் குருபக்தியை நெறிப்படுத்தவும் செவ்வாய் தோஷம் எனின் யாது! அதை நீக்கி திருமணம் செய்யும் மார்க்கம் யாது! என அறிந்துகொள்ளச் செய்யவும் இந்துசமய அபிவிருத்திச் சபை மேல் நோக்கம் கொண்டுள்ளது. இஃது அன்புப்பணி அறப்பணி-அருள்பணி என மேலோர் அறிவர். இச்சபையின் பணிகளை அறிவுள்ளோரும் சாஸ்திர மேதைகளும் ஏற்றுக்கொள்ளுவீர்களாக.

பாடத்திட்ட முறையில் சோதிட வகுப்பு நடத்தப்படும். ஒரு வகுப்பு 45 நிமிடங்கள் மட்டும்; இவ்வாறு மூன்றுநாள் வகுப்பை ஒருவர் பின்பற்றினால் போதும். ஜாதகம் ஒன்றை தாமே கணித்து எழுதும் திறமையையும் சோதிட

(33-ம் பக்கம் பார்க்க)

## புத்திர பாக்கியம் உண்டாக சாந்தி பரிகாரங்கள் என்ன?
## சந்திர கிரகணத்துக்கும் அமாவாசைக்கும் என்ன வித்தியாசம்?
## லாபாதிபதியும் விரயாதிபதியும் கூடினுல், பார்த்தால் பலன் என்ன?

எஸ். சுலோசஞ, காரைநகர்.

சந்:- புத்திரபாக்கியமுண்டாக என்ன சாந்தி பரிகாரங்கள் செய்யவேண்டும்.

நிவி:- புத்திரதோஷமுள்ளவர்கள் பொதுவாக தெய்வ வழிபாடுகள், புண்ணியஸ்தல யாத்திரைகள் என்பன செய்தல் நன்று. மேலும் ரதஸப்தமிவிரதம், சந்தானகோபாலரை பிரதிஷ்டை செய்து பூசித்து வழிபடல், கிருஷ்ண மந்திரம் ஜபித்தல், இராமாயணம் படித்தல் கேட்டல், கேட்கச்செய்தல் ஆகியன புத்திரதோஷ பரிகாரங்களாகும்.

மதுரா, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

சந்:- எனது ஜாதகத்தில் 8ல் துலாத்தில் செவ்வாய் சனியுடன் கூடியுள்ளது. நான் செவ்வாய் தோஷமுடைய ஆணையா மணக்கவேண்டும்?

நிவி:- துலாராசி சரராசியாகும். சரராசியில் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை. ஆகையால் நீங்கள் செவ்வாய் தோஷமில்லாத ஆணை மணப்பதில் தவறில்லை.

## சந்தேக நிவிர்த்தி 'உத்தரம்'

து. துரைராசா, யாழ்ப்பாணம்.

சந்:- தங்கள் புதுவருடப் பஞ்சாங்கம் 33-ம் பக்கத்தில் சுக்கிரனை 5-ம் வீட்டில் வைத்துப் பலன் கூறப்பட்டுள்ளது. இது சரியோ அல்லது தவரு என்பதை அறிய ஆவல்.

நிவி:- புதுவருட ஜாதகத்தில் சுக்கிரன் மேடத்தில் தான் இருக்கவேண்டும். தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுவிட்டது. ஆயினும் பாவநிலைப்படி பலன் ஆராயும்போது சுக்கிரன் மேடத்தில் 8 பாகையில் இருப்பதால் (6-ம் பாவ மத்தி ஏறக்குறைய 18 பாகையில் வருவதால்) அவர் 5-ம் வீட்டுக்குரிய பலன்களையே வழங்குவார்.

செல்வி ஏ. சீ. புஷ்பம், தோலகட்டி, வசாவிளான்.

சந்:- சந்திரகிரகணத்துக்கும் அமாவாசைக்கும் என்ன வித்தியாசம்?

நிவி:- சூரியனைப் பூமி சுற்றிக்கொண்டு வருகிறது. பூமியைச் சந்திரன் சுற்றிக்கொண்டிருக்கிறது. இவ்வாறு வருகையில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் ஒரு நேர்கோட்டில் வரும்போது அமாவாசை நிகழும். ஒரு நேர்கோட்டில் சூரியனுக்கும் சந்திரனுக்குமிடையில் பூமிவரும்போது பௌர்ணமி நிகழும். பௌர்ணமி தினத்தில் சூரிய ஒளியினுல் ஏற்படும் பூமியின் நிழல் சந்திரனை மறைப்பதால் சந்திரகிரகணம் உண்டாகிறது. அமாவாசைத் தினத்தில் சூரியனுக்கும் பூமிக்குமிடையில் சந்திரன் வந்து பூமியிலுள்ளோர்க்கு சூரியனை மறைப்பதால் சூரியகிரகணம் உண்டாகிறது.

இதுபற்றிய விளக்கமான படங்களுடன்கூடிய கட்டுரை 1979-ம் ஆண்டு சோதிடமலர் 2ல் இதழ் 1, 4, 6ல் வெளியிடப்பட்டுள்ளது.

து. துரைராசா, யாழ்ப்பாணம்.

சந்:- ஒரு குழந்தை பிறக்கும்போது கொடி சுற்றிப் பிறந்தால் ஏதேனும் கிரகக்கோளாறு காரணமா அல்லது இயற்கைக் கோளாறுகளா என அறிய ஆவல். இதற்கு என்ன பலன்?

நிவி:- மேடம், இடபம், சிங்கம் இவற்றுள் ஒன்று லக்கினமாகி அதில் சனி செவ்வாய் இருக்க அல்லது பார்க்க பிள்ளை கொடிசுற்றிப் பிறக்கும். இராகு கேது இருப்பினும் இப்படி ஏற்படலாம். கொடிசுற்றிப் பிறப்பது கோத்திரத்திற்குக் கூடாதென்பர். இதற்குப் பரிகாரம் சனியினுல் ஏற்பட்ட தோஷத்துக்கு விஷ்ணுவுக்கும் செவ்வாயினுல் ஏற்பட்ட தோஷத்துக்கு சுப்பிரமணியருக்கும் இராகு கேதுவினுல் ஏற்பட்ட தோஷத்துக்கு நாகம்மாளுக்கும் பிள்ளையை விற்றுவாங்கலாம்.

இ. கந்தையா, திருகோணமலை.

சந்:- லாபாதிபதியும், விரயாதிபதியும் கூடியிருந்தால் – ஒருவரையொருவர் பார்த்தால் என்ன பலன் நிகழும்?

நிவி:- இப்படியான அமைப்புள்ள ஜாதகருக்கு நற்பலன்களே நடக்கும்.

தன, குடும்ப, வாக்கு ஸ்தானமாகிய 2-ம் வீட்டை லக்கினமாகக்கொண்டு பார்க்கும்போது 11,12-ம் வீடுகள் முறையே 10,11-ம் வீடுகளாக வரும்.

கர்மாதிபதியாகிய 10-ம் வீட்டோனும், லாபாதிபதியாகிய 11-ம் வீட்டோனும் ஒன்று கூடும் போது நற்பலன்களே உண்டாகும்.

க. கிருஷ்ணசாமி, மட்டுநகர்.

சந்:- இராசிநிலைக்கும் பாவநிலைக்கும் வித்தியாசமென்ன? இது பலன்களைப் பொறுத்து எவ்வாறு அமையும்.

நிவி:- ஒரு கிரகம் எந்த இராசியில் இருக்கிறதென்பதை இராசிநிலை காட்டும். அந்தக்கிரகம் எத்தனையாம் வீட்டில் இருக்கிறது என்பதை பாவநிலை காட்டும். கிரகங்களை இராசிப்படி பார்க்கும்போது இயற்கைச் சூழலையும், உடற்கூறுகளின் பேதாபேதங்களையும், பிறப்புவாசிக் குணங்களையும் அளவிட முடியும்.

பாவநிலைப்படி ஒருவரின் செயல்முறை வளங்களையும் உலகியல் அபிவிருத்தியையும் நாம் அளந்தறியலாம். உதாரணமாக இலக்கின ராசியில் குரு இருப்பின் நல்ல குடும்பத்தில் நல்ல தலைமுறையில் உதித்தவராகவும், உடல்வளம் நிறைந்தவராகவும், சிரத்தையுடையவராகவும் இருப்பர். இதே குரு பாவநிலைப்படி 12-ம் வீட்டில் இருக்கப் பெறின் முன் கூறப்பட்ட பலன்கள் குன்றி தமது பிறப்புவாசியால் உண்டான நற்பண்புகளை வளர்க்கமுடியாது இழந்துவிடுவதைக் காட்டும்.

க. செவ்வேள், அட்டன்.

சந்:- இலங்கையில் பொதுநேரம் உண்மை நேரத்திலும் பார்க்க 10 நிமிடம் கூட உள்ளது. நிரட்சரேகை 80 பாகைப்படி இலங்கையின் உண்மை நேரம் அதிகாலை 4-40 ஆக இருக்கும் போது மணிக்கூட்டு நேரம் 4-50 காட்டுகிறது. எனவே லக்கினம் கணிப்பதற்கு 10 நிமிடம் கழிக்கவேண்டுமா?

நிவி:- இலக்கினம் கணிப்பதற்கு பஞ்சாங்க முறை அனுஷ்டிக்கும்போது 10 நிமிடம் கழிக்கத் தேவையில்லை. காரணம் சூரிய உதயம் பொது நேரப்படி குறிக்கப்பட்டுள்ளது. எனவே ஜனன நேரத்தையும் பொதுநேரத்தில் வைத்துத்தான் உதயாதி சென்றநாடி விநாடி எடுக்கவேண்டும். நிரயனகணித அட்டவணை உபயோகிக்கும்போது 10 நிமிடம் கழித்துக் கணிக்கவேண்டும்.

---

சந்தேகங்களைக் கேட்போர் போஸ்றகாட்டில் மட்டும் எழுதி கீழுள்ள விலாசத்தை வெட்டி ஒட்டி அனுப்பவும். ஒரு போஸ்ற் காட்டில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

''சந்தேக நிவிர்த்தி'' சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

## மனங்கலங்கி வருந்துகின்றோம்!

இரத்தினமாய் எம்மத்தியிலே ஒளிவீசி நின்று; இந்தத்
தரணியெல்லாம் சைவமணம் கமழ; ஆங்கே,
சைவமதம் தழைத்தோங்கத், தமிழ்முழக்கம் செய்துநின்ற,
சைவமணி; சித்தாந்தச் செம்மல்; செஞ்சொல்வாருதி என்றுஎல்லாம்
பட்டங்கள் பலபெற்றுப் பெருமையோடு — நம்மூராம்
காரையம்பதியிற் தோன்றி, வாழ்ந்த, உத்தமனாய்;
வித்தகனாய்; வித்துவானாய் ஆனஎங்கள் நல்லாசான் சபாரத்தினமே!
நற்குருவாய் நமக்கெல்லா வழிகாட்டி நின்றீரையா.

எத்தனையோ விதமான பிரச்சனைகள் நம்மூரிற் தோன்றினாலும்
அத்தனைக்கும் அதற்கதற்காய் ஏற்றதான தீர்வுகளை ஆய்ந்துகூறி
அடலேறு சிங்கம்போல் அயராது செயலாற்றி;
திடமான மனதோடு துணிவாக முன்னின்று;
செயற்கரிய பலசெயல்கள் செய்தீரையா — இனி
எமக்கெல்லாம் இவ்வரிய பணியனைத்தும் யார்செய்ய வல்லாரென்று
இருந்தேங்கி, மனங்கலங்கி வருந்துகின்றோம்;
இயம்பத்தான் முடியாமல் ஏங்குகின்றோமே.

— பொ. சிவகாமி, சங்கானை;

அண்மையில் மறைந்த முது பெரும் தமிழ் அறிஞரும் இந்துசமய பிரசாரகருமாகிய ''சைவமணி'' வித்துவான் மு. சபாரத்தினம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இக்கவிதை பிரசுரமாகிறது.

# சித்திரை மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

14-4-89 – 14-5-89

சூரியன்:- 13-4-89 இரவு 9-40
மேடராசிப் பிரவேசம்.
14-4-89 உதயம் காலை 6-04
14-4-89 உச்சம் பகல் 12-11
14-4-89 அஸ்தமனம் மாலை 6-17
29-4-89 உதயம் காலை 5-58
29-4-89 உச்சம் பகல் 12-08
29-4-89 அஸ்தமனம் மாலை 6-17

சந்திரன்:- 21-4-89 பூரணை காலை 8-44 வரை
5-5-89 அமாவாசை மாலை 5-17
6-5-89 சந்திரதரிசனம்

## கிரகங்கள்

புதன்:- சென்றமாதம் அஸ்தமனமாயிருந்த இக்கிரகம் 17-4-89 இல் மேற்கில் உதயமாகும். அதன்பின் சூரியாஸ்தமனத்தின் பின் மேற்கு வானத்தில் பார்க்க முடியும். 1-5-89 இல் சூரியனிலிருந்து கூடியதூரம் பிரிந்து 21 பாகை உயரத்தில் மேற்குவானில் காணப்படும். பின் படிப்படியாக உயரம் குறையும். 14-5-89 இல் வக்கிரகதியில் செல்லத் தொடங்கும். 24-4-89 இல் இடபராசியிற் பிரவேசிக்கின்றது.

சுக்கிரன்:- சென்றமாதம் முதல் அஸ்தமனமாயிருக்கும் இக்கிரகம் 5-5-89 இல் மேற்கில் உதயமாகும். மாதமுடிவில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 10 பாகை உயரத்திற் காணப்படும், 6-5-89 இல் இடபராசியில் பிரவேசிக்கின்றது.

செவ்வாய்:- மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 57பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 45 பாகை உயரத்திற் காணப்படும். 18-4-89இல் மிதுனராசியிற் பிரவேசிக்கின்றது.

வியாழன்:- மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 47பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 19 பாகை உயரத்திற் காணப்படும். இடபராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

சனி:- மாத ஆரம்பத்தில் சூரிய உதயத்தின் உச்சிக்கு மேற்கே 9 பாகை சரிந்து காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 39பாகை சரிந்து காணப்படும். 25-4-89 முதல் வக்கிரகதியில் செல்லும். இம்மாதம் தனுராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

யுரேனஸ்:- இம்மாதம் வக்கிரகதியில் தனுராசியில் சஞ்சரிக்கின்றது.

நெப்டியூன்:- தனுராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 16-4-89 இல் வக்கிரகதியில் செல்லத் தொடங்கும்.

புளூட்டோ:- வக்கிரகதியில் துலாராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

## சமாகமங்கள்

27-4-89 உதயத்துக்கு முன் சந்திரனுக்கு வடக்கு சனி 4½ பாகை.

4-5-89 இரவு 10 மணிக்கு வியாழனுக்கு வடக்கு ரோகிணி நட்சத்திரம் 5 பாகை. வியாழன் அஸ்தமனமாகுமுன் அவதானிக்கவும்.

6-5-89 காலை சந்திரனுக்குத் தெற்கு சுக்கிரன் 5½ பாகை. சந்திரதரிசனத்தின்போது பார்க்கவும்.

6-5-89 பின்னிரவு சந்திரனுக்கு தெற்கு புதன் 3½ பாகை. முதல் நாள் சந்திரதரிசனத்துடன் அவதானிக்கவும்.

7-5-89 நண்பகல் சந்திரனுக்கு தெற்கு வியாழன் 5½ பாகை. சூரிய அஸ்தமனத்தின்பின் பார்க்கவும்.

9-5-89 காலை சந்திரனுக்குத்தெற்கு செவ்வாய் 2½ பாகை. சூரிய அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

# சோதிடத்தின் மணி விளக்கு

— பருத்தித்துறையூர் செ. இராசநாயகம் —

மாந்தர் கரங்களிலே மலர்ந்திட்ட வண்ணமலர்
சோதிடத்தின் மணிவிளக்கு சோதிடமலராவாள்

பன்னிரெண்டாண்டிலவள் பொலிவுடன் அடிவைத்தாள்
பண்பான தமிழ்மொழியில் நடைஅவள் பயின்றுவந்தாள்
மூத்ததமிழ் பேசிப் பூரிப்பால்ப் புன்சிரித்தாள்
முத்தான இலக்கியத்தைக் கண் போலக்காத்து வந்தாள்.

தெளிவாகக் கருத்தையவள் தெம்புடன் விளக்கி வைத்தாள்
தெரியாத பல கருத்தைப் பக்குவமாய்க் கூறிவைத்தாள்
மலர்ந்திட்ட மாமலராள் வழிகாட்டி வைத்திடுவாள்
முத்தான வித்தாக நெஞ்சமதில் வாழ்ந்திடுவாள்.

சோதிடத்தின் ஆழ்ந்த கருத்தினை சோதிடமலர் சொல்லிவைத்தாள்
சொல்லுக்குச் சொல்லாக உண்மைதனை விளக்கி வைத்தாள்
தீராத துன்பம் தீர நல்ல பிரீதிகள் கூறி வைத்தாள்
தொடரும் பல சந்தேகத்தைச் சுவையாகத் தீர்த்து வைத்தாள்.

வாழி நீ வாழ்க வென்று வையகத்தில் வாழ்த்துகின்றேன்
வெற்றி நடைபோடும் உன்னை உளமார வாழ்த்துகிறேன்
நெற்றியிற் திலகமிட்டு உன்னைக் களிப்போடு வாழ்த்துகிறேன்
நீதியின் செங்கோலை உன் பாதம் பணிக்கின்றேன்.

# மேட லக்னப் பெண்கள்

இராசி மண்டலத்தில் தலையாயது மேடம். இது ஆண்ராசியாகும், ஆர்ப்பரிக்கும் செவ்வாயினது வீடாகும். மேடத்தை லக்கினமாகக் கொண்டவர்கள் ஆண்மைக்குணங்களும், மிடுக்கு நடையும், மிக்க திறமையுமுள்ளவர்களாகவும் இருப்பர். வீரம், வெற்றித்தன்மை, திடீர்க்கோபம், வைராக்கியம் ஆகியவற்றிற்கு துணையாக விளங்கும் மேடம் இல்லற வாழ்க்கைக்கும், இல்லறக் கிழத்தியின் நலத்துக்கும் ஏற்றதாக இல்லை. மேடலக்ன மங்கையர் தமது மனம்போல் மணாளனைத்தேடிக் கொள்கின்ற இயல்பினராகவும், பெற்றோரின் எண்ணங்களை எதிர்ப்பவர்களாகவும் இருப்பர். ஆண்களுக்கு அடங்கிப் போகின்ற இயல்புகள் இல்லாமல் எடுத்தெறிந்து பேசுவர். எதையும் தாங்கும் சக்தியும் உடையவர். அன்புக்கணவன்வழி நடக்க வேண்டும் என்ற நற்குணங்கள் நெஞ்சத்தில் நிற்பது குறைவு, நெறிகெட்ட வழிகளில் நடக்கும் நெஞ்சுறுதியும் உண்டாகும். கன்னியர் வாழ்க்கைக்கு களத்தை ஏற்படுத்தும் ராசியென மேடத்தைக் கூறவேண்டும். இதேபோல மேடத்தில் சந்திரன் இருந்தாலும் இல்வாழ்க்கைக்கு இடைஞ்சல்களைத் தருகின்ற நிகழ்வுகள் ஏற்படலாகும்.

# ஆய்வு மன்றம்

T. M. சரவணன், வேலணை.

தங்களுக்கு தொழில்ஸ்தான அதிபன் தன் வீட்டைத் திருஷடிப்பது வியாபாரத்துறை சிறக்க ஏதுவானதாக அமைகின்றது. தற்போதுள்ள காலம் நன்மையானதே.

சே. மோகனராணி, ஆரையம்பதி, காத்தான்குடி.

உங்கள் ஜாதகப்படி தற்போது ராகு மகா தசையில் ராகுபுத்தி நடைபெறுகிறது. இது 1990-6-18 வரை நிகழும். இக்காலத்துள் தொழில் வாய்ப்பு ஏற்பட இடமுண்டு. 10-ம் அதிபதி சனியாகையால் பொதுமக்களுடன் தொடர்புபட்ட வியாபாரம் சம்பந்தப்பட்ட கூட்டுத் தாபனங்களில் தொழில் அமையலாம்.

எஸ். பாலா, கடல்முக வீதி, திருகோணமலை.

உங்களுக்கு இப்போது சந்திர தசையில் கேதுபுத்தி நிகழுகின்றது. இது 1989-6-13 வரை நடக்கும். அதன்மேல் சுக்கிர புத்தியில் தனியார் கம்பனியில் தொழில் பார்க்கும் வாய்ப்புகள் கிடைக்கும்.

10-ம் வீடு பாபகர்த்தரி யோகம் பெறுவதால் சொந்தத் தொழிலோ அல்லது பங்குதாரராக இருப்பதோ அதிகம் பயன்தருவதற்கில்லை. பிறிதொருவரின் கீழ் தொழில் செய்தலே நன்மை யளிக்கக் கூடியதாக இருக்கும்.

தற்போது நடைபெறும் சந்திரதசையில் சந்திரன் கேதுவின் நட்சத்திரமாகிய மூலத்தில் இருப்பதால் இவருடைய தசாகாலம் அதிகம் நற்பலன் தருவதற்கில்லை. சந்திரதசை வெள்ளி புத்தி காலத்தில் திருமணம் கைகூடலாம். செவ்வாய் தசை சந்திர தசையிலும் பார்க்க கூடுதல் நன்மைதரும்.

வரவிருக்கும் வாழ்க்கைத் துணைவர் நற்குண முள்ளவராகவும் பொது நிறத்தையுடையவராகவும் தொழில் அந்தஸ்து உள்ளவராகவும் சொந்தமற்றவராகவும் அமைவார். திருமணத்தின் பின் குடும்ப வாழ்க்கை நன்கு அமையும்.

அ. இந்திராணி, மானிப்பாய்.

உங்கள் ஜாதகப்படி 1990-ம் ஆண்டின்மேல் மறுமணம் நடைபெற வாய்ப்புகளுண்டு.

ஐ. வாசுதேவன்,
தெண்டாயுதபாணி கோவில், பொகவந்தலாவ.

உங்களுக்கு 1989-5-28 வரை ராகுதசை சனி புத்தி நடைபெறும். அதன்மேல் புதன் புத்தி ஆரம்பிக்கும். இப் புதன் புத்தி காலத்தில் கல்வித் தகைமைக்கேற்ப தொழில் கிடைக்கும்.

ஆறுமுகம் கோமதி,
கல்குடா வீதி, வாழைச்சேனை.

உங்களுக்கு 1988-7-28 முதல் குருதசை சனி புத்தி நடைபெறுகிறது. இக்காலத்தில் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். அனேகமாக தனியார் துறையில் தொழில் கிடைக்கலாம்.

வ. குமரேசமாணிக்கம், புகையிரத நிலையம், பளை.

உங்கள் மகனின் ஜாதகப்படி 1990 ஏப்பிரில் மாதத்தின்மேல் அரசாங்க உத்தியோகம் கிடைக்க இடமுண்டு.

பத்மசோதி தவராசா, கொக்குவில் கிழக்கு.

உங்கள் ஜாதகத்தில் சனி 2-ம், 7-ம், 11-ம் வீடுகளைத் திருஷ்டிப்பதால் விவாக விடயத்தில் தாமதமும் குழப்பமும் ஏற்பட்ட வண்ணமிருக்கும். சனிக்கு விசேட பிரீதி, வழிபாடு செய்து வரல் நன்று. ஏறக்குறைய 32 வயதளவிலேயே விவாகம் நடைபெற இடமுண்டு. விவாகம் சொந்தமற்ற இடத்திலேயே கைகூடும்.

சி. சுந்தரமூர்த்தி, மெயின் வீதி, களுவாஞ்சிக்குடி.

உங்கட்கு, சூரியன் ஆறுதிபதியுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் இத்தசாகாலம் நோயாளியாகவே இருக்கவேண்டி நேரிடும். அதற்கு முன் வெள்ளிதசை கேதுபுத்தி காலத்தில் கேது சந்திரனுடன் சேர்ந்திருப்பதும் நோயேற்படுவதற்கு காரணமாகின்றது. சூரியன் தசைமுடிய 89 செப்டம்பரின் மேல் சுகம் காணலாம்.

எஸ். வி. சிவானந்தன்,
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

உங்களுக்கு 28 வயதளவில் திருமணம் நடைபெற வாய்ப்புகளுண்டு.

செ. அ. லோகேஸ்வரன், தொண்டமானாறு.

உங்களுக்கு இப்போது சனிதசை வெள்ளி புத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது 1990 செப்டம்பரில் முடிவடையும். இதற்குள் விவாகம் நடக்கப் பலனுண்டு. குடும்ப வாழ்க்கை சந்தோஷகரமாக அமையும்.

வ இந்திரன், 3-ம் குறிச்சி, காரைதீவு.

தங்களது ஜாதகப்படி தற்போது வெளிநாட்டுப் பயணங்கள் சாத்தியமாக இல்லை.

திருமதி ம. சிவபாலன்,
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

உங்கள் ஜாதகத்தில் புத்திரஸ்தானத்தில் சனி இருப்பது புத்திர தோஷத்திற்கு ஏதுவாகும். ஆயினும் புத்திரகாரகன் 2-ல் இருப்பதால் நாகம்மாள் வழிபாடு செய்துவர புத்திர பாக்கியம் கிட்டலாம்.

அ. கதிரவேலு,
புதிய சோனகதெரு, யாழ்ப்பாணம்.

உங்கள் ஜாதகத்தில் குடும்பஸ்தானத்தில் கேது இருந்து சனியின் பார்வையைப் பெறுவதால் குடும்பப் பிரச்சனை இருந்த வண்ணமே இருக்கும். தற்போது ஏழரைச்சனி நிகழ்வதும் நிம்மதியின்மைக்கு மேலும் காரணமாகின்றது. வயோதிபர் இல்லத்திற்குச் செல்வது நன்று.

அ. லோகேஸ்வரன், தொண்டமானாறு.

சந்திரனைச் சனி நோக்குவதாலும், சந்திரன் கேதுவுடன் இருப்பதாலும், தங்களுக்கு கேது தசை புத்தி காலங்களில் தேக சுகக்குறைவைக் காட்டும். புதன் தன்னுடைய தசை புத்திகாலங்களில் நற்பலனளிக்கும். வியாழன் நீசமடைந்திருப்பினும் அதன் பார்வைகளுக்குப் பலனுண்டு.

கு. ஜெகதீஸ்வரன், கொக்குவில் கிழக்கு.

உங்கட்கு உயர்கல்வி வாய்ப்புகளுண்டு. கல்வி சம்பந்தமாக கடல்கடந்து செல்லும் சாத்தியம் தற்போதைக்கு இல்லை. 27 வயதின் மேல் தூர தேசப் பிரயாணம் அனுகூலமாகும்.

கே. ஜெயம், தும்பளை, பருத்தித்துறை.

உங்கள் ஜாதகப்படி புதன் வக்கிர அஸ்தமனமடைந்திருந்தாலும் சூரியனுடன் சேர்வதால் கல்வியைக் கொடுக்கும். நாலாதிபதி பாவநிலைப்படி 7ல் இருப்பதால் பட்டப்படிப்பிற்கு இடமுண்டு.

கே. பத்மா, தும்பளை, பருத்தித்துறை.

தங்கள் ஜாதகரீதியில் திருமணம் நடைபெறுவது சாத்தியக் குறைவாகவே தென்படுகிறது. ஆயினும் குடும்பத்தானதிபன் களத்திரகாரகனுடன் சேர்ந்து 9ல் இருப்பதால் காலங்கடந்து அந்நிய தேசத்தில் விவாகம் நடைபெறலாம்.

---

குறிப்பு:- ஆய்வு மன்றப் பகுதிக்கு விண்ணப்பம் செய்வோர் பிறந்த திகதி நேரம் (மணி. நிமி) இரவு பகல் முதலியவற்றை விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். உங்கள் கஷ்டங்கள் பிரச்சினைகளைத் தெளிவாகத் தனியாக எழுதி இப்படிவத்துடன் இணைத்து 'சோதிடமலர்' ஆய்வு மன்றம், திருக்கணித நிலையம், மட்டுவில் சாவகச்சேரி. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவம் பூரணமாக நிரப்பப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்படா. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படியே பதிலளிக்கப்படும். ஒரு விண்ணப்பத்தில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

பிறந்த திகதி: ஆங்கிலம் ..................................................

தமிழ் ..................................................

,, நேரம்: ..................................................

,, இடம்: ..................................................

நட்சத்திரம்: ..................................................

கிரகநிலை

ஜனனகாலம்........................ தசை இருப்பு

வரு.........மா.........நாள்.........

..................................................
கையொப்பம்

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.


நீங்கள் வளரும்போதே உங்கள் சேமிப்பு வளர்வதை உறுதி செய்யுங்கள்.

மாதாந்தம் சிறுதொகை சேமித்து
குறுகிய காலத்தில்
பெருநிதி பெற விரும்புகிறீர்களா?

# "ஷப்ரு"

## வழிகாட்டுகிறது.

ஷப்ருவின் உழைக்கும்போதே சேமிக்கும் திட்டத்தில்
இன்றே சேருங்கள்!

| ரூபா | 1 வருடம் 12% | 2 வருடங்கள் 14% | 3 வருடங்கள் 16% |
|---|---|---|---|
| 100/- | 1280/93 | 2783/41 | 4643/27 |
| 200/- | 2561/86 | 5566/82 | 9286/54 |
| 300/- | 3842/79 | 8350/23 | 13929/81 |
| 400/- | 5123/72 | 11,133/64 | 18573/08 |
| 500/- | 6404/65 | 13917/05 | 23,216/35 |

மேலதிக விபரங்களுக்கு:

**"ஷப்ரு" யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்**

61, நியு புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி: 589310, 500576.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073.


Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam. Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280